www.tamilarangam.net

"SAMAR"

# சமர்

இதழ்:- 23

அரசியற் தத்துவார்த்த விமர்சன ஏடு

உள்ளடக்கம்

கேள்விக்கு உள்ளாக்கப்படும்போது மறுக்கப்படும் கருத்துச்சுதந்திரம்

பக்:- 44



ஓவியம்:- ஓவியர்:- ஆ இராசையா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ "கருத்து மக்களை பற்றிக்கொண்டால் மாபெரும் சக்தியாக உருவாகும்"

**அனைத்துவித திரிபுவாதங்களுக்கும் எதிராக சமர்**

இது ஒரு மக்கள் பத்திரிகை




| உள்ளே | இலக்கம் |
|---|---|
| தங்கதுரை | 04 |
| டயானா | 05 |
| இந்தியா வானரங்கள் | 08 |
| போல்பொட் | 10 |
| சுரண்டும் உரிமை | 10 |
| விமலேஸ் | 11 |
| அமெரிக்கா | 12 |
| சுதந்திரம் கோரும் | 14 |
| சிவத்தம்பி | 21 |
| ஐ.பி.சி (புலம்) | 24 |
| இன்று தேவை | 26 |
| பேரினவாதம் | 29 |
| எதிரியுடன் கூட்டு | 32 |
| ஆயிரம் ஆண்டு மேற்க்கு | 36 |
| சரிநிகரில் உள்ள | 41 |
| தலித்தியம் | 62 |
| பிரான்சில் வர்க்கப்போர் | 66 |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிகா இனவாதத்துக்கு எதிராக விழித்துக் கொண்டுள்ளாராம்:

## சரிநிகரில், ''கண்டபாவனையில் கொண்டை முடியும்'' நாசமறுப்பான்

சரிநிகர் 133 இல் (ஒக்-நவம்பர் 1997)
சரிநிகரின் முக்கியமானவரும் சரிநிகரின் அரசியலைத் தீர் மானிப்பவருமான நாசமறுப்பான். "மூன்றும் மூன்றும் முடியும்" என்ற கட்டுரையில் இனவாதத்தை மூடி மறைத்து மீளவும் முருங்கை மரத்தில் ஏறும் வேதாளமாக மாறிய விந்தையைப் பார்ப்போம்.



ஜனாதிபதி சந்திரிகா

"ஆக மொத்தத்தில் அரசின் திட்டங்கள் புலிகளிடம் பெரிதாக வெற்றி பெறவில்லையென்றே சொல்ல வேண்டும்
இது ஜனாதிபதிக்கு ஓரளவு புரிந்திருக்கிறது. தனது மதிமந்திரிகளதும், சரத் முனசிங்க போன்ற முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்கும் இராணுவப் பேச் சாளர்களையும் நம்பினால், தனது நிலை அம்போ ஆகிவிடும் என்பது அவருக்கு ஓரளவு தெரிந்திருக்கிறது. இதனால்தான் அவர் பேச்சுவார்த்தை பற்றி எந்த நிபந்தனைகளையும் விதிக்காமல் பூடகமாக அறிவித்திருக்கிறார்.

உண்மையில் இவ்வாறான புரிதல் ஒரு நல்ல சகுனம் தான். ஜனாதிபதி இந்த விடயத்தை தீவிரமாக யோசித்து யுத்த நிறுத்தத் துக்கு இறங்குவது பற்றி பேசுவது பயனுள்ளதாக இருக்கும்." என நாசமறுப்பான் மக்களை நாசமாக்க இரண்டரை வருடத்துக்கு முன் சந்திரிகா ஆட்சிக்குவந்தபோது என்ன எழுதினாரோ, அதையே மீளவும் நாசூக்காக முன்வைத்துள்ளார். இன்று சந்திரிகையின் ஜனநாயகத்தில், முற்போக்கில் கொஞ்சப் பேர், சந்திரிகா தீவிரமாக யோசிக்க உதவி பிழைக்க உதவிய அன்றைய சரி நிகர் கட்டுரைகள் போல், இன்று எஞ்சியோரை சந்திரிகாவின் பின் அணிதிரள, முற்போக்கு சந்திரிகையை ஆதரிக்க மறைமுகமாக கட்டுரை கோருகின்றது. ஏன் நாசமறுப்பானே சிலவேளை சந்திரிகா தீவிரமாக யோசிக்க ஆலோசகராகி விடுவாரோ என்ற ஐயத்தை கட்டுரை விட்டுச் செல்கிறது.

சந்திரிகா என்ற தனிநபர் எப்போதும் நல்லவர், அவர் உண்மையானவர், நம்பிக்கையானவர், அவர் ஜனநாயகத்தை நேசிப்பவர், அவர் ஓர் இனவாதியல்ல எனப்பலப்பலவாக வித்தைகாட்டி பலரை இன வாதியாக்கி பின் அவர்களே இனவாதத்தை பாதுகாக்க புறப்பட்ட பின், மிகுதிப் பேரையும் அதற்குள் சிதைக்க எண்ணியதன் வெளிப்பாடு தான் நாசமறுப்பானின் சந்திரிகா பற்றிய கற்பனைச் சித்திரம்.
இரத்வத்தை, சரத் முனசிங்க போன்றவர்கள் தான் சந்திரிகாவை இனவாதியாக நடத்துவதாகக் காட்டி, அதை உடைத்து வெளியில் வருவார், வருகிறார், வந்திட்டார் என சினிமாத்தனம் செய்வதும் சுத்த மோசடித்தனமாகும். ஓர் அரசு, அதன் அடிப்படை என அனைத்தும் சில அடிப்படை நிபந்தனைகளைக் கொண்டது. இந்த அரசு என்பது ஏதோ ஒரு வர்க்கத்திற்கு கருவியாகவே செயல்படுகின்றது. செயல்பட முடிகின்றது. ஒருக்காலும் இதற்கு வெளியில் எந்த தனிநபரோ, குழுவோ செயல்பட முடியாது.

எந்த வர்க்கத்தை பிரதிநிதிப்படுத்துகின்றனரோ அதற்கு மட்டுமே தலைமை தாங்க முடியும். இங்கு அரசு என்பது ஒரு வர்க்கத்தின் பிரதிநிதியாகத்தான் எப்போதும் இருக்க முடியும். யார் தலை-கீழாக நின்றாலும் என்ன தான் செய்தாலும் சரி தனது வர்க்கத்துக்கு வெளியில் ஒருக்காலும் சேவை செய்ய முடியாது. சிலவேளை நாய் வாலைக்கூட நிமிர்த்தி விட முடியும். ஆனால் ஒருக்காலும் அரசு வர்க்கத்துக்கு வெளியில் இயங்க முடியாது.
இலங்கை அரசு தரகு முதலாளித்துவ அரை நிலப்பிரபுத்துவத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அரசாக உள்ளது. இவ்வரசு ஏகாதிபத்தியத்தை திருப்தி செய்யும் அரசாக உள்ளது. இந்த நிலையில் இதை செம்மையாக பிரதி செய்ய இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு அதன் அச்சில் தனது ஆட்சி அமைப்பை, அரசு வடிவத்தை கொண்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த அரசு வடிவம் மாறாத வரை, இந்த என்றென்றைக்கும் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டுதான் உயிர்வாழ முடியும். இது இலங்கையின் இன்றைய நாளைய யதார்த்த நிலை. இந்த அரசியல் அடிப்படையை யார் பார்க்க மறுத்து கைவிட்டு செல்ல முனைகின்றனரோ, அவர்கள் உண்மையில் மறைமுகமாகவேனும் இனவாதத்துக்கு உதவுபவர்களாகவே இருக்கின்றனர். இருப்பர்.

பாட்டாளி வர்க்கம் ஆட்சி அமைக்கும் போது மட்டும் தான் உண்மையில் இனவாதம் கைவிடப்படுவது மட்டுமன்றி தொடர்ச்சியாக இனவாதத்துக்கு எதிராகப் போரிடும். இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில் இலங்கை போன்ற நாடுகளில் முதலாளித்துவ புரட்சி நடக்க முடியாது என்பதால் இனவாதம், மற்றும் சமுதாயப் பிளவுகளை முன்வைத்துத்தான் அரசு நீடிக்க முடியும்.

இந்த நிலையில் எப்படி சந்திரிகா, பீரிசு, கதிர்காமர் போன்றோர் இனவாதத்தைக் கைவிட்டு வருவார்?

சிலவேளைகளில் மூடி மறைத்த இனவாதம் மூலம் அற்ப தீர்வுகளை முன் வைக்கலாம். ஏனெனில் போராட்டங்கள், எழுச்சிகளை தடுக்க அற்ப சலுகைகளை வீசி எறிந்து போராட்டத்தை விலைக்கு வாங்குவதன் மூலம் இனவாததை குறைத்தோ அல்லது இல்லாது போன்றோ நடிக்க முயலலாம். ஆனால் இனவாதம் சமுதாயத்தில் அடி ஆழத்தில் கட்டியமைக்கப்பட்டபடி, அதன் அரசு வடிவம் நீடிக்கும் வரை இனவாதம் ஒடுக்குமுறை சமுதாயத்தில் இருக்கும் நீடிக்கும்.

இன்று ஓர் இனவாத கட்சியை பிரதிசெய்யும் ஒரு பச்சை இனவாதி பாசிட்டான சந்திரிகா ஒரு மோசமான நடிகையும் கூட. இந்தக் கொலை வெறி பிடித்த சந்திரிகா இனவாதத்தை கைவிட்டு திருந்தி விழித்துக் கொண்டு மக்களை வழிகாட்ட முனைகின்றார் எனக் காட்டுவது கபடம் நிறைந்த மோசடியாகும்.

நாசமறுப்பான் போன்றவர்களின் ஆய்வுக்கட்டுரைகளை விட மக்கள் நாளாந்தம் சொந்த அநுபவத்தில் 'விடிவெள்ளிகளின்' பின்னுள்ள ஏகாதிபத்திய சார்பு பச்சை இனவாதத்தை இனம் கண்டு கொள்கின்றனர். இவர்களை நாசமறுக்கவோ என்னவோ தான் தனது பெயரைக் கூட நாசமறுப்பானாக்கி கொண்டே இப்படி எழுத முடிகிறது. வரலாறு மக்களினதே ஒழிய, எதிரிகளை மூடிமறைப்பவர்களதோ அல்லது எதிரிகளின்தயவில் பிழைப்பவர்களினதோ அல்ல.

O

---

# தங்கத்துரைக்கு சரிநிகர் செலுத்திய அநுதாபம் எந்த வர்க்கத்துக்கு சார்பானது


நி. ந. அ. தங்கத்துரை

சரிநிகர் 126 இல் தங்கத்துரை கொலை தொடர்பாக நாசமறுப்பான் எழுதிய தொடர்ச்சியின் இறுதியில் "தங்கத்தரை அவர்களது மரணம் துயர் தருவது. யார் செய்திருந்தாலும் அது கண்டனத்தக்குரியதே. அவரது குடும்பத்துக்கும் கட்சிக்கும் மக்களுக்கும் எமது அநுதாபங்கள்" எனக் குறிப்பிட்டு, கூட்டணி என்ற தரகு முதலாளித்துவ கட்சிக்கு அநுதாபம் தெரிவித்ததன் மூலம், தமது அரசியல் குத்துக்கரணங்களை இனம் காட்டியுள்ளனர்.

பிரேமதாச, காமினி, இந்திரா, ராஜீவ், கெனடி, மகாத்மா காந்தி, என்ற மக்கள் விரோதிகளுக்கு, அவர்களின் படுகொலையின் போது அஞ்சலி செலுத்தி துயர் தீர்த்தும், கட்சிக்கு அநுதாபம் தெரிவிப்பதன் மூலம், அவர்களையும் அவர்களது மக்கள் விரோத அரசியலையும் நியாயப்படுத்தும் அரசியல், அண்மைக்காலமாக சரிநிகரில் வெளிவரத் தொடங்கியுள்ளது.


அரசியல் படுகொலை தனிநபர் பயங்கரவாத அரசியலுக்குள் நடக்கும் போது, அவ்வரசியல் விமர்சனத்துக்குரியது என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. அவ்வரசியல், அந்தப் போக்கு என அனைத்தும் விமர்சனததுக்குரியவை. அதே நேரம் இப்படுகொலைகளில் கொல்லப்படும் நபரின் அரசியல் மற்றும் நடவடிக்கைகள் நியாயப்படுத்தும் அளவுக்கு எல்லா நேரமும் இருந்து விடுவதில்லை என்பதை நாசமறுப்பான் மறந்து போன இன்றைய அரசியல் தான் என்ன? மிக மோசமான மக்கள் விரோதிகள், மக்களை ஏமாற்றும் போர்வழிகள் என அரசியல் பிழைப்புவாதம் உள்ளபோது கொல்லப்பட்டவர் நியாயப்படுத்த முடியாத நபராக இருந்து விடுகிறார். அதே நேரம் கொலையாளியின் தனிநபர் அரசியல் கடும் விமர்சனத்துக்குரியது தான்.

தொடர்ச்சி பக்- 23



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யார் இந்த டயானா?
## ஒரு கவர்ச்சிக்கன்னி,
## ஒரு மொடலிஸ்ட்,
## ஒரு பணக்கார சீமாட்டி,
## ஏகாதிபத்திய கலாசாரத்தைக் கோரிய பெண்



உலகப்பத்திரிகைகள், மக்கள் முன் டயானாவின் மரணம் தொடர்பான செய்திகளை வெளியிட்டன. இந்த வகையில் வீரகேசரி, ஈழநாடு, ஈழமுரசு, சரிநிகர், வெளி என அனைத்துப் பத்திரிகைகளும் ஒரே விதமான ஆறுதல் ஒப்பாரிகளை முன்வைத்தபோது தான், இந்தப் பத்திரிகைகளின் ஒரே அரசியல் நிலைப்பாடு அப்பட்டமாக நிர்வாணமாகத் தெரிந்தன. சரிநிகர் 130 இல் ரத்னா என்பவர் "பரந்துபட்ட உலகமக்கள் டயானாவின் மூலமாக ஒரு பழம் பெருமிதம் உடைபடுவதைக் கண்டார்கள். ---- அவர் இன்னொரு திரேசாவாக இயங்குவதை வரவேற்றார்கள். --- அன்று தொடக்கம் இன்றுவரை பெண் என்ற ஒரே காரணத்துக்காக சமூக, கலாசார ரீதியான துன்பங்களை அவள் எந்த உயர்குடும்பத்தைச் சேர்ந்த வகையிலும் சரி அநுபவித்தேயாக வேண்டும். ... ஒரு பெண் என்ற விதத்தில் தான் விரும்பியபடி வாழ்வதற்கு அவருக்கு இருந்த நெருக்கடிகள் வேறெந்தப் பெண்ணுக்குமிருந்த பொதுவான நெருக்கடி தான்..... இந்த வகையில் இரக்க சுபாவமும் பிறருக்கு உதவும் மனப்பான்மையும் கொண்ட டயானா என்ற பெண்ணின் மரணத்தில் இரத்தக்கறை ஆணாதிக்க சமூகத்தின் கைகளில் படிந்திருப்பது மறுக்க முடியாததே ".

அதே சரிநிகரில் நாசமறுப்பான் "டயானாவின் இறப்பு எமக்கு ஏற்படுத்திய அதிர்ச்சியும் இளவரசர் ஹரி தேவாலயத்தில் விம்மி விம்மி அழுததும் எமது நெஞ்சை உருக்கி விட்டன. இக் கவலைக்கு மத்தியில் ....." .

அதே சரிநிகரில் மேலும் ஆழ்வார்க்குட்டி "அவர் நேர்மையாக இருந்தார். தனது வேரிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ள முயலவில்லை. அவரால் அது முடியவுமில்லை. அரச குடும்பத்தின் போலி கவுரவத்திற்கும், விறைப்புக்கும் அவர் அடிபணியவில்லை. ..... மிகவும் சாதாரணமான ஒரு பணக்காரச் சீமாட்டியாக அவர் வாழ்ந்துவிட்டுப் போயிருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டலாம். அவரது துன்பியல் முடிவுக்காக அநுதாபப்படலாம். --------- அரச குடும்ப அங்கத்தவராகிவிட்ட பின்னரும் டயானா சாதாரண மக்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. அவர்களுடன் சுமுகமாகப் பேசினார். அரசமிடுக்கு அவரிடம் இருக்கவில்லை. சாதாரண மக்களைத் தொட்டுப் பேசினார்" என சரிநிகர் ஆறுதல் ஒப்பாரி முன்வைத்துப் புலம்பியிருந்தது. யமுனா ராஜேந்திரன் ஈழமுரசு 30-09 . 06-10 இதழ்களில் இரட்டை வேடம் போட்டு புலம்பும் பகுதியைப் பார்ப்போம்.

"அன்னை தெரேசா பற்றி நிறைய அதிதீவிர இடதுசாரி விமர்சனங்கள் உண்டு. எந்தவிதமான விமர்சனமற்ற வலதுசாரி துதிபாடல்களும் உண்டு" எனக் கூறி நடுநிலை யாகக் கூறுவது போல் பாசாங்குபண்ணி" அன்னையைப் பரிவான கண்ணோட்டத்துடன் அணுகியவர்களே பெரும்பான்மையான இந்திய இடதுசாரிகள் அன்னையின் செயல்களின் விளைவுகளை அரசியல் ரீதியில் பார்க்கத்தான் வேண்டும். ஆயினும் அன்னை தெரேசா அரசியல்வாதி இல்லை. அரசியலால் போரினால் பிளவுண்ட உலகத்தில் வாழநேர்ந்த தியாக சிந்தையுள்ள தெரேசா அன்னையின் அந்தரங்க சுத்தியை சேவா மனத்தை நிச்சயமாகச் சந்தேகிக்க முடியாது." எனக் கூறி அவரைப் புனிதர் எனப் பிரகடனம் செய்த யமுனா டயானாவைப் பற்றிய தனது கருத்தில் " ------ அவர் வெறுக்கத்தக்க மனுஷியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழவில்லை. பரிதாபத்துக்குரிய ஜீவனாகவும் முடியாட்சி குறித்த பிரம்மை உடைத்தவராகவும் புனித வழிபாட்டுக்குரிய உருவமாகவுமே (ICON) அவர் காணப்பட்டார்."

"அவரோடு ஒப்புநோக்கத்தக்கவர்கள் வரலாற்றில் முன்பும் இருந்தார்கள் பின்பும் இருப்பார்கள். மர்லின் மன்றோ, ஜாக்குலின், ஔாஸில், எலிட்பா, ஸின்டி, கிராட்போர்டு, மடோனா போன்றவர்கள் இவ்வாறு புனித வழிபாட்டு உருவங்களாக ஆனார்கள். தமிழகத்தில் நாம் ஜெயலலிதாவையும் இவ்வகையில் நோக்கமுடியும். ---- ஐரோப்பிய மதிப்பீடுகளின்படி குடிமக்கள் மனோநிலையுடன; (Republican) விடுதலைக் கண்ணோட்டத்துடன் செயல்பட்டார். ----- தொழிற்கட்சியை ஆதரித்தார். வெகுஜனங்களின் பார்வையில் வெறுக்கப்படக்கூடிய எந்தத் தன்மைகளையும் கொண்டிருக்கவில்லை. செயல்களையும் அவர் மேற்கொள்ளவில்லை." என யமுனா டயானாவையும் தெரேசாவையும் மக்கள் முன் பிரமைகளை தமிழில் விதைத்ததன் நோக்கம் இந்த உலகக்கட்டமைப்புக்கு சேதம் ஏற்படகூடாது என்ற ஒரே ஒரு பிரேமைதானே ஒழிய வேறல்ல.

இலண்டன் 'வெளி' இரண்டில் "டயானா சமூகசேவகியாக வலம் வரத்தொடங்கினர். ----- மிதிவெடிகளுக்கு எதிரான இவரது பிரச்சாரம் உலகளாவிய ரீதியில் அவருக்குப் பாரராட்டைத் தேடித்தந்தது."

அதே இதழில் ஒரு கவிதை " காலனித்துவக் கொள்ளையரைக் கரம்காட்டி எதிர்த்தாய் பெண்ணின் உரிமைக்காய் முடி துறந்த மன்னர்கள் விழிபிதுங்கி நிற்க மானுடம் காக்க மனிதரை நேசிக்க எதையும் செய்வேன் என்றாய் ..... " எனப் பலவாறாக பல பல பத்திரிகைகள், பிற்போக்கு முற்போக்குகள் எல்லாம் ஒன்று ஒன்றாய் சலிப்புக்களை எழுதிய போதுதான், இவர்கள் தத்தம் சொந்த அரசியல் முகம் ஒன்றே தான் என்பதை இனம் காட்டினர். இவர்கள் டயானா குறித்து பொதுவாக

1. அரச குடும்பத்தை எதிர்த்தார் என்கின்றனர்.
2. பெண் விடுதலையைக் கோரினார் என்கின்றனர்.
3. மனிதநேயத்தை நேசித்தார் என்கின்றனர்.
4. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு குரல் கொடுத்தார் என்கின்றனர்.
5. ஒரு சமூக சேவகி என்கின்றனர்.
6. பழைய காலனியாதிக்கத்தை எதிர்த்தார் என்கின்றனர்.
7. தரைக்கண்ணிவெடி, யூகோசிலவாக்கியா யுத்தம், வறுமைப்பட்ட மக்களுக்கு என எல்லாம் மக்குகளுக்காகவும் நின்றார் எனப் பலப்பலவாக இனம் காட்டுகின்றனர்.

டயானா கொல்லப்பட்டவுடன் ஏகாதிபத்திய செய்தி நிறுவனங்கள், தொடர்புசாதனங்கள் எதை எல்லாம் ஒப்பாரி வைத்தனவோ, அதை எல்லாம் கூட்டி அள்ளி வாந்தி எடுத்து வைத்துள்ளனர் இன்றைய முற்போக்குகள் எனக் கூறிக் கொள்வோர். ஏகாதிபத்திய தலைவர்களும் இந்த முற்போக்குகளும் ஒரே அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர். டயானா யார்? டயானாவுக்கும் மக்களுக்கும் இடையில் என்ன உறவு இருந்தது? என்ற கேள்விகளை சொந்த மூளையுடன் ஆராயும் சொந்தப்புத்தி உள்ள மனிதன் புரிந்து கொள்வான் யார் இந்த டயானா என்று? ஒரு கவர்ச்சிக்கன்னி, ஒரு மொடலிஸ்ட் ஒரு பணக்காரச் சீமாட்டி, ஏகாதிபத்திய பண்பாட்டைக் கோரிய ஒரு பெண் இதை மூடி மறைக்க வேடமிட்ட ஒரு பம்மாத்துப் பொம்மை. இது தான் டயானாவின் உண்மை முகம்.

டயானா நேர்மையானவர். எதில் நேர்மையானவர் சொல்ல முடியுமா? டயானாவின் ஆடம்பரக் களியாட்ட கொட்டமடிப்புக்கு மக்கள் பற்றி வித்தை காட்டவும் எல்லாம் எப்படி பணம் வந்தது? நேர்மையாக உழைத்தாரா? எங்கே உழைத்துக் கை கால் தேய்ந்தது? மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து. அதில் தான் டயானாவின் எல்லா ஆர்ப்பாட்டமும். மறுக்க முடியுமா? அப்படியாயின் எதற்கு உங்களின் இந்த உடன்சலிப்பும், பழஞ்சலிப்புக்களும். டயானாவுக்குத்தான் நேர்மை கிடையாது அதை எழுதிய நீங்கள் நேர்மையாகக் கூறுவீர்களா? முடியாது. ஒருக்காலும் உங்களால் முடியாது.

ஏழைகளைத் தொட்டுப் பழகினார். அவர்கள் உடன் ஏதோதோ செய்தார் என்கின்றீர்கள். நீங்கள் கனவு காண்கிறீர்களா? எம்.ஜி.ஆர், பிரேமதாச முதல் இப்படி எத்தனை பேர். ஏன் உலக அழகுராணிகள் எத்தனை பேர் இதே வேசம் இதே நாடகம். ஏன் அண்மையில் CNN தொலைக்காட்சி உரிமையாளர் நலிவுற்ற மக்களுக்கு 100 கோடி டொலரை ஐக்கிய நாட்டு சபைக்கு வழங்கியபோது உலகம் மூக்கில் கைவைத்தது. அண்மையில் உலக பன்னாட்டு நிறுவன உரிமையாளர் ஒருவர் கூறும்போது "எனது மூளை முதலாளித்துவ சிந்தனையுடையது. எனது நடைமுறை சமூக ஜனநாயக வடிவமுடையது என்றார்.

உலகில் 40 பெரிய பணக்காரர்களில் ஒருவரும் CNN சொந்தக்காரனுமான (TED TURNER) ரெட் ரீயுனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



100 கோடி டொலர் பணத்தை ஐ.நா .சபையின் மனித சமூக நலச் சேவைக்கு வழங்கி உள்ளார். CNN மாத இலாபம் ஐ.நா.வின் ஒருவருட நிர்வாகத்துக்குப் போதுமானது. உலகை ஆட்டிப்படைக்கும் இந்த கூத்தாண்டியை உலகப் பொலிஸ்காரத் தலைவன் கிளிங்ரன் பாராட்டியதுடன் இதைப் போல் செய்ய வேண்டும் என வேறு பலரையும் கோரியுள்ளார். அதாவது உலகை மேலும் மேலும் சூறையாட அற்ப எலும்பு துண்டுகளை வீசுவது அவசியம். இதை செய்வதன் மூலம் டயானா போல் வேஷம் போடவும், சூறையாடி குதித்து அடக்கி ஆள முடியும் என்ற கனவுதான் மனித உதவிகளின் பின்னுள்ள கபட நோக்கமாகும்.

எல்லோரும் மக்கள் பற்றிப் பேசுகின்றனர். அடிமட்ட சாதிப்பிரிவுகள் எழுச்சியுற்று எழுந்து போராடும் போது மேல்மட்ட தலைவர்கள் சமபந்தி முதல் எல்லா வேஷமும் போடுகின்றனர். நாம் வாழ்க்கைமுழுக்க இந்த வேஷங்களை அடிக்கடி காண்கின்றோம். டயானாவின் வேஷம் இதைத்தாண்டியது அல்ல. அந்தச் சீமாட்டி போடும் உடுப்பின் விலைகூட அவர் தொட்ட ஆபிரிக்க மனிதனின் பல ஆயுள் உழைப்புக்குச் சமனாகும். ஏன் டயானாவால் ஒரு சாதாரண மனிதனாக மாறமுடியவில்லை. அந்த மனிதனுடன் சேர்ந்து போராடமுடியவில்லை. நிலத்தில் கை ஏந்தி நிற்கும் மனிதன் எப்போதும் வான் வரை உயர்ந்து நின்று மக்களின் உழைப்பை சுரண்டும் அதில் வாழும் டயானாவை எட்டிப் பார்க்க முடியாது. இந்த அற்ப மனிதர்கள் டயானாவின் விளையாட்டுப் பொம்மைகளாக கைகளில் சிக்கியவை தான். இந்த விளையாட்டுக்குள் சிக்கும் ஏழைகள் மூலம் அவர்களுக்கு புகழ் அந்தஸ்து கிடைத்தன. அதனால் தான் இந்த வேஷம் தேவைப்படுகிறது.

உலகில் கொள்ளைக்கார ஏகாதிபத்தியங்கள். காலனிகளை வைத்திருந்த போது புகையிரத தண்டவாளங்களை அமைத்தது முதல் இன்று தன்னார்வக் குழுக்களை விதைப்பது வரை எல்லாம் சேவையாகிவிடுமா? இல்லை இங்கு சேவைக்குப் பின்னால் கொடூரமான கைகள், நோக்கங்கள் தான் உள்ளன. இதுமட்டும் தான் உண்மையானவை.

டயானா அரச குடும்ப முரண்பாடு முற்போக்கான திசைவழிப்பட்டதா? அவரின் நடவடிக்கை பெண் விடுதலை வழிப்பட்டதா? வழிப்பட்டது தான் என ஏகாதிபத்திய சக்திகள் இருந்து ஒப்பாரி வைக்கின்றனர்.

டயானாவுக்கும் அரச குடும்பத்துக்கும் இடையிலான முரண்பாடு எந்த வகைப்பட்டது என ஆராயின் - ஏகாதிபத்தியத்துக்கும் (முதலாளித்துவத்தை உள்ளடக்கிய) நிலப்பிரபுத்துவத்துவ மதவாதத்துக்கும் இடையிலானதே. டயானா நிலப்பிரபுத்துவ மதவாதத்துக்குப் பதிலாக ஏகாதிபத்திய கலாசாரத்தைக் கோரினார். இதுதான் டயானா அரச குடும்ப மோதலாகும். இங்கு பெண்ணியம் கூட ஏகாதிபத்திய பெண்ணியத்தைக் கோரியதே ஒழிய வேறு ஒன்றும் சமூகத்தைப் புரட்ட அல்ல. டயானா ஏகாதிபத்திய இன்றைய உலக மயமாதலில் எது எதுவெல்லாம் தேவைப்பட்டதோ, அவை எல்லாவற்றையும் கோரினார் அவ்வளவே. வெளியில் உங்களால் காட்ட முடியாது.

உலக அழகுராணிகள் எதை எதையெல்லாம் செய்ய வேண்டுமென ஏகாதிபத்தியம் வழிகாட்டுகின்றதோ அதை எல்லாம் டயானா செய்தார். ஓர் அழகியாக, ஒரு மொடலாக, ஒரு விபச்சாரியாக, வேஷம் போடுபவராக, ஆட்டம் போடும் ஒரு பணக்காரச் சீமாட்டியாக எல்லாமாக எதுவெதுவாக இருக்கமுடியுமோ அப்படியே இருந்தார். அடுத்து கண்ணிவெடிக்கு எதிராக, யூக்கோசிலாவியா யுத்தக் கொடுமைக்கு எதிராக குரல் கொடுத்தார் என்கின்றனர். அதாவது அமெரிக்கா அணுகுண்டு தடைக்கு கையெழுத்து கோரியது போன்றும், உலக ஆளும் அரசு தலைவர்கள் கண்ணிவெடிக்கு எதிராக குரல் கொடுத்தது போன்றதுதான் டயானாவின் புலம்பல் நாடகம் .

ஆயுதத்தைச் செய்தவன், யுத்தத்தை நடத்துபவன், வன்முறையைக் கையாள்பவன், அடக்குமுறையைக் கையாள்பவன் பயங்கரவாதத்தை செய்பவன்தான் அடிக்கடி அதற்கு எதிராக குரல் கொடுக்கின்றான். இதில் டயானா என்ற அழகி மொடலிஸ்ட் குரல் கொடுத்ததனால் தான் உங்களுக்கு நா ஊறப் புல்லரிக்கின்றதோ?

ஆயுதத்தின் நோக்கம், யுத்தத்தின் நோக்கம் அனைத்தினதும் அடிப்படை நோக்கத்தை கேள்விக்கு உள்ளாக்காது அதன் காரண கர்த்தாக்களைப்பற்றி மௌனம் சாதித்து அங்கீகரித்தபடி புலம்பி நடிப்பதில் உலகம் மாறிவிடுமா? இதைவிட இன்று மனிதர்களுக்காக நாள்தோறும் போராடிப்போராடி இந்தச் சீமாட்டிகள் பாதுகாக்கும் அரசுநிறுவனத்தால் கொல்லப்படும் மனிதர்கள் இவர்களைவிட ஆயிரம் ஆயிரம் மடங்கு வான் உயர எழுந்து நிற்கின்றனர். கால் தூசுக்கு கூட அருகதையற்ற சீமாட்டி டயானாவைப்பற்றி இன்று புலம்ப ஏகாதிபத்திய உலகம் உள்ளது. ஆனால் மக்களுக்காக அவர்களுக்காகவே இறக்கும் ஆயிரம் ஆயிரம் மனிதர்களை நினைவு கொள்ள ஓர் உலகம் இல்லைத்தான். அதனால் தான் டயானாவைப் பற்றி ஒப்பாரிகள் புலம்பல்கள் நிரம்பிப்போயுள்ளது.

புரட்சி பேசுகின்ற ரொக்சிய கம்யூனிச கட்சியின் பத்திரிகையான தொழிலாளர் பாதை டயானாவுக்கு அஞ்சலி செலுத்திய வண்ணத்தைப் பார்ப்போம். தொழிலாளர் பாதை இலங்கை வெளியீடு 484 இல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(1997 அக்டோபர் ) "டயானாவின் மரணமும் பிரித்தானியாவின் அரசியல் நெருக்கடியும் " எனத் தலைப் பிட்ட கட்டுரை தலையங்கம் எப்படி டயானாவின் மரணம் அரசுக்கு நெருக்கடி கொடுத்தது என்பதை விளக்கவில்லை. ஆனால் டயானாவுக்கு மறைமுகமாக கண்ணீர் அஞ்சலி செலுத்தும் வகையில் "எதிர்காலம் எதுவிதத்திலும் உறுதியானது அல்ல. டயானாவின் மரணத்துடன் வெடித்த பலம் வாய்ந்த பொதுஜன உணர்வுகளும் அவை அரச குடும்பத்துக்கு எதிராக நெறிப்படுத்தப்பட்டமையும் அது முதலாளி வர்க்கம் மீது திரும்பிப் பாயும் சக்தியுடைய பூதம் அடைக்கப்பட்டிருந்த போத்தலில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளது." எனப் புரட்சியின் பெயரால் தொழிலாளர் பாதை பிரகடனம் செய்து இருந்தது. டயானாவின் அரசியல் என்ன? என்ன செய்து கொண்டிருந்தார்? என்ற கேள்வியை கேட்கவோ, விமர்சிக்கவோ முன் வராத தொழிலாளர் பாதையின் ஒருபக்க கட்டுரையில் மனிதாபிமான டயானாவின் பின் திரண்டோர் முற் போக்குகள் என மறைமுகமாக பிரகடனம் செய்ததுள்ளதுடன். இனி அடுத்த புரட்சிக்கோ, பாசிசத்துக்கோ அணிதிரட்டக் கூடிய நிலையில் கனிந்து உள்ளது என பிரகடனம் செய்கின்றனர். அதாவது குநிலை யில் இருந்து டயானாவின் முற்போக்கில் வெளிவந்துள்ளார்கள். எதிர்காலப் புரட்சிக்கு தயாராக உள் ளார்கள் என அத்தாட்சி செய்கின்றனர்.

இது தான் தொழிலாளர் பாதையின் புரட்சி வேஷம்.

இப்படி நாம் விமர்சிக்கும்போது யமுனா ராயேந்திரன் போன்றோர் தீவிர இடதுசாரிகளின் பார்வை எனக் கூறி சேறு அடிக்கும் வழியில் தான் ரொக்சிகளும் தீவிர இடதுசாரித்தனம் என சேறடித்து இந்த உலகை பாதுகாக்க அதீத பிரயத்தனம் செய்து உச்சுநடை போடுகின்றனர்.

காலனியாதிக்க அரசு குடும்ப வடுக்களையோ, அங்கு கொள்ளையடித்த சொத்துக்களைப் பெறுவதிலோ இன்று மக்கள் வரிப்பணத்தில் சொகுசு வாழ்க்கை வாழ வெட்கப்படாத, ஆடம்பர களியாட் ட ஏகாதிபத்திய கலாசார சீரழிவுகளை தனது வாழ்க்கையாகக் கொண்டு, அதற்குள்ளான சகதிக்குள் நடந்த இழுபறியில் தான் டயானா இறந்தார். இதற்காக ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம் ஏன்தான் ஒப்பாரி வைத்து அழுது புலம்ப வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள் இதை அம்பலப்படுத்தி எதிர்த்து இதைப் போற் றுவோரையும், அதன் எடுபிடிகளையும் வேரறுக்க வேண்டும்.

குறிப்பு- இன்னுமொரு சாக்கடை நாயகியும் ஏகாதிபத்தியங்களின் புகழ்களைப் பெற்றுக் கொண் டவருமான அன்னை திரேசா, டயானா போன்று வேறு ஒரு வழியில் அதே சாக்கடைக்காக இயங்கியவர்.



வறுமை கடவுளின் கொடை எனப் பிரகடனம் செய்து, உலக ஏகாதிபத்தியத் திடமும், உலக சர்வாதிகாரிகளின் கை குலுக்கி அவர்களை மனித நேயவாதிகளாப் பிரகடனம் செய்து, அவர்கள் கொடுத்த பணத்தில் ஏழைக்கு சிரமதானம் செய்தார். அதுவும் ஏழைகளை நாயாக நடத்தி மருத்துவ உலகில் எவை தடை செய்யப்பட்டதோ அதை எல்லாம் அவ்ஏழைகளுக்கு கொடுத்தும் செய்து, பலரைப் பரலோகம் அடைய வைத்தார்.
ஏழைகள் உள்ளவரை தான் தமது பிழைப்பும் நிலைக்கும் என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டுதான், ஏழைகளை உருவாக்கும் சமூக அமைப்பைப் பாதுகாக்க அயராது உழைத்தார்.

ஏகாதிபத்தியம் ஏற்படுத்தி வைத்துள்ள வறுமையையும், அதற்கு எதிரான போராட்டத்தையும் தடுக்கத்தான் ஏகாதிபத்தியம் மனித உதவி திட்டங்களை முன்வைக்க, அதில் புரண்டு எழுந்தவர் தான் அன்னை திரேசா என்ற நச்சுக் காளான்.

---

இந்தியாவின் பாரதயிஜனதா என்ற இராமனின் வானரங்கள் ஆட்சியேறி உள்ள நிலையில். தமிழ் ஈழ தேசிய விடுதலைபோராட்ட அணிகளின் குழப்பத்துடன் கூடிய அரசியல் எதிர்பார்ப்பு, மேலும் தேசிய விடுதலைப் போராட்டத்தை சிதைக்க முனைகின்றது. உலகிலேயே மிகவும் மோசமான காட்டுமிராண்டி மதமான இந்துமதம் அதன் பாசிச கொடூரங்கள் மனிதனை பிளந்து தொட்டாலே குற்றம் மட்டும் இன்றி மரணத்தை சிபார்சு செய்கிறது இந்து தத்துவம்.

மிகமோசமான கொடூரங்களின் இருப்பிடமான இந்து பாசிச பார்ப்பனிய சதிராட்டங்களின் பார்ப்பனிய ஆட்சி இன்று இந்தியாவில் அரசை கைபற்றி உள்ள நிலையில் ராஜீவ் கொலையை தொடர்ந்து புலிகள் இந்தியாவில் இழந்துபோன ஆதாயங்களை மீளப்பெறும் கனவுகளில் தித்தித்துப் போய் உள் ளனர். ⇨

www.tamilarangam.net

➪ புலிகளின் சொந்த அரசியல் தவறுகளில் இந்தியாவை பின்தனமாக பயன்படுத்தும் ஒரு யுத்த தந்திர தளத்தை இழந்துபோன வரலாற்று தவறுகள், சுயவிமர்சனம் இன்றி அதேபோல் மேலும் தவறு இழைக்க பின்நிற்காத வகையில் இன்று புலிகளின் நம்பிக்கைகள் பிரதிபலிக்கின்றன. பார்பானிய சதிராட்ட கும்பல் இந்தியாவில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் இன ஒடுக்குமுறை பற்றி அக்கறை இன்றியும் தமிழுக்கு பதிலாக சமஷ்கிருதத்தை திணித்து ஆட்சி செய்யவும் இந்தியை திணிக்க முனை யும் நிலையில் அதுபற்றி அக்கறை இன்றி தமிழ்நாட்டில் பார்பானியத்துக்கு எதிரான போராட்டவரலாற்றை பற்றிய அக்கறை இன்றி தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு பாரதிய ஜனதாவின் பார்பானியம் உதாரணம் என நம்புகின்றனர்.

இன்று எமது தேசிய விடுதலை போராட்டமும் மக்களும் இந்து சமய போராட்டமாக அல்லது மொழிப்போராட்டமாக முன்னெடுக்க அதை ஒட்டி புலிகள் தமது அரசியல் நிலையில் முன் செல்லும் ஒரு சரியான நிலையை ஒரு மதப்போராட்டமாக சீரழிக்கும் அபாயம் இந்தியாவின் ஆட்சியில் ஏறியுள்ள வானரங்களின் உறவுக்

# இந்தியாவின் வானரங்களின் **ஆட்சியும்,** விடுதலைப் புலிகளின் **குழப்பமும்**



கான முயற்சி சீரழித்துவிடுமா என்ற அச்சம் எழுந்துள்ளது. இதை ஊக்குவிக்கும் வகையில் புலம் பெயர் நாட்டு செய்தி பத்திரிகைகள், வானொலியின் பிரச்சாரம் மற்றும் மதத்திற்கு செய்யும் புதிய பிரச்சார சதிராட்டங்கள் இதை சுட்டி நிற்கின்றது.

புலிகள் அதன் சொந்த அரசியல் நிலைபாடுகளின் ஊசலாட்டத்தை கையகப்படுத்தி கருத்தியல் கலாசார தளத்தை சிதைப்பதன் மூலம் இது வேகம் பெற வைக்க தீவிர இந்து பார்ப்பனிய வக்கிரங்கள் கொட்டப்படுகின்றன. அன்று முஸ்லீம் மக்களை வெளியேற்றிய போதும் சரி, தாக்கிய போதும் சரி புலிகள் மத ரீதியாக அதை அணுகவில்லை. மாறாக பிறிதொரு தேசிய இனமாக கருதியே தாக்கினர். இதன் சுருதி மாறிவிடுமா? என்பது தான் இன்று உள்ள உடனடியான அரசியல் பிரச்சனையாக உள்ளதுடன், தேசிய விடுதலை மேலும் சிதைந்துவிடுமா என அச்சம் தோன்றுகிறது.

இந்நிலையில் பாரதிய ஜனதா அரசு இலங்கை விடயத்தில் புலிகளை ஆதாரிக்க கூடிய நிலை உள்ளதா? என்பது இலங்கையில் இந்தியாவின் நலன்களுடன் தொடர்புடைய விடையமாகவுள்ளது. தேசிய விடுதலைச்சக்திகளின் நம்பிக்கைக்கு புறம்பாக, தனது சுரண்டும் நலனைத்தான் பாரதிய ஜனதா அரசு முதன்மையானதாகக் கொள்ளும்.

இந்நிலையில் இன்று இலங்கை அமெரிக்காவின் நலன்களின் ஒட்டுமொத்த சரணாகதி அடைந்துள்ள நிலையில், இரண்டாவது போட்டி நாடு இன்று வெளிப்படையாக போராட முன்வராத நிலையில், இந்தியாவும் கூட அமெரிக்காவின் நலன்களுக்கு முழுமையாக திறந்துவிடும் நிலையில், இந்தியாவின் பிராந்திய வல்லரசு நலன் அமெரிக்க நலனை மீற முடியாத வகையில், இன்றைய உலக ஒழுங்கு உள்ளது. இன்று பாரதிய ஜனதா அரசு புலிகளை விட அரசை சார்ந்து ஒடுக்கும் நிலை உள்ளதே ஒழிய, புலிகளுக்கு உதவும் நிலையில் இல்லை.

புலிகள் மக்களைச் சார்ந்து மேலும் போராட வேண்டுமே ஒழிய, அன்னிய உதவிகள், சக்திகளை எதிர்பார்ப்பதும் நம்புவதும் மேலும் போராட்டம் பலவீனம் அடைந்து, சிங்கள பேரினவாத சதிராட்டம் தீவிரமடைய வழி திறப்பதாக இருக்கும். இந்திய மக்களையும், அதை ஒட்டிய புரட்சிகர சக்திகளினதும் ஆதரவைக்கோரியும், கடந்தகால தவறுகளை சுயவிமர்சனம் செய்வதும் இன்றைய வரலாற்று கடமையாக புலிகள் முன்னுள்ளது. இது மட்டும் தான் தேசிய விடுதலைப் போராட்டத்தை பலப்படுத்தி மேலும் வீறுடன் முன்னேற வழிகாட்டும். ◯




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அண்மையில் இறந்து போன கம்பூச்சியாவின் போர்க்குணம் கொண்ட வீரமிக்க மார்க்சியவாதியான பொல்போட், ஏகாதிபத்திய கொள்ளைக்காரர்களை நாட்டைவிட்டு துரத்தியடித்ததுடன், சொந்தப் பொருளாதாரத்ததை கட்டியமைக்கும் போராட்டத்தில், உள்நாட்டு எதிர்புரட்சியும் ஏகாதிபத்திய சதிகளும் சோவியத்ஆக்கிரமிப்பும் ஆக்கிரமிப்பாளன் விட்டுச் சென்ற அழிவுகளும் சேர்ந்து பாரிய நெருக்கடிகள் ஊடாக நாட்டை மீட்யெடுக்க போராடினர். இதன் தொடர்ச்சியில் வியட்நாம் ஆக்கிரமிப்பும் அதன் தொடர்ச்சியில் பின்வாங்கிச் சென்று தொடர்ந்தும்

## பொல் பொட்க்கு சிவப்பஞ்சலி



போராடினர். இருந்த போதும் போரட்டத்தில் விட்ட தவறுகள் போராட்டதத்தில் பின்னடைவை ஏற்படுத்தியது.

மறுபுறம் ஏகாதிபத்தியம், கம்பூச்சிய போராட்ட புதல்வார்கள் மீது தமது கடந்தகால தோல்விகள் மற்றும் தொடர்ச்சியான சுரண்டலை நடததும் கனவுகளுடன் சர்வதேச ரீதியாக அவதூறு பொழிந்து தள்ளுகின்றது.

அதைப் பொறுக்கி எடுக்கும் முற்போக்கு மூகமுடி போட்ட நயவஞ்சகர்கள் மனிதாபிமான பெயரில் கடை விரிக்கின்றனர். வரலாறு கம்பூட்சிய புரட்சிகர வரலாற்றை தனக்கே உரிய வகையில் விமர்சனக் கண்கொண்டு மீளப்பெறுவதை எந்த சக்தியாலும் தடுக்கமுடியாது. ○

# சுரண்டும் உரிமை மீது வன்முறை கையாள்வது மனித உரிமை மீறல் அல்ல

சுவடுகள் 78 இல் யமுனா ராஜேந்திரன் என்ற சுரண்டும் வர்க்க எழுத்தாளன் படைப்பாளி பற்றிய குறிப்பில் "எல்லா அமைப்புக்களுக்கும், மாற்றுக்கருத்தை ஒடுக்கும் எல்லா அரசியல் அமைப்புக்களுக்கும் பொருந்துபவை. சர்வாதிகாரம், ஜனநாயகம், கம்யூனிசம் என நிலவிய எல்லா அமைப்புக்கும் பொருத்திப் பார்க்கிறார் ரோமன் போலன்ஷ்க்கி (போலந்து நாட்டைச் சேர்ந்தவர், தற்போது பாரிசில் வாழ்கிறார்) இடது சாரிகளின் மனித உரிமை ஒரு அரசியல் தந்திரோபாயமாகவே இருப்பதை விமர்சிக்கிறார் டோப்மேன்." என யமுனா முதலாளித்துவ சுரண்டலுக்காக இழுத்து எடுத்து முன்வைத்து பிதற்றி உள்ளார்.

வன்முறை எப்படி மனிதன் முன் தோன்றியது என்ற கேள்விக்கு பதிலளிக்க முடியாது சூனியவாத விளையாட்டுத்தன சிதைவுகளில் எழுந்து, மேற்பரப்பில் திளைத்தபடி மறுத்து வித்தியாசப் படுத்துவதாகக் காட்டி, இந்த ஏகாதிபத்திய பின்நவீனத்துவ கோட்பாட்டில் தொங்கியபடி, இப்படி ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்ய நாக்கில் நீர் ஒழுக ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை கூவி அழைக்கின்றார்.

கம்யூனிசம் வன்முறையை என்றும் மறுத்ததில்லை. மக்களின் உழைப்பை உறிஞ்சி வாழும் ஒட்டுண்ணி சுரண்டல் வர்க்கத்தை ஒழித்துக்கட்ட வேண்டின், வன்முறைப் போராட்டம் ஊடாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவிட அதனூடாக சுரண்டுவோரையும், அதன் கோட்பாட்டுத் தளங்கள் மீதும் வன்முறையை கையாள்வது என்பது, பாட்டாளி வர்க்கம் மீது திணிக்கப்பட்டு தவிர்க்க முடியாததாக்கியுள்ளது இந்த சமூகம். சுரண்டுபவனின் மாற்றுக்கருத்துரிமை, சுரண்டும் உரிமையைப் பாதுகாக்க யமுனா என்ற சுரண்டும் வர்க்க கோட்பாட்டுச் செம்மலுக்கு தேவைப்படுவது மனித ➘



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 10 வருடங்களுக்கு முன்

## படுகொலை செய்யப்பட்ட

# விமேலேஸ்வரனின் நினைவுகளின் மேல் ...



1988ம் ஆண்டு இலங்கைப் புரட்சிகர போராட்ட பாதையில் விமேலேஸ்வரன் என்ற மனிதனை இழந்த நிகழ்வு, வரலாற்றுப் பாதையில் மறக்க முடியாத வையாக நீடிக்கும். ஆம் மக்களுக்காக இறுதிவரை சமரசமின்றி போரடிய மாமனிதனை புலிகள் நடுவீதியில் வைத்து படுகொலை செய்தனர். அவன் கோரியது எல்லாம் மக்கள் எழுத, பேச, கூட்டம் கூடும் உரிமையை தமிழ் மக்களுக்கு வழுங்குகள் என்பதுதான். தன் மாரணததை முன் கூட்டியே போராட்டப் பாதையில் தெளிவாக உணர்ந்து கொண்டதுடன், மாரணத்தைக் கண்டு அஞ்சாது தலைமறைவாக இருந்தபடி மக்களுக்காக போராடுவதில் தலைமைதாங்க என்றுமே பின் நிற்கவில்லை. அவன் மிகவும் பின்தங்கிய தாழ்தப்பட்ட கிராமங்களில் நீண்டநாள் தங்கி நின்று, அவர்களின் உடல் உழைப்பான விவசாயக்கூலிக்கு அவர்கள் உடன்சென்று, நடைமுறைப் புரட்சிக்காரனாக எந்தவிதமான பகட்டுமின்றி புகழுக்கும் ஆசைப்படாத போராட்ட மனிதனாக இருந்தான்.

இன்று புரட்சி சாவாடல் அடிப்பதும், தம்மைத் தாம் புகழ்ந்து கொள்ளும் இன்றைய சகதிகளில் இருந்து வேறுபட்ட இவனின் வரலாறு மக்களுக்காக எப்படி போராடவேண்டும் என்பதை நடைமுறையில் விட்டுச்சென்றுள்ளது.
இவன் ஒரு நாடகம் மற்றும் பல்துறை எழுத்தாளனாக பலதுறைகளில் வளர்ந்த கலைஞனாக மக்களின் தலைவனாக வளரும் வழியில் வர்க்க எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டான். இலங்கைப் புரட்சிகர போராட்டப் பாதையில் நினைவுக்கு உள்ளாக்க கூடிய புரட்சிகரப்போராட்ட பாரம்பரியங்களை மரணத்தினூடே எமக்கு தந்துவிட்டுச் சென்றுயுள்ளான் இந்தப்புரட்சியாளன். ☆

உரிமை மீறல் பற்றிய புலம்பல்.


சுரண்டுவது மனித உரிமை மீறல் அல்ல, அது ஒரு மனிதனின் அடிப்படை உரிமை என்ற பிரகடனம் தான். கம்யூனிசம் மீதான காழ்ப்புணர்ச்சி கொண்ட தாக்குதல். இடது சாரிகள் சுரண்டும் வன்முறையைத் தான் எதிர்க்கிறார்கள். அதைத்தான் மனித உரிமை மீறலாக பிரகடனம் செய்கின்றார்கள்.

இதன் அடிப்படையில் சுரண்டுவோரை ஒடுக்குவதை ஆதரிக்கின்றார்கள். இதை மனித உரிமை மீறலாக ஏற்றுக்கொள்வதுமில்லை. இதையிட்டு அழும் யமுனாவின் நோக்கம் சுரண்டும் வர்க்கத்தை பாதுகாத்து அதில் பிழைப்பது தான். இதன் தொடர்ச்சியில் சுரண்டும் வர்க்கம் சுரண்டல் நலனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய சாதீயம், ஆணாதிக்கம், -- என அனைத்தையும், சுரண்டும் வர்க்கத்தின் மனித உரிமையைப் பாதுகாப்பதன் மூலம், யமுனா மறைமுகமாக பாதுகாத்து தக்க வைக்கும் முயற்சி தான் மனித உரிமை மீறல் என்ற புலம்பல். ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net




# அமெரிக்க பொலிஸ்காரனின் தடையும், புலிகளின் அரசியற் பாதையில் நெருக்கடியும்

அமெரிக்க ஏகாதிபத்தியம் அண்மையில் புலிகளை தடைசெய்து இருந்தனர். உலக பொலிஸ்காரனும் உலக அடாவடிக்காரனும் உலக வன்முறைக்கு தலைமை தாங்குபவனுமான அமெரிக்கா புலிகளை தடை செய்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய கோரிக்கையை ஒழித்துக்கட்டி விடமுடியும் என நம்புகிறது.

உலகின் இரு பெரும் வல்லரசுகள் உலகைப் பங்கிட நடத்திய பனிப்போரின் போது தான் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை உள்ளடங்கிய போராட்டம் வெடித்துக்கிளம்பியது. இந்தப்போராட்டத்தைப் பயன்படுத்தி இவ்விரு பெரும்வல்லரசுகளான அமெரிக்காவும் ருசியாவும் இலங்கையை தமது பொருளாதார இராணுவ நலனுக்கு பயன்படுத்த தமது சார்பான தமிழ் குழுக்





களை அடையாளப்படுத்தி சிலவற்றை இந்தியாவுக்கு ஊடாகவும் நகர்த்தியது. இந்த இரு வல்லரசுகளுக்குமிடையிலான மோதல் இயக்கங்களுக்கும் ஏற்பட்டது. ருசியாவில் கொர்பச்சோவின் காலம் இந்த மோதலை முடிவுக்கு கொண்டுவந்தது.

இதன் தொடர்ச்சியில் இலங்கையிலும் இயக்க மோதலில் உலகில் அமெரிக்க தலைமையில் ஒற்றை ஆதிக்கம் ஏற்பட்டது போன்று புலிகளின் தலைமையில் ஒற்றை ஆதிக்கம் ஏற்பட்டது. இவை அனைத்தும் சர்வதேச நிகழ்வுப்போக்குக்கு இசைவாக அதன் தொடர்ச்சியில், நடந்து முடிந்தன. இந்த நிலையில் புலிகள் மக்கள் முன் ஈழத்தை இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் ஒப்பிட்டு நாம் முன்னேறுவோம் என அடிக்கடி கூறத்தொடங்கினர். இதன் பின் ஒரே ஏகாதிபத்தியம் அரசு, புலிகளை வழி நடத்துவதில் இலங்கையை தான் முழுமையாக கட்டுப்படுத்தும் அரசியல்நிலை ஏற்படும் வரை, இருவரையும் கையாண்டது .

அதாவது முன்பு உலகு எங்கும் தெரிந்தது போல் இஸ்ரேல் இராணுவ பயிற்சித்தளமொன்றில் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் ஒரேநேரத்தில் ஒருவருக்கு ஒருவர் தெரி யாது பயிற்சி அளித்ததைப் போன்றதே இது. அதாவது அங்கு கண்ணிவெடி செய்வது, வைப்பது தொடர்பான பயிற்சி ஒருவருக்கும், கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான பயிற்சி மற்றொருவருக்கும் வழங்கிய நிலையைத் தான் அமெரிக்கா அரசு, புலிகள் இடையிலான உறவுக்குள் தனது நலனை முன்வைத்துக் கையாண்டது .

இன்று இலங்கையில் அமெரிக்காவின் நலன்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு நல்ல நிலையை அடைந்துள்ளது. அதை அமெரிக்கா ஜனாதிபதியே சொல்லும் நிலையில் தான் புலிகளின் மீதான தடை அமைந்துள்ளது.

இனியும் இலங்கையினை தனக்கு இசைவாகமாற்ற புலிகள் தேவையில்லை என்ற நிலையில் தான் (இங்கு இனம் தெரியாத அமெரிக்கா தொடர்பாளர்கள், வழிநடத்துனர்கள் தொடர்ந்தும் புலிகளை அழிக்கும் வழியில் வழிகாட்டுவர் என்பது கவனத்துக்குரியது.) புலிகளை அமெரிக்கா தடை செய்தது. இதன் மூலம் புலிகளை அழித்து ஒழிக்க அல்லது சரணடைய வைப்பதன் மூலம், தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை ஒழித்துக் கட்ட முடியும் என நம்புகிறது .

அமெரிக்காவின் தடை தொடர்பாக புலிகளின் தொடர்புசாதனங்கள், மற்றும் பத்திரிகைக் குறிப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர் உள்ளிட்டு இத்தடை புலிகளைப் பாதிக்காது என பல ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டு இருந்தனர்.

அமெரிக்காவின் தடை புலிகளைப் பாதிக்காது என முற்போக்குகள் எனக் கூறுவோரும் கூறுகின்றனர். எல்லாவித அரசியல் ஆய்வையும் கைவிட்ட பின் இப்படிப் பிரகடனம் செய்வதன் மூலம், உண்மையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய போராட்டத்தை முச்சந்திக்கு இழுத்து நகர்த்தி வலுக்கட்டாயமாக போராட்டத்தை அழிக்க செய்யும் முயற்சியாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிரியாகக் காட்டி, அதைச் சார்ந்து இராது போராட முனையும் ஒரு கம்யூனிசக்கட்சிக்கு கூட தடை முன்வைக்கப்படின் அது நெருக்கடியைக் கொடுக்கும்.

அமெரிக்காவை எதிர்த்து அதைச்சார்ந்து இருக்காத ஒரு கட்சிக்கே இந்த நிலை ஏற்படின் அமெரிக்காவை எதிர்க்காது அதைச் சார்ந்து நின்ற புலிகளை பாதிக்காதா?

அரசியல் ரீதியில் அமெரிக்காவை எதிர்க்காது உள்ள இயக்கம், மக்கள் மத்தியில் உள்ள முரண்பாட்டை வன்முறை மூலம் கையாளும் ஓர் இயக்கம், மற்றைய தேசிய இனங்களை எதிரியாகக் காட்டும் இயக்கம் எப்படி இதற்கு வெளியில் சுயாதீனமாக இயங்க முடியும். எந்த அரசியல் தளத்தில் எதை முன்வைத்து நீடிக்க முடியும். மக்களிடம் தீவிர முரண்பாட்டைக் கொண்ட புலிகள், அமெரிக்காவை எதிர்க்காத நிலை என்பன, புலிகளை தன்னந்தனியாக நடுரோட்டில் வழிநடத்திச் செல்ல அமெரிக்கத்தடை அமைந்துள்ளது. எதிர்காலத்தில் இத்தடை பிரதிவிளைவுகளை ஏற்படுத்த உள்ளது. மற்றைய வல்லரசுகள் ஆதரவு கிடைக்கும் ஒரு நிலையில் மட்டும் தான், புலிகளால் நீடிக்க முடியும் அந்தளவுக்கு புலிகளின் அரசியல் உள்ளது .

புலிகள் பணம் சேகரிக்கும் ஒரே ஒரு நிகழ்ச்சித்தொடரை மட்டும் காட்டியே பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். புலிகளைப் பொறுத்த வரையில் பணம் ஒரு பிரச்சனை அல்ல. மாறாக புலிகளின் சர்வதேச இராணுவத் தொடர்புகள் தான் பிரச்சனைக்கு உரியதாக மாறுகிறது.

மக்களின் முரண்பாடுகளை ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக நின்று போராட முடியாத புலிகள், முற்று முழுதாக இராணுவவாதத்துக்குள்ளும் சர்வதேச இராணுவவினியோகத்திலும் தான் சார்ந்துள்ளனர்.

அமெரிக்காத்தடை என்பது சர்வதேச ஆயுத சேகரிப்பைத் திட்டவட்டமாகத் தடுக்கும் அல்லது அவ்விநியோகத் தொடரை அரசுக்குக் காட்டிக் கொடுத்து அழிக்கும். இந்த வகையில் அண்மையில் இரு கப்பல்களை அரசுக்குக் காட்டிக்கொடுத்து அழித்ததன் பின்னணியில், மூன்றாவது சக்தி ஒன்றின் தகவல் தனக்குக் கிடைத்துள்ளது என்பதை அரசு புலிகள் அறிக்கைகள் உறுதி செய்கின்றன.
சர்வதேச புலிகளின் ஆயுத சேகரிப்பு அதன் தொடர்பாளர்கள், விநியோகஸ்தர்களுக்குள் இருந்து தான் மூன்றாவது தரப்பு தகவல் வெளிவர முடியுமே ஒழிய வெளியில் அல்ல.

நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்யாத ஆயுத விநியோகஸ்தர்கள் வியாபாரியாகவோ, உளவாளியாகவோ, வேறுபெயர்களில் கூட இருக்க முடியும். இந்த உலக ஆயுத விநியோகம் தவிர்க்கமுடியாது அமெரிக்காவின் நேரடி அல்லது மறைமுகமான கட்டுப்பாட்டைக் கொண்டதாகவே இருக்கும். ஏனெனில் இன்றைய உலக ஒழுங்கும், அமெரிக்காவின் பொலிஸ்கார வேலையும் இதுவாக உள்ளபோது, புலிகளின் அரசியல் நிலையில் இதற்கு வெளியில் ஆயுத சேகரிப்பை செய்யமுடியாது.

இங்குதான் அமெரிக்கத்தடை புலிகளின் இராணுவவாத நிலை மீதான செயல்தளத்தை சிதைக்கின்றது. புலிகளின் அரசியல் இராணுவவாதமாக உள்ளவரை கருவியுத்தமும் கருவிமேலாண்மையும் தான் வெற்றி எனக் கூறும் வரை மக்கள் தான் வெற்றியைத் தீர்மானிக்கிறார்கள் என்பதை நிராகரிக்கும் வரை, புலிகளின் ஆயுத விநியோகத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் புலிகளை முடக்கி அழிக்க முடியும் என்ற அமெரிக்க ஏகாதிபத்திய நிலை தான், புலித்தடையாக வெளிவந்துள்ளது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடு உள்ளவரை, அமெரிக்காவை எதிரியாகப் பிரகடனம் செய்யாத அரசியல் உள்ளவரை, அமெரிக்கத் தடை புலிகளை தனிமைப்படுத்தி அழிக்கும் வகைப்பட்ட செயல் ஆகும். தமிழ் மக்களின் நீதியானதும் நியாயமானதுமான சுயநிர்ணயக்கோரிக்கையை முன்வைத்து போராட வேண்டுமாயின், சர்வதேசரீதியில் தேசியத்தை அழித்து ஒழிக்கும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் போராடவேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள் பிரச்சனையை முன்வைத்து அமெரிக்காவை எதிர்த்தும் போராடவேண்டும். இல்லாதவரை அமெரிக்காத்தடை போராட்டத்தைச் சிதைத்து அழிக்கும். மக்களிடம் இருந்தும் சர்வதேச விநியோக தளங்களிலிருந்தும் அமெரிக்காத்தடை புலிகளைத் தனிமைப் படுத்தும் செயலுக்கு, புலிகளின் அரசியல், அதைத் தங்கத்தட்டில் ஏந்திக் கோரும் வகையில் உள்ளது என்பது கவனத்துக்குரியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கட்டற்ற சுதந்திரத்தை கோரும் பெண்ணியம்

## ஆணாதிக்கத்தை தக்கவைத்த விபச்சாரத்தை கோருவதே!

சரிநிகர் 139 இல் (ஜன 29-பெப் 11) "பெண்ணியத்தின் ஒழுக்கம் என்ன?" என கேள்வி எழுப்பிய சங்கமனின் ஓர் அலசல் வெளியாகியிருந்தது. பெண் விடுதலை தொடர்பாக டிஷ்கோவின் 'கட்டற்ற சுதந்தரம்' எதுவோ அதை முன்வைத்து அதை நிறுவ தனது வக்கிரமான மார்க்சிய எதிர்ப்புடன் கூடிய கட்டு கதைகளையும் அவதூறுகளையும் பொழிந்து தன்னியுள்ள சங்கமன் இதை ஒரு அலசல் என போட்ட தன் மூலம், ஊரில் திண்ணையில் கூடி மற்றவர்கள் பற்றி இல்லாத பொல்லாததை இட்டுக் கட்டி அலசும் வம்பைத்தான் மீள ஒரு முறை செய்துள்ளார். இந்த அரசியல் வம்பளப்பு அலசல்களை பார்ப்போம்.

"மார்சீயம் என்ன சொல்லும்? அதுவும் ஆணாதிக்க முனைப்புக் கொண்ட தத்துவம்தான். அது மட்டுமல்ல மார்க்ஸ் மாதிரி தன் மனைவியைச் சுரண்டியவர் வேறுயாரும் இருக்க முடியாது முழுநேரத்தையும் பிரிட்டிஷ் மியுசியத்தில் கழித்த மார்க்ஸ் தன் உடல் இச்சையைத் தீர்ப்பதற்காகத்தான் மனைவியிடம் வந்தார். அவளை தொடர்ந்து கர்ப்பவதியாக்கினார். வறுமையில் வாடவிட்டார். அதுமட்டுமல்ல தன் உடல் இச்சையைத் தீர்த்துக்கொள்ள ஒரு வைப்பாட்டிச்சியை வேறு வைத்துக்கொண்டார். இதையும் விடக்கேவலமான சுரண்டல் தான் தன்மூலம் வைப்பாட்டிச்சிக்குக் கிடைத்த குழந்தைக்கு தான் அப்பனென ஏற்றுக்கொள்ள மறுத்தது. அப்படிப் பட்டவரின் தத்துவத்தில் பெண்களை ஆண்கள் சுரண்டுவது பற்றிய பேச்சை எதிர்பார்க்க முடியாது."

என எழுதும் சங்கமன் இதற்கான ஆதாரத்தை தரமுடியாத அரசியல் பேடித்தனம்தான் விசித்திரமானது. எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு வக்கிரமாக மார்க்சியத்தை சேறடிக்க முனைகிறார். சொந்தப் பெயரில் இவைகளை முன் வைக்க முடியாத ஏகாதிபத்திய சக்திகளை உறுஞ்சி உமிழும் இவர்கள் தான் பெண்ணினத்தின் முதல் எதிரியாகவும் ஆணாதிக்கத்தை பாதுகாக்க முனையும் இன்றைய நுண்ணறிவு கொண்ட பிரதிநிதிகளுமாவர். மார்க்ஸ் ஆணாதிக்கவாதி எனக்காட்ட முன் வைக்கும் ஆதாரம் முழு நேரத்தையும் பிரிட்டிஷ் மியூசியத்தில் கழித்தவர். மனைவியுடன் இச்சையைத் தீர்க்க மட்டும் வந்து போனவர். குடும்பத்தை ஏழ்மையில் விட்டு விட்டு ஆணாதிக்க சுகம் கண்டவர். இவைதான் சங்கமனின் முதலாவது மார்க்சியம் ஆணாதிக்க தத்துவம் என நிறுவ முன்வைத்த எடுகோள். அருமையிலும் அருமையான பெண் விடுதலை தத்துவத்தை வம்பளப்பு அலசலுக்கு ஊடாக சொரிந்துள்ளார்.

சங்கமன் மார்க்சை கொச்சப்படுத்தி கூறுவதைப் பார்த்தால் மனைவியை வறுமையில் வாடவிடாது வைத்திருப்பவர்களும், உழைத்து நாள் பூராகவும் மனைவியுடன் கொஞ்சிக்குலாவிக் கொண்டு இருப்பவர்கள் ஆணாதிக்கவாதியில்லை பெண்விடுதலைவாதிகள் என்கிறார் சங்கமன். எவ்வளவு விசுவாசமாக யாரை பாதுகாக்க முனைகிறார் ஏனின், மார்க்ஸ் யாரை எதிர்த்து தன் வாழ்நாள் எல்லாம் போராடினாரோ அந்த கனவான்கள் தான் உண்மையான பெண்விடுதலைவாதிகள் எனக் கூறி பாதுகாக்க முனைகிறார். இந்த கனவான்கள் மட்டும் தான் உலகில் வறுமையின்றியும், மனைவியுடன் உழையாது மணிக்கணக்காக கொஞ்சிக்குலாவ முடிந்தது முடிகின்றது. இதையிட்டு தான் சங்கமன் மார்க்சுக்கு விமர்சனம் வைத்து கொச்சைப்படுத்துகிறார்.

உலகில் மிக மோசமான அடுத்தநேர உணவு என்ன எனத் தெரியாது 100 கோடி மக்கள் வறுமையில் வாடுகின்றனர். இந்த பிரிவு முதலாளிக்காக நாள் பூராகவும் நேரக்கணக்கு இன்றி உழைத்து உழைத்து களைத்து போன நிலையில் தன் நிலையிழந்து கணவன் மனைவி கூடி வாழ இடம் கூட இன்றி பட்டினி பட்டாளங்களாக வாழும் இம் மனிதர்கள் சங்கமனின் கோட்பாட்டின் படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆணாதிக்கவாதிகள், வறுமைக்கும் பெண் ஒடுக்குமுறைக்கும் காரணம் என்கிறார் அருமையான எடுகோள் சங்கமனினது.

உலகில் உள்ள வறுமைக்கு காரணம் உழைப்பு போதாது என்பது முதலாளித்துவ மற்றும் இதன் தத்துவ மேதைகளினதும், அதன் எடுபிடி அரசு பிரதிநிதிகளதும் கோட்பாடு. அதையே மார்க்சுக்கு பொருத்த முனையும் சங்கமன் மார்க்ஸ் உழைத்தது போதாது அல்லது தேவையற்ற சம்பளமில்லாத பிராக்கு பார்த்து மனைவியை வறுமையில் வாடவிட்டு ஆணாதிக்க சுகம் கண்டவர் என காழ்ப்புணர்வுடன் சேறுவீசும் அருமைதான் அருமை.

கேவலமான கேடுகெட்ட இந்த வாதங்கள் எங்கு இருந்து வெளிவருகிறது. யாழ்பாணத்து சுய நலம் பிடித்த குட்டிபூர்சுவா கண்ணோட்டத்துடன் கூடிய, சுரண்டும் வர்க்கத்தை பாதுகாக்கும் முனைப்பில் ஊற்று எடுக்கின்றது. தமிழ் ஈழவிடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்ற காலத்தில் இளைஞர்கள் இயக்கத்திற்கு சென்றபோது பெற்றோர்களும் உறவினர்களும் அறிஞர் பெருமக்களும் சொன்னார்கள் இதை விட்டு விட்டு குடும்பத்தை பார்க்கும் வழியைப்பார் என்றார்கள். குடும்பத்துக்காக உழை என்றார்கள் தங்கை தங்கச்சிக்காக உழை வயது போன பெற்றோரைப்பார் என்ற சுயநலத்துடன் கூடிய பூர்சுவா பார்வையைத்தான் சங்கமன் மார்க்சுக்கு ஒப்பிட்டு முன்வைத்து சேறடிக்கின்றார். இதையே புலிகள் இயக்கங்களை தடை செய்து கைது செய்த போதும் அரசியல் வாதிகளை கைதுசெய்த போதும் சங்கமனின் அதே வழியே முன்வைத்தனர். புலிகள் ஒவ்வொரு கைதியிடமும் சொன்னார்கள் திருமணம் செய் வெளிநாடுபோய் உழை இப்படி சொன்னதைத்தான் சங்கமன் புலியின் அதே அரசியலில் நின்று மார்க்சுக்கு பிழை கண்டு சேறடிக்கின்றார்.

புலிகள் அரசியலை கைவிட பெண்ணுடன் சுகம் கண்டு கொள், உழைத்து பணத்தாசை பிடித்துத்திரி என்பதையே மார்க்ஸ் செய்து இருக்கவேண்டும் என சங்கமன் கூறுகின்றார். முன்னைய போராளிகள் ஐரோப்பாவில் செயல்படுவதை பார்த்தால் புலிகள் தீர்க்க தரிசனம் மிக்கவர்கள் என்பதைக்காட்டுகின்றது. ஆகவே சங்கமன் விரும்புவது இதைத்தான். மார்க்ஸ் செய்து இருக்கவேண்டியது எழுதுவதை விட்டு போராடுவதை விட்டு தான் உண்டு என்று தன் பாட்டில் இருந்து இருக்க வேண்டும். மார்க்சின் எழுத்துக்கள் சங்கமன் போன்ற குட்டி பூர்சுவா கோட்பாட்டுக்காவடிகளை அதன் அச்சிலேயே அச்சுறுத்துவதால் மார்க்சக்கு எப்படியாவது ஆணாதிக்க முத்திரைகுத்தி சேறு அடித்து அவதூறு பொழிந்து விட தலைகீழாக முனைந்து நிற்கின்றார்.

இந்த இடத்தில் ஆண்- பெண் அவர் அவர் சுதந்திரத்தில் தலையிடாத நிலை வேண்டும் எனக் கூறும் சங்கமன் மார்க்சுக்கும்-மனைவிக்கும் பொருந்தாது என விளக்கவில்லை. மார்க்சின் சுதந்திரத்தை பறிக்கும் உரிமை மனைவிக்கும் சரி சங்கமனுக்கும் சரி இல்லை என்பதை மறுத்து சுதந்திரம் இல்லை என சங்கமன் கட்டுரையில் முரண்பட்டு தனது மார்க்சிய எதிர்ப்பு நிலையில் நின்று கூறுகின்றார் இது எதைக் காட்டுகின்றது? அடுத்து மார்க்சுக்கு வைப்பாட்டியிருந்தது எனவும் அப்பெண்ணின் குழந்தையை மார்க்ஸ் தன்னுடையது அல்ல என மறுத்தார் என அடுக்கடுக்கான அவதூற்றை முன்வைத்து மார்க்ஸ் ஆணாதிக்கவாதி என அடுத்த ஆதாரத்தை முன்வைக்கிறார். இது எங்கிருந்து யார் மூலம் பெற்றார் என்ற ஆதாரத்தை முன்வைக்க வேண்டும் என்ற எழுத்துப்பண்பைக் கூட இந்த ஏகாதிபத்திய வாரிசு வசதியாக தனது தேவையுடன் மறந்து போகின்றார்.

மார்க்ஸ் மார்க்சியத்தை நிறுவ போராடிய காலத்தில் அவரின் தத்துவத்தை எதிர்த்து எழுதிப்போராடிய எதிரிகள் கூட முன் வைக்கமுடியாத ஓர் அபாண்டமான குற்றச்சாட்டை இன்று சோடித்து தத்துவ விபச்சாரம் செய்ய வேண்டியுள்ளது சங்கமனுக்கு. மார்க்சியத்தை நிறுவி 150 வருடம் கடந்த மார்க்சிய போராட்டமும், அதன் வரலாற்று தலைவர்களும் இது போல் ஆயிரம் அவதூறுகளையும் சேறடிப்பையும் சந்தித்தனர் சந்திக்கின்றனர். ஆனால் மார்க்சியமும் அதன் தலைவர்களும் காலத்தை கடந்து ஒருபுரட்சிகர தத்துவமாக மீள மீள எல்லாவண்ண எதிரிகளையும் எதிர்த்து நிமிர்ந்து நிற்பதால் எதிரிக்கு எஞ்சிய தாக்குதல் வடிவம் கண்மண் தெரியாத அவதூறுதான். இவ் அவதூறு மாக்சுக்கு மட்டும் வரலாற்றில் இட்டுக் கட்டியவையல்ல. லெனினுக்கு ஒரு கள்ளக்காதலி இருந்தாள் என்றும் மாவோ பல பெண்களுடன் உறவு வைத்து இருந்தவர் என்ற கட்டுக்கதை அவதூறுகள் முடிவற்றவைதான். ஸ்டாலின் கஸ்ரோ பெண் கொடுமைக்காரர் எனவும் ஸ்டாலின் தனது மகனை இரண்டாம் உலக யுத்த வீரனாக அனுப்பிய போது கிட்லர் கைது செய்து பேரம் பேசிய போது ஸ்டாலின் மறுத்து போராடியது தனது மகனை கிட்லர் கொல்லவும், மாவோ தனது மகனை கொரிய யுத்தத்தில் ஈடுபடுத்தி வீர மரணம் அடையவும் காரணமான இவர்கள் பிள்ளை குடும்பபாசமற்ற அரக்கர்கள் என எல்லையில்லாத அவதூறுகளை மார்க்சிய தலைவர்களும் மார்க்சியமும் சந்தித்தன சந்திக்கின்றன.

வாழ்வையே போராட்டமாக மகிழ்சியாக கொண்டு போராடிய மார்க்சிய தலைவர்கள் மீது சங்கமன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்றோர் ஏகாதிபத்திய சக்தியை அதன் விசுவாசநாயாக வால் ஆட்டி நக்கி மீள காக்கி விடத்தான் முடியும். ஆனால் அது ஏகாதிபத்தியம் போல் நாற்றத்தால் நிறைந்தது.

அடுத்து சங்கமன் முன்வைக்கும் பொன்மொழியை பார்ப்போம்.

"உண்மை மார்க்சீயம் பற்றி எத்தனை எத்தனையோ வியாக்கியானங்களும் வெட்டு ஒட்டுக்களும் நடந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் பெண்ணியமும் மார்சீயத்துள் சேர்த்துக்கொள்ளப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதனால் மார்க்சீயமும் பலமுறும் அத்தோடு பெண்ணியமும் பலமுறும்."

மார்க்சியத்தில் எத்தனையோ வியாக்கியானங்கள் ஒட்டுக்கள் நடக்கின்றது என்று கூறி அதை உயர்த்துவதன் மூலம் ஏகாதிபத்திய கோட்பாடுகளை உயர்த்தி முன் வைக்கின்றார். மார்க்சியம் என்பது என்ன? மார்க்சின் பெயரால் அவர் வைத்த தத்துவம்தான் மார்க்சியம் மார்க்சை மறுத்த தத்துவம் மார்க்சியம் அல்ல. மார்க்சுக்கு யாரும் திருத்தமோ சேர்ப்போ ஒட்டோ செய்யமுடியாது. அப்படி செய்வது என்பதும் பின் அதை மார்க்சியம் எனவும் அழைக்கவும் முடியாது. அது வேறு ஒரு கோட்பாடுதான்.

மார்க்சியத்தை மார்க்சின்வழியில் மேலும் வளர்த்து எடுக்க முடியுமே ஒழிய மார்க்சின் அடைப்படைக்கோட்பாட்டை நிராகரித்து அல்ல அவ் அடிப்படை கோட்பாட்டின் மேல் நின்றுதான் இவை எல்லாவிதமான தத்துவத்திற்கும் செயற்தளத்திற்கும். வடிவங்களுக்கும் உலகளவில் போதுமானது. சரிநிகர். சரிநிகர் நிறுவனத்துக்கு தான் சொந்தமானதே ஒழிய விரும்பிய எவரும் அதன் பெயரில் பத்திரிகை விட முடியாது. சங்கமன் அவர்களே உங்கள் பெயரில் யாரும் கட்டுரை எழுத முடியாது அல்லவா? அல்லது உங்கள் பெயரில் உள்ள கட்டுரைக்கு வெட்டு ஒட்டு வியாக்கியானம் செய்து வெளியிட முடியாது அல்லவா. இங்கு சங்கமன் முன்வைக்கும் வெட்டு ஒட்டு வியாக்கியானங்கள் மார்க்சியத்திற்குள் அல்ல அதற்கு வெளியில்தான் நடக்கின்றது. இது மார்க்சியத்தின் பெயரில் உள்ள ஏகாதிபத்திய சாக்கடைகள் தான்.

அடுத்து சங்கமன் கூறுவதை பார்ப்போம்.

பெண்ணிநிலை வாதிகள் இன்று ஒரு முக்கிய சக்தியாக திகழத் தொடங்கியுள்ளார்கள் என சங்கமன் அடித்து சத்தியம் செய்கிறார். எங்கே ஐயா? கொஞ்சம் விளாவாரியாக அலசி ஆதாரம் காட்டியிருக்கலாம். கொழும்பிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் புலிகள் கட்டுப்பாடு இழந்த பிரதேசங்களிலும் உள் 90% மான பெண்ணிலைவாதிகள் இன்று தன்னார்வ குழுவின் சம்பளப் பட்டியலில் இயங்கி ஏகாதிபத்திய தலையீட்டுக்கு மறைமுகவும் நேரடியாகவும் காவடி எடுக்கின்றனர். இது பொதுவாக எல்லா மூன்றாம் உலகநாடுகளின் பொதுவான நிலை. பெண்ணிய போராட்டம் என்பது இல்லை என்ற அளவுற்கு சிதைந்து போய் உள்ளது. இன்று பூர்சுவா பெண்ணிலைவாதமும் ஏகாதிபத்திய பெண்ணிலைவாதமும் கோட்பாடு அற்ற கலவை புலம்பலும் (இங்கு கோட்பாடு இல்லை என அவர்கள் கூறிக்கொள்வர் ஆனால் அதன் பின் ஒரு கோட்பாடு உள்ளது) தான் பெண்ணிலைவாதமாக உள்ளது. இதுதான் பெண்ணிலைவாதமாக காட்டப்படுகின்றது. இது உண்மையில் ஆணாதிக்கமாக உள்ளது. ஆணாதிக்கத்தை தக்க வைக்கும் கோட்பாடாகும்.

இங்கு சங்கமன் பெண்ணிலை வாதம் என எதை எடுத்து முன்வைக்கிறார் எனப்பார்ப்போம்.



"கட்டற்ற சுதந்திரம்? ஆண் பெண் இருபாலாரையும் ஒருவரோடு ஒருவர் சேர்த்து வைக்கும் ஒழுக்கக்கோட்பாடும் எதிர்காலத்தில் இதுவாகவே இருக்கும்." என கட்டற்ற சமூகம் பற்றி பேசியபடி அதற்கு உதாரணமாக "சோஷலிஷ நாடாக இருந்த பல இடங்களிலேயே மார்க்சீயக்கருத்துக்கள் வலுவிழந்து போயிருந்தாலும் உலகெங்கும் பெண்ணிய நோக்குக்கு" சாதமான நிலைகளே உருவாகிவருகின்றன. இப்போது மேற்கில் குடும்பம் என்ற பெண்களைக்கட்டிவைத்த கட்டுக்கள் அறுபடுகின்றன. அங்கு பெண்களுக்கான தொழில் வசதிகள், விவாகரத்து முறைகள், கல்வி, ஒரு பாலுறவு போன்றவை எல்லாம் அவளை ஆணாதிக்கம் விரித்த தளைகளில் இருந்தெல்லாம் விடுதலை அளித்துள்ளன."

என சங்கமன் ஐரோப்பியாவில் பெண் விடுதலை கிடைத்து விட்டது என பிரகடனம் செய்கிறார். இவை பெண்விடுதலையை வழங்கிவிடுமா? பால் போச்சியில் பால் சூப்பும் குழந்தைக்கும் தெரியும் இவை பெண்விடுதலையல்ல என்பது. ஆணாதிக்கவாதிகள் தமது ஆணாதிக்க செயல்பாட்டை தக்கவைக்க வழங்கிய சில சீர்திருத்த சலுகைகள் தான் இவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதாவது வாக்கு அளிக்கும் உரிமை மறுக்கப்பட்டு இருந்த போது வாக்கு அளிக்கும் உரிமை பெறின் ஒருவன் சுதந்திரமனிதனாக மாறிவிடுவானா? இல்லை ஒருக்காலும் இல்லை. பெண்கள் ஆண்களை போல் எல்லாவற்றிலும் ஈடுபட உரிமை வேண்டும் என போராடும் ஜனநாயகக்கோரிக்கை பெண் விடுதலையாகிவிடாது.

இன்று மேற்கு நாடுகளில் என்ன நடக்கின்றது குடும்பம் எப்படி சிதைகின்றது என்பதை அறிவுபூர்வமாக ஆராய்வோம்.

மேற்கு நாட்டு குடும்பங்களின் சிதைவு ஒற்றை பொருளாதார விகாரத்தில் நடக்கின்றது. சமூகம் எப்படி குலங்களாக பின் கூட்டுக்குடும்பமாக பின் குடும்பமாக சிதைந்ததோ அதே திசையில் தனி நபராக சிதைக்கின்றனர். சொத்துரிமை ஆணுக்கு மட்டும் என இருந்து இன்று பெண்ணிடம் பங்கிடும் நிகழ்வின் தொடர்ச்சியில் குடும்பம் சிதைந்து தனிநபர் தத்தம் சொத்துரிமை பத்திரத்தை கோருகின்றனர். அதாவது இது சொத்துரிமை என்ற தளத்தில் நடக்கின்றது. ஆண்-பெண்-பிள்ளை-பெற்றோர் என அனைத்து தளத்திலும் தனிச் சொத்துரிமையின் விகரத்தில்தான் குடும்பம் சிதைகின்றது. இது புலம்பெயர் தமிழ் சமூகத்துக்குள்ளும் தொற்றியுள்ளது.

இங்கு இந்த குடும்ப சிதைவு ஆரோக்கியமாக அல்ல. வரலாற்றின் தனிச் சொத்துரிமையின் விகாரத்தில் அவலட்சணமாக சிதைகின்றது. கூட்டு வாழ்வு கூட்டுசெயல்பாடுகள் என பல தளத்தில் குடும்ப சிதைவு மறுதலிக்கின்றது. இந்தச் சிதைவு என்ன விளைவை கொடுக்கின்றது என ஆராய்வோம்.

இது ஆண் பெண் உறவில் விபச்சார கலாச்சாரத்தை நடை முறையாக்கியுள்ளது. மேற்குநாட்டு சமூகத்தின் உடல் உறவாக்கம் விபச்சாரத்தன்மைக்குள் மெதுவாக நகர்கின்றது. ஆண் பெண்ணுக்கு இடையிலான இயல்பான உடல்உறவு உணர்ச்சி, இன்று மேற்கு நாடுகளில் இயல்பாக தீர்த்துக் கொள்ளும் வழி அடைபட்டு தீர்க்கப்பட முடியாத வகையில் பிளந்துபோயுள்ளது. முன்பு இருந்த இருக்கின்ற ஆணாதிக்க குடும்பஅமைப்புக்குள் குறைந்தபட்ச பரஸ்பர ஆணாதிக்க சுரண்டல் உடன் இருந்த ஆண்-பெண் உணர்ச்சியை (இதுமென்மையாகவும் கொடூரமாகவும் ) தீர்க்கும் வழி, இன்று அடைபட்டு இல்லாது போகும் நிலை என்பது, மறுதளத்தில் முன்பைவிட மிக மோசமாக ஆணாதிக்க வக்கிர விகாரமாக மாறி உள்ளது. இன்று சமூகத்தின் பெரும்பகுதி விபச்சாரிகளை நாடிச்செல்வது வாடிக்கையாக உள்ளது. ஒருபுறத்தில் வீதிவிபச்சாரிகளை நாடிச்செல்லும் அதேநேரம் மறுபுறத்தில் ஒருவரை-யொருவர் மாற்றிக்கொள்வதுடன் இன்று டிஸ்கோ உடனடியாக போதை விபச்சார இடமாகவும் "கட்டற்ற சுதந்திரத்தின்" மையமாகவும் மாறியுள்ளது. பண்பாட்டை தான் மேற்கு நாடுகளில் சமூகதன்மையாக மாற்றவும் சிதைக்கவும் எல்லா செய்தி ஊடகமும் தீவிரமாக முனைகின்றன. இதுதான் "கட்டற்ற சுதந்திரத்தின்" மையமாக உள்ளது.

டிஸ்கோவில் என்ன நடக்கிறது மெய்மறந்த போதையில் மெய்மறந்த இசையில் சுதந்திரகாதல், பண்பாடு கலாசாரம் என அனைத்தும் விபச்சாரமாக சிதைகின்றது. அதாவது சிதைந்த குடும்பத்தின் பிரதிநிதிகளின் பாலியல் உணர்ச்சியை தீர்க்கும் மையமாக டிஸ்கோ உள்ளது. இது நவீன விபச்சாரவிடுதிகளை மெய்மறந்த போதையில் மெய்மறந்த இசையில் அரங்கேற்றுகின்றது. அதாவது விபச்சாரத்தை விட்டால், சிரழிவு டிஸ்கோ கலாசாரத்தை விட்டால் இந்த குடும்ப சிதைவு சமூகத்திற்கு வேறு தீர்வு "கட்டற்ற சுதந்திரம்" கிடையாது. இது ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவானது. மனித உறவுகள் மலர வேண்டியதுக்கு பதில் தனிச்சொத்துரிமையின் பிளவுகள சமூகத்தில் வீங்கிப் போய் வெம்பிப் போய் உள்ளது. அதாவது இந்தியா அனுசரணையுடன் இயக்கங்கள் வீங்கி வெம்பியது போல் குடும்பச்சிதைவு வெம்பிப் போய் உள்ளது.

சாதாரணமாக ஆண் பெண்-குடும்பத்திற்கு வெளியில் (இது திருமணம் செய்தாலும் சேர்த்து வாழ்ந்தாலும்) உள்ளவர்கள் தனிமரங்களாக காய்ந்து திசையறியாது தடுமாறுகின்றனர். இச் சமூகத்தின் முன் உள்ள ஒரே தீர்வு விபச்சாரமும் போதையேறிய மயக்கமும்தான் ஒரே முடிவாக உள்ளது. இதைத்தான் பெண்விடுதலை, கட்டற்ற சுதந்திரம் எனப்போற்றுகின்றார் சங்கமன் என்ற ஏகாதிபத்திய கலாசார காவடி. கட்டற்ற சுதந்திரம் இது எப்படி இருக்க முடியும். சமூகத்தில் இருந்தபடி இந்த பூமியில் இருந்தபடி ஒரு மனிதன் தனியான சுதந்திரமான மனிதனாக எப்படி இருக்க முடியும்?

பூமியில் ஒரு மனிதன் இயற்கைக்கு வெளியில் சுதந்திரமாக "கட்டற்ற சுதந்திரத்துடன்" எப்படி வாழமுடியாதோ இதே போல் மனித சமூகத்துக்குள் இருந்தபடி "கட்டற்ற சுதந்திரத்துடன்" சமூகத்துக்கு வெளியில் இருக்க முடியாது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மனித சமூகத்துக்கும் இயற்கைக்கும் உட்பட்ட சுதந்திரம் தான் இருக்க முடியும். அதற்கு உட்பட மனித ஒழுக்கமும் இருக்கும். இது ஆண்-பெண் இருவருக்கும் பொதுவானது வேறுபட்டு அல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகில் எல்லாம் ஒழுங்குக்கு உட்பட்டது. வான்வெளி, நட்சத்திரங்கள், சூரியன், பூமி---என அனைத்து பொருளும் ஒழுங்கு விதிக்கு உட்பட்டது. இந்த ஒழுங்கு விதிக்கு வெளியில் சுதந்திரம் என்பது பொய்யானது, கற்பனையானது. ஒழுங்குக்கு உட்பட சுதந்திரம் தான் உண்டு. சுதந்திரமான மனிதன் சுதந்திரமான காதல்---என அனைத்தும் உண்மையில் பூர்சுவா கண்ணோட்டத்தின் கனவு கோட்பாடுகளே. அத்துடன் இது முதலாளித்துவ பிரிவுகளின் கோட்பாடுமாகும். கட்டற்ற சுதந்திரத்தில் ஆண்-பெண் என்ன நிலையில் உள்ளனர் என்பதற்கு குடும்ப அமைப்புக்கு அன்று எங்கெல்ஸ் கூறிய கூற்று இன்று இரண்டிற்கும் பொதுவானதான உள்ளது அதை பார்ப்போம். "இலக்கணத்தில் இரண்டு எதிர் மறைகள் உடன்பாட்டுப்பொருள் ஆவது போல திருமண ஒழுக்கங்களில் இரண்டு விபச்சாரங்கள் ஒரு நன்னெறி ஆகின்றன" என்றார் எங்கல்ஸ். இது இன்று கட்டற்ற சுதந்திரமான குடும்ப சிதைவுக்குள் ஆழமாக விகாரமாக மாறியுள்ளது. சுதந்திரமான கட்டற்ற காதல் இருக்க முடியாது. சமூகபொருளாதார எல்லைக்குள் தான் ஒவ்வொருகாதலும் இருக்கும். இதற்கு வெளியில் இருப்பது இல்லை. மனித வாழ்க்கை போராட்டம் தான் மனித இருப்பின் இணைப்பின் மையங்களாகும். மனித போராட்டத்திற்கு வெளியில் சுதந்திரமான இயக்கம் என்பது பூர்சுவா கண்ணோட்டத்தை கோருவதேயாகும்.

உலக பொருளாதார உலகமயமாதலில் தேசிய பொருளாதாரம் கட்டுடைக்கப்பட்டு கட்டற்ற சுதந்திரத்தை பன்னாட்டு நிறுவனங்கள் பெறுகின்றன கோருகின்றன. இதன் தொடர்ச்சியில் எல்லா சமூக பொருளாதார இயக்கமும் கட்டுடைந்து கட்டற்ற சுதந்திரம் பன்நாட்டு நிறுவனங்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் கிடைக்கின்றன, கோருகின்றன. இதன் தொடர்ச்சி அதன் அங்கத்தின் சிதை வில் குடும்பம் மேற்கு நாடுகளிலும் மூன்றாம் உலகநாடுகளிலும் சிதைகின்றது. இதையே சங்கமன் தனது தலையில் தூக்கி நிறுத்தி ஆட நினைக்கும் ஆட்டம் பெண் விடுதலை அல்ல, மாறாக ஆணாதிக்கத்தை ஏகாதிபத்திய வழியில் மறுவார்ப்பு செய்வதே.

மார்க்ஸ், மகிழ்ச்சி என்பது போராட்டமே ஒழிய வேறு ஒன்றுமல்ல என்றார். மார்க்ஸ் மார்ச்சியத்தை நிறுவும் கடும் உழைப்பின் ஊடான போராட்டத்தில் வறுமையையும், பிள்ளை இழத்தலும் நோய்துன்பத்தால் நீடித்த போராட்டத்தையே தனது வாழ்க்கையாக்கி அதையே மகிழ்ச்சியாக கொண்டும் உலகின் கோடான கோடி உழைக்கும் மக்களுக்காக வாழ்ந்தார். இதை கொச்சைப்படுத்தி இதை ஆணாதிக்கம் என சேறடிப்பதன் மூலம், இன்று போராடும் மனிதர்களை எல்லாம் கொச்சைப்படுத்தி, ஏகாதிபத்திய உலகமயமாதல் உலக ஒழுங்கை பேண போராடும் தலைவர்களும் மக்களும் தேவையில்லை என மறைமுகமாக கூறுகிறார். அதுதான் மேற்கு நாட்டு கட்டற்ற சுதந்திரத்தை முன்தள்ளுகின்றார். மார்க்ஸ் மிக கடினமான முன்னொருபோதும் முன்வைக்காத ஒரு கோட்பாட்டை பல நாடுகடத்தல்கள் ஊடாக மிக மோசமான வறுமையின் ஊடாக, மிக மோசமான நோயிலும் பசி பட்டினியுடன், சுயநலம் இன்றி போராடித்தான் உலகின் ஒடுக்கப்பட்ட அனைத்துப் பிரிவு மக்களுக்கு மார்க்சியத்தை முன்வைத்தார்.

எந்தவிதமான உப்புச்சப்பும் இல்லாத முதலாளித்துவ குப்பைகளை வெளியிடுபவர்களுக்கு அரசே வசதிசெய்து பணம் கொடுத்த நிலையில், மார்க்ஸ் எழுத்தை தடைசெய்தும் நாடுகடத்தியும் வறுமையிலும் வதைத்து கொன்றனர் இந்த முதலாளித்துவ கனவான்கள். மார்க்சின் வறுமைக்கு காரணம் குழந்தை இறப்புக்கு காரணம்--- என அனைத்துக்கும் இந்த சமூகமைப்பும் இந்த முதலாளித்துவ சமூக அமைப்பும் இந்த முதலாளித்துவ கனவான்களுமே காரணமாகும். ஆனால் சங்கமன் அதே பாணியில் சமூகத்துக்கு வெளியில் தனிநபர் மார்க்சை குற்றம்சாட்டுவது என்பது மார்க்சுக்கு சேறுவீசுவதன் மூலம், சங்கமனை அச்சுறுத்தும் மார்ச்சியம் என்ற புரட்சிகரதத்துவத்தை ஆழக் குழியில் தோண்டி புதைக்க முனையும் கனவுகளில் எழுந்ததே.

ஆண் பெண் கட்டற்ற சுதந்திரம், சுதந்திரகாதல்---என்பன எல்லாம் உண்மையில் விபச்சாரத்தை தங்கு தடையின்றி சுதந்திரமாக கோரும் ஆணாதிக்க பூர்சுவா கனவுகள் ஆகும். ஆண் பெண் சந்திப்பு இணைவு என்பது மனித போராட்டத்தின் ஊடேயான, மனித இருப்பின் மீதான சமூக வாழ்வு மீதான இயற்கை மீதான---ஒழுங்குக்கு உட்பட்டதாக கட்டுப்பாடு அற்ற இயல்பான இணைப்பாக இருக்க வேண்டும். இது ஆண் பெண் என்ற இருவருக்கும் உட்பட்ட சேர்வு இணைவு சுயநிர்ணய எல்லைக்குட்பட்டதாக இருக்கவேண்டும் இன்றைய குடும்ப அமைப்புக்கு பதில் புரட்சிகர குடும்ப அமைப்பு, கூட்டு குடும்ப அமைப்பு புரச்சிகர சமூக அமைப்பால் பிரதியிடப்படவேண்டும். உதாரணமாக இன்றைய கல்விக்கொள்ளை பிழை என்பதால் பாடசாலையை இடிப்பது அல்ல. மாறாக புரட்சிகர கல்விக்கொள்கையை கோரவேண்டும். அதுபோல் கட்டிட அமைப்பில் புரச்சிகர கல்விக்கொள்கைக்கு ஏற்றதாக மாற்றம் வேண்டும். இதை விட்டு கல்வி அற்ற கட்டிடம் அற்ற நிலையை உருவாக்குவது அல்ல. இதுபோல் தான் குடும்பம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று காணப்படும் வாழ்வு மீதான பயங்கள் இணைவு மீதான சிறைகள், சிறை மீதான அவலங்கள்---- என எல்லாம் மனித விரோத செயல்களும் குடும்பத்துக்குள்ளும் வெளியிலும் புரையோடிப்போய் உள் ளது. இன்றைய குடும்ப அமைப்பும் குடும்ப சிதைவும் கூட ஒரே பொருளாதார நலன்களை மட்டும் அடிப் படையாக கொண்ட ஆணாதிக்க செயல் தளத்தில் வேறுபட்ட பிரிவுகளை பிரதிநித்துவம் செய்கின்றது அவ்வளவே.

இந்த இடத்தில் பெண் விடுதலையின் அங்கமாக காட்டும் ஒரு பாலுறவு, எப்படி பெண் விடுதலையாகி விடும். மனிதனின் பரிணாமத்திலும் சரி எல்லா உயிரியல் பரிணாமத்திலும் சரி எதிர் நிலை முரண்பாட் டில் புணர்ச்சி இயல்பான ஆர்வம் ஊட்டும் வகையில் இன்பத்தை கொடுப்பதாக இயல்பான உணர்ச் சியாக இருந்தது. இது இயற்கை விஞ்ஞானத்திலும் பரிணாமத்திலும் எதிர்ப்பால் உட்பட்ட புணர்ச் சியே இயற்கை கோரியது.

ஆனால் மனிதன் வழக்கம் போல் இயற்கையை அழிப்பவன் என்பதால் தனது சொத்துரிமையை பாதுகாக்க சுரண்டல் அமைப்பு உருவாக்கிய ஆண்- பெண் பிளவின் அடிப்படையில் இயற்கையான புணர்ச்சியை சிதைத்தது. ஆண் பெண்ணுக்கு இயல்பான ஆர்வமான உணர்ச்சியை தணித்துக் கொள் ள இருந்த இயற்கையான வழி அடைபட்ட நிலையில் ஆணாதிக்கமே ஒருபால் உறவுக்கு இயற்கைக்கு விரோதமாக வித்திட்டது. ஒருபால் உறவு ஆணாதிக்கத்தின் கொடையே ஒழிய பெண் விடுதலையின் புகழ் பூத்த விடுதலையல்ல. மாறாக ஆணாதிக்கத்தின் சாக்கடையே. ஆணாதிக்கம் தொடர்ந்து பேண அதன் உடன் சமரசம் கண்டு கொள்ள இன்று ஓர் இனச்சேர்க்கைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது அவ் வளவே

"தனிச்சொத்து குடும்பம் என்பவையெல்லாம் மான்யகால தந்தை வழிச்சமூகத்தின் உருவாக்கம். உண் மையான பொதுவுடைமை மலர்ச்சியில் அரசு வாடுவது போல் இவையும் அற்றுப்போய் விடும் என்கிறது மார்ச்சீயம். கூடவே இப்பார்வையில் பெண் என்பவள் ஆணொருவனின் சொத்தாகவே போகப்பொருளாகவே கொள்ளப்படுகிறாள். இந்த சொத்தென்ற ஒன்றிலிருந்தே "கற்பு" போன்ற பல ஆணாதிக்கக் கோட்பாடுகள் பெண் மேல் திணிக்கப்படுகின்றன இல்லையா? இவற்றின் மூலமே பெண்ணின் அடிமைச்சாசனம் எழுதப் பட ஏதுவாகிறது. மார்க்சீயத்தில் இத்தகைய கருத்துக்கள் இருந்தபோதும் பெண்ணிய நோக்கு அதில் பிரக்ஞைபூர்வமாக இடம் பெறாமையால் அதில் பல முன்னுக்குப்பின் முரண்பட்ட கருத்துக்கள் உள் ளன."

என முன்வைக்கும் சங்கமன் மார்க்சீயம் ஆணாதிக்கம் கொண்டது என்கிறார் மார்க்சீயம் முன்னுக்கு பின் முரண்படுகிறது என்று கூறும் இந்த கனவான் ஓர் ஆதாரத்தையும் முரண்பாட்டின் மீது முன்வைக்க முடியாமல் போயுள்ளார். வார்த்தை வார்த்தையாடல் ஊடேயான சேறடிப்பு தான் மிஞ்சியது. மார்க்சீயம் மார்க்சீயம் மட்டுமே பெண் பிரச்சனையை அதன் விடுதலைத் தத்துவத்தை மிகச் சரியாக துல்லியமாக ஆய்வு செய்தது மட்டும் இன்றி அதற்காக உயிர்தியாகம் செய்து போராடுகின்றது. இது போல் கடந்த கால போராட்டங்கள், வெற்றிகள் அனைத்தின் பின்பும் மிக ஆழமான போராட்டங்கள் தியாகங்கள் வெற் றிகள் உடன் மாச்சீயம் தன்னைத்தானே புடம் போட்டுள்ளது. வேறு எந்த தத்துவமும் போராட்டமும் கூட உரிமை கோர முடியாத அளவுக்கு இதன் வெற்றி கோட்பாடு தனிச்சிறப்பானவையாக இன்றும் மிளிர்கின்றது. பெண்ணை பெண்ணாக அடையாளப்படுத்தியது மார்க்சியம் தான். அடக்கப்பட்ட அடிமைப் படுத்தப்பட்ட பெண்ணை முதன் முதலில் ஸ்தாபனப்படுத்தி வீதியில் இறக்கியதும் மார்க்சியம் தான். எதிர் காலத்தில் பெண் விடுதலையை பெற்று தரும் ஒரே ஒரு கோட்பாடு மார்க்சியம் மட்டும் தானே ஒழிய வேறு எந்த கழிசடைவண்ணக்கோட்பாடும் அல்ல. இவை பெண்ணை ஆணாதிக்கம் என்ற அதே இடத்தில் இருத்தி வைக்க சில சலுகைகள் பெற்று சீர்திருத்தம் செய்து ஏமாற்ற மட்டுமே முடியும்.

"அதாவது ஆண் பெண் இருபாலரையும் ஒருவர் மற்றவரின் சொத்தாக போகப் பொருளாக நினைக்க வைப்பதும் அதனால் ஏற்படும் நோக்கால் ஒருவரை மற்றவர் விவகாரங்களில் தலையிட வைப்பதும் இக் கட்டற்ற சுதந்திரத்தால் இல்லாமல் போகிறது. எஞ்சியிருப்பது அன்பு மாத்திரமே. கட்டற்ற சுதந்திரம் என் பது கட்டற்ற அன்பாக காதலாக மாறலாம்....
அதுதான் ஏற்கனவே கூறிய கட்டற்ற விடுதலையும் அதன் வழிவரும் கட்டற்ற அன்பும்!. இந்தபார்வையில் பெண்ணின் எந்த அங்கமும் போகப்பொருளாகவும் ஆபாசமாகவும் பார்க்கப்படமாட்டாது. மாறாக எல்லாம் அன்பின் உயிர்ப்பாகப் பார்க்கப்படும்."

மேலும் சங்கமன் கட்டற்ற சுதந்திரத்தில் அன்பு காதல் எப்படி சுதந்திரமாக செயல்படும் என்பதை விளக்கமுடியவில்லை. எப்படி பெண்ணின் அங்கங்களை திமர் என ஆபாசமாக பார்ப்பது அற்றுவிடும் என விளக்கமுடியவில்லை. மாயமந்திரம் மட்டும்தான் சினிமா காட்ட உதவும். ஐரோப்பிய கட்டற்ற சுதந்திரத் தில் பெண் இன்று எவ்வளவு கேவலமாக மாற்றப்பட்டு உள்ளார் என்பதை நடைமுறையில் சுதந்திரமாக தங்குதடையின்றி காணமுடியும். இங்கு பெண் பெண் உறுப்பு என அனைத்தும் ஏன் அவள் போடும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்ட உடுப்பு கூடஆபாசமாக மாற்றப்பட்டு வியாபாரமாக உள்ளது. ஆண்-பெண் உறவு கூட சந்தை பொருளாக பண்டமாக மாற்றப்பட்டு விட்டது. காதல் அன்பு சந்தை பொருளாகி உள்ளது. இன்று ஒவ்வொரு வீட்டிலும் இந்த வியாபாரம் தான் எஞ்சிப்போய் உள்ளது.

1915 இல் இனெஸ்ஸா அர்மாண்ட் முன்வைத்த "சுதந்தரமான காதல்" என்பதை லெனின் எதிர்த்து இது ஒரு பூர்சுவாக் கோரிக்கையே தவிர பாட்டாளி வர்க்க கோரிக்கையல்ல என்றார்.

கட்டற்ற சுதந்திரம், சுதந்திர காதல், சுதந்திர அன்பு என்ற அனைத்துக் கோட்பாடும் பூர்சுவா கண்ணோட்டத்துடன் கூடிய. இன்றைய திறந்த பொருளாதாரக் கொள்கையின் உலகமயமாதலினை ஊக்குவித்து பாதுகாக்க முனையும் வண்ணக்கலவையாகும். இக் கோட்பாட்டை முன் வைப்போர் உண்மையில் மார்க்சியத்தை எதிர்த்து உலக மயமாதலைப் பாதுகாக்க தமது தீவிர. முன் முயற்சியின் ஓர் அங்கமே இக்கட்டுரை. இவர்களின் சொந்த முகங்களை இனம் கண்டு கொள்வதும், அவர்களையும், இக் கோட்பாட்டையும் அம்பலப்படுத்துவது இன்றைய வரலாற்றுக் கடமையாகும்.

ஓரினச் சேர்க்கை விடுதலையின் தத்துவமாகவும், மனிதர்களுக்கு இடையில் ஜனநாயக பூர்வமா நடப்பதால் "கட்டற்ற சுதந்திரம்" அடிப்படையில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என சங்கமன் முதல் அ. மார்க்ஸ் ஈறாக அடித்துப் பிடித்து நியாயப்படுத்துகின்றனர். இது உண்மையா?

மேற்கு நாடுகளின் கோட்பாட்டுமையமான பிரான்சில் வெளிவந்த ஒரு நூலிலிருந்து 'Liberation' என்ற பத்திரிகை 26-02-98 வெளியிட்டுள்ள கட்டுரையில் இருந்து பார்ப்போம்.

சிறுவர், சிறுமியர் எப்படி ஓரினச் சேர்க்கைக்கு பல்கலைக்கழக பகிடி வதை போன்று பயன்படுத்தப் படுகின்றனர் எனப் பார்ப்போம்.

| ஆண்டு<br>யாருடன் | 1985 | 1991 | 1993 |
|---|---|---|---|
| தகப்பன் | 15 % | 23 % | 27 % |
| தாய் | 27 % | 37 % | 43 % |
| சகோதரன்-சகோதரி | 32 % | 44 % | 49 % |
| பாடசாலை | 35 % | 43 % | 45 % |
| நண்பர்கள் | 41 % | 56 % | 62 % |

இது எதைக் காட்டுகின்றது இங்கு "கட்டற்ற சுதந்திரம்" என்ற பெயரில் சிறுவர் சிறுமிகள் ஓரினச் சேர்க்கைக்கு குடும்பத்தில் இருந்து நண்பர்களுக்கு இடையில் பந்தாடப்படுகின்றனர். பாலியல் பற்றிய அறிவு பூர்வமான அறிவு புறக்கணிக்கப்பட்ட நிலையில் இங்கு செய்தி ஊடகங்கள் இட்டுக்கட்டும் வீங்கி வெதும்பும் செக்ஸ் படிமங்களின் மூலம் இச் சமூகம் பந்தாடப்படுகின்றது. இவை பெருமளவில் வெளிவராமைக்கு முக்கிய காரணம் குடும்பத்துக்குள்ளும் நண்பர்களுக்குள்ளும் நடப்பதுடன் இது அடுத்த சந்ததிக்கு கடத்தப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களில் பகிடி வதை (ராகிங்) எப்படி ஒரு பழைய மாணவன் வக்கிர அதிகாரத்துடன் செய்ய புதிய மாணவன் எதிர்ப்போடு இணங்குகின்றானோ, அதையே பின் அடுத்த தலைமுறைக்கு கடத்துவது போன்று இந்த ஓரினச் சேர்க்கை வேறுபாடு இன்றி அதே அச்சில் கட்டியமைக்கப்பட்டுள்ளது. 1970 களில் பிரான்சில் நடந்த போராட்டமும், அதை ஒட்டி அதை மழுங்கடிக்க முன் வைக்கப்பட்ட பல எதிர்நிலைக் கோட்பாடுகள் தான் இதன் அச்சாணியாக இருந்தது.

மனிதர்கள் தனிநபராக மாற மாற மேலும் மேலும் இது தீவிரமடைகின்றது. தமது செக்ஸ் தேவையை பூர்த்தி செய்ய முடியாத அவலத்தால் ஓரினச் சேர்க்கையும் டிஸ்கோ கலாசாரமும் தேவைக்கு வழிவிடுகிறது. இந்த இடத்தில் சங்கமன் "கட்டற்ற சுதந்திரம் நிலவிய காலத்தில் தாய், தனயன் உடலுறவு, தங்கை சகோதரன் உடலுறவு என்ற கட்டற்ற போக்கு இருந்தது. இப்போது எச்ச சொச்சங்கள் இருந்து வருகின்றன. இந்நிலையில் மனித நாகரீகம் எதுவாக இருக்கும்." எனக் கேட்டு இது இனி ஏற்படாது ஏனெனின் அன்று நாகரீகத்தின் குழந்தைப்பருவம் எனக் கூறி நடக்காது என மாரடித்துள்ளார். ஆனால் புள்ளி விபரம் எதைக் காட்டுகின்றது. எதிர்மறையில் தான் இது உள்ளது. "கட்டற்ற சுதந்திரம்" என்பது "கட்டற்ற விபச்சாரத்தையும்" கட்டற்ற குடும்பச் சிதைவையும் " கட்டற்ற குடும்ப உறவையும் " தொடங்க அடிப்படை மகுடியாக உள்ளது.

www.tamilarangam.net

# புலிகள் விமர்சனம் செய்துள்ளனராம், விமர்சனம் செய்ய கருத்துச் சுதந்திரம் வழங்கியுள்ளனராம்

## பச்சோந்தி சிவத்தம்பி கூறுகின்றார்:



சரிநிகர் 131 இல் காலம் பத்திரிகையில் இருந்து மறுபிரசுரம் செய்யப்பட்ட பேராசிரியர் சிவத்தம்பியின் "மேலிருந்து திணிக்கப்படுகின்ற அரசு அதிகாரமே தமிழ் பிரக்ஞைக்கு ஓர் அரசியல் வடிவத்தைக் கொடுக்கின்றது" என்று தலைப்பிட்டு வழங்கிய பேட்டியில் -

"....... முஸ்லீம் மக்களை எங்களிடமிருந்து பிரிக்க முடியாதிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். அதாவது முஸ்லீம் மக்களுக்குச் செய்யப்பட்டது பிழை என்பதை எடுத்துக் கூறுகிற அளவுக்கு (யார்?) அதை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கும் (யார்?) தமிழ் தேசியம் சுயவிமர்சனம் செய்துள்ளதனை நீங்கள் பார்க்க வேண்டும்." (அடைப்புக் குறிக்குள் யார் என எழுதியது நாம்)

"நான் சொல்லும் தமிழ் பிரக்ஞையில் தன்னைத்தானே திருத்திக் கொள்ளும் (யார்?) சுயவிமர்சன ஆற்றல் இருக்கின்றதென்றே கருதுகின்றேன்." என சிவத்தம்பி மனித உரிமை மீறல் எல்லாம் சரியாகி விட்டது, மன்னிப்பு கோரப்பட்டு விட்டது என கரடிவிட்டு தனது சொந்த அரசியல் சோரத்தை மிக அழகாக இனம் காட்டியுள்ளார். இது அண்மைக்காலமாக உலகெங்கும் போப், கிளிங்டன், சிராக் என உலக ஆளும் அதிகார வர்க்கத்தலைவர்களிலிருந்து கீழ் வரை அடிக்கடி கடந்த கால நிகழ்வுகளுக்கு பாவ மன்னிப்பு கோரப்படுகின்றது. ஒரு வார்த்தை பத்தாண்டுக்கு சமூக கொந்தளிப்பை தணிக்க முடியும் என்ற நப்பாசை நம்பிக்கை ஊடாக எழுந்து வரும் கபடம் தான் உலகு எங்கும் அடிக்கடி நடக்கிறது.

இது ஒரு புறம் தொடர மறுபுறம் தன்னார்வக்குழுக்களுக்கு (NGO) சமாந்தரமாக, உலக பணக்கார கோமாளிகள் சமூக சேவைக்கு எனப் பணம் கொடுத்து, ஏழைகளுடன் உட்கார்ந்து சினிமா நாடகத்தை தமது ஆடம்பர அட்டகாசத்துடன் தொடரும் வியாபாரம் கொடிகட்டிப்பறக்கின்றது. இந்த வழியில் இலங்கையில் சந்திரிகா ஆட்சி ஏறிய உடன் எல்லாம் மாறிவிட்டது என்றும் இலங்கையில் ஜனநாயகத் தெய்வமான சந்திரிகாவை போற்றுவது என ஒரு கூட்டம் காவடி எடுத்து ஆடுகின்றனர்.

இந்த சந்திரிகாவின் மிக கொடூரமான வக்கிரமான மனித முகம் இழந்த இனவாத பாசிச ஒடுக்குமுறை, இன்னுமொரு புறத்தில் சில புத்திஜீவிகளை புலிகளின் செயல்களுக்கு மனித முகம் கொடுக்க கடும் முயற்சி செய்கின்றனர். இந்த வகையில் சிவத்தம்பி, ஜெயபாலன், போன்றோர் இம்முயற்சியில் ஈடுபட்டு கருப்பை வெள்ளையாக்க நாய்வாலை நிமிர்த்த முனைவது போல் தீவிரமாக முனைகின்றனர். முஸ்லீம் மக்கள் அன்று புலிகளின் கால்களில் விழுந்து கெஞ்சியபோதும் எந்தவிதமான ஈவு இரக்கமும் இன்றி துரத்தியதை, இன்று சுயவிமர்சனம் செய்துள்ளனர் என்கிறார் சிவத்தம்பி. செய்தது பிழை என எடுத்துக்கூறக்கூடியளவுக்கு அதை ஏற்றுக் கொள்ளுமளவுக்கு தமிழ் மண்ணில் தமிழ் பிரக்ஞை இருக்கின்றது என்கின்றார் சிவத்தம்பி.

அதாவது புலிகள் சுயவிமர்சனம் செய்துள்ளனர். அதை செய்யும் அளவுக்கு தமிழ் மக்களுக்கு கருத்துச் சுதந்திரம் புலிகள் வழங்கியுள்ளனர் என்கின்றார். நாம் இக்கட்டுரையை எழுதிக் கொண்டிருந்த வரை புலிகள் சுயவிமர்சனம் செய்யவில்லை. ஏன் முஸ்லீம் மக்கள் மீளவும் யாழ் சென்று வாழ முடியும் என ஒரு வார்த்தையை சொல்ல முடியாத தமிழ் பிரக்ஞை தான், சிவத்தம்பி என்ற பச்சோந்தி மூடி பாதுகாக்க கவசம் இடுகின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதாவது ஜெயபாலன் புலிகள் திருந்தி விட்டனர், மாற்றம் நிகழ்ந்துள்ளது (ஐரோப்பிய இலக்கிய சந்திப்பில்) என்றதைப் போல், சிவத்தம்பி சுயவிமர்சனம் நடந்துள்ளது அதை தட்டிக் கேட்கும் அளவுக்கு தமிழ் மண்ணில் விமர்சன சுதந்திரம் உண்டு என்கிறார்.

இந்த விமர்சன சுதந்திரத்தை கோருவதால் தான் நாளை நாம் சுடப்படலாம். சுடப்படலாம் என்பதற்காக நாம் விமர்சன சுதந்திரத்தை கோருவதை கைவிட்டு பச்சோந்தி ஆகிவிட முடியாது. இன்று சிவத்தம்பி, ஜெயபாலன் பச்சோந்தியாகி கூறுகின்றனர் மாற்றம் நிகழ்ந்துள்ளது, சுயவிமர்சனம் செய்யும் உரிமையை புலிகள் அங்கீகரித்துள்ளனர் என்று. ஆனால் நாளை நாம் மற்றும் எம்மைப் போல் உள்ளோர் ஜனநாயகத்தை புலிகளிடம் கோரியும் இனவாத சிங்கள அரசை எதிர்த்தும் போராடும் போது, படுகொலை செய்யப்பட்டால் அதற்கு கம்பளம் விரித்து அழைத்து வருவதில் சிவத்தம்பியின், ஜெயபாலனின் சேவை இன்றைய நியாயப்படுத்தலை சார்ந்து தான் இருக்கும் என்பது ஒன்றும் அதிசயமாக இருந்து விடப்போவதில்லை.

அங்கு விமர்சன சுதந்திரம் உண்டு என்கிறார்கள். யாருக்கு ஐயா காதில் பூ வைக்கப் முனைகின்றீர்கள்.

சந்திரிகா ஒரு ஜனநாயகத்தின் காவல் தெய்வம் என்று கூற ஒரு கூட்டம், புலிகள் சுயவிமர்சனம் செய்யும் சுதந்திரத்தை வழங்கும் ஜனநாயகவாதிகள் எனச்சொல்ல ஒரு கூட்டம். நடக்கட்டும், மேளதாள பரிவட்டம். அப்போது தான் மனித உரிமை என்றால் என்ன எனத்தெரியாது மக்கள் மனித உரிமை மீறலுக்கே தாளம் போடுவர். இதன் மூலம் ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்ய அழகாகமுடியும் அல்லவா? இன்று கொழும்பில் அமெரிக்கா விரித்துள்ள சிலந்தி வலையில், மற்றும் சர்வதேச நிதிகள் (NGO) விரித்துள்ள வலையில், விட்டில் பூச்சியாய் விழுந்து போய், மனித அடிப்படைக் கோட்பாடுகளையே துவம்சம் செய்வது மட்டுமன்றி, அவர்களே இன்னுமொரு வழியில் பின்நவீனத்துவ கோட்பாடுகளை மாற்றாக முன்வைப்பது இலங்கை நிலையாக உள்ளது.

சிவத்தம்பி எப்படி புலிகள் சுயவிமர்சனம் செய்தனர் யாரிடம் செய்தனர், எப்படி மாற்றுக்கருத்துச் சுதந்திரத்தை அநுமதித்தனர் என்பதை சொல்லியிருக்கலாம். ஆனால் அவருக்கு வாயெழாது தகரத்தை தங்கமென காதில் பூ வைக்க உரைகல்லை மறைக்கத்தனேவேனும்.

சந்திரிகா என்ற பாசிச இனவாதிகள் வெண்தாமரை இயக்கம் தொடங்க, சிவத்தம்பி - ஜெயபாலன் செந்தாமரை இயக்கம் தொடங்குகின்றனர் அவ்வளவே. புலிகள் திருந்த வேண்டின், அது புலிகளின் அரசியலில் நடக்க வேண்டும். அது இந்தப் புலிகள் என்ற கட்டமைப்பில், இந்த அரசியல் இராணுவப் போக்கில் சாத்தியமில்லை. ஏன் பிரபாகரன் மனப்பூர்வமாக விரும்பினால் கூட சாத்தியமில்லை. இயக்கம் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு ஏற்ப சுயவிமர்சனம் இன்றி வளைந்து கொடுக்க சிலவேளை முனையலாம். ஆனால் அது நெருக்கடிகள் இல்லாதபோது மீளவும் அது அதுவாகவே இருக்கும். சிலவேளையில் நாம் கற்பனையில் விரும்பின், அப்படி மாறிவிட்டதாகக் கூறி (சந்திரிகாவைக் காட்டுவது போல்) ஏமாற்றலாம்.

நாம் இந்த சிவத்தம்பியின் கடந்தகால நிலையை கொஞ்சம் திரும்பிப்பார்ப்போம். 1986 இல் குறிப்பாக யாழ் மண்ணையும், தமிழ் ஈழத்தையும் உலுக்கிய யாழ் பல்கலைக் கழகத்தின் ஜனநாயகத்துக்கான போராட்டம் நடந்தபோது சிவத்தம்பி என்ன செய்தார் எனப் பார்ப்போம். இன்று புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களின் வெகுஜன அமைப்புக்கள் பல, போராட்டத்துக்கு ஆதரவாக அறிக்கை விட்டதுடன், நேரடியாக அடையாள உண்ணாவிரதம் மற்றும் போராட்டத்தில் கணிசமானோர் பங்கு கொண்டனர். (பார்க்க யாழ் பல்கலைக் கழக ஆவணங்கள், படங்கள்)

இப்படி தமிழ் ஈழ மக்கள் தமது ஜனநாயகத்துக்கான போராட்டமாக கண்ட இப்போராட்டத்தை நசுக்க, சிவத்தம்பி அணிந்த வேடம் நடுநிலையின் பெயரில் புலிவேஷத்துக்கு முகமூடி போட்டது தான் புலிகளுடன் பேசுவதாகக் காட்டிக் கொண்டு புலிகளாகவே யாழ் பல்கலைக்கழக மாணவர்களுடனும், மக்களுடனும் பேசிய சிவத்தம்பி, புலிகளைவிட மிக மோசமான நிபந்தனைகளை கோரிக்கைகளை புலி சார்பாக முன்வைத்து போராட்டத்தைக் கைவிடக்கோரினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் நடுநிலைத்தன்மையின் புலி சார்பை அம்பலப்படுத்திய யாழ் பல்கலைக் கழக மாணவர்கள், ஜனநாயகத்தைப் பாதுகாக்க இப் பேச்சு வார்த்தையை முறித்த போது, புலிகள் விட்ட துண்டுப்பிரசுரம் சிவத்தம்பியின் மிக மோசமான புலி சார்பு நடுநிலையை அம்பலப்படுத்தியது. சிவத்தம்பி முன்வைத்த நிபந்தனையை விட புலிகள் கீழ் இறங்கி விட்ட அறிக்கை தான் இப் போராட்டத்தையும் அதன் போக்கையும் இனம் காட்டியது. அத்துடன்



சிவத்தம்பியின் நடுநிலைத் தன்மையும் அம்பலமானது.


புலிகள் விட்ட துண்டுப்பிரசுரத்தில் மக்களுக்கு, எழுத்து, பேச்சு, கருத்து, பத்திரிகைச் சுதந்திரத்தை வழங்குவது "புலிகளை அரசியல் அனாதைகளாக்கி விடும்" என புலிகள் கூறி இதைக்கோருவது தீயச திகள் தான் என விட்ட துண்டுப்பிரசுரம் தான். அன்றைய அப்போராட்டத்தையும், சிவத்தம்பியி நடுநிலை புலிவேஷத்தையும் தெளிவாக்கியது. இன்று சிவத்தம்பி மக்களுக்கு எழுத்து, பேச்சு, கருத்து பத்திரிகை சுதந்திரத்தை புலிகள் வழங்கியுள்ளனர் என மறைமுகமாக தமிழ்பிரக்ஞை ஊடாக விமர்சன நடந்துள்ளது. அதைச் சொல்ல கேட்க நிலைமை மாறியுள்ளது என்பதன் ஊடாக, புலிகள் அரசிய அனாதைகள் ஆகாது எல்லாம் இனிதே நிறைவேறிவிட்டது என கரடி விடுகிறார்.



விஜிதரன் கொல்லப்பட்ட அந்த நாள் தான், சிவத்தம்பி கொன்றவர்களுடன் கூடி குலாவினார்.

அன்று ஜனநாயகததுக்காக போராடிய மாணவர்களுடன் முஸ்லீம் மக்க கைகோர்த்தனர். அதை முறியடிக்க, முறியடித்த பெருமையில் சிவத்தம்பிக்கு நிச்ச றயவே பங்கும் சேவையும் உண்டு. முஸ்லீம் மக்களை வெளியேற்றவும், பின்னா படுகொலை செய்யப்பட்ட பல ஜனநாயகவாதிகளை கொல்லவும், அன்றே சிவத்தம் முன் கையெடுத்து ஜனநாயகப்போராட்டத்தில் மாணவர்களுடன் நின்று போராடுவத குப் பதில், அதை நசுக்க உதவியவர்.

இன்று சுயவிமர்சனம் என்று நீங்கள் உங்களுக்குள் (புலியின் ஆள் அல்லவா?) நினைப்பதையா, இன்று எமக்கு சொல்ல முனைகிறீர்கள் எனக் கேட்கத் தோன்றுகிறது.



அன்று 1987 இல் இந்தியா இலங்கை ஒப்பந்தத்தின் போது புலிகளின் நிர்வாக அலகில் முதல் அமைச்சர் பதவி கிடைக்கும் என்று (இதை அவர் சொல்லியும் திரிந்தார்) நாயாக அலைந்து கிடைக்காத போதா, உங்கள் சுயவிமர்சனம் வந்தது. முஸ்லீம் மக்களை வெளியேற்றிய போது 1986 இல் அன்று யார் ஜனநாயகத்திற்காக போராடினார்களோ, ஆதரித்தனரோ அவர்கள் தான் இதை விமர்சனம் செய்தனர், எதிர்த்துக் குரல் கொடுத்தனர். உங்களைப் போன்ற பச்சோந்திகள் அல்ல. இன்று புலிகளிடம் ஜனநாயகத்தைக் கோருபவர்கள் நீங்கள் அல்ல. அவர்கள் தான். நீங்கள் ஜனநாயகம் கிடைத்துவிட்டது எனக் கதைவிட்டு அதையும் மூட்டை கட்டி சவக் குழிக்குள் தள்ளிவிடலாம் எனக் கனவு காண்கிறீர்கள். ஆனால் ஜனநாயகம் இன்று கிளிங்ரனின் பொ கற்றில் தான் உள்ளது. ○

---

## தங்கதுரைக்கு ...

(4ம் பக்கத்தொடர்ச்சி)

இந்நிலையில் தங்கத்துரை என்ற நபரும், அவரின் கட்சியும் தமிழ்மக்களின் போராட்டத்தை தின்று ஏப்பம் விட்டவர்கள். அன்னிய நாட்டுக்கு நாட்டைக்காட்டிக் கொடுத்து, ஆக்கிரமிக்க வைத்தும், அதில் பிழைப்பு நடத்தியும் பொறுக்கி அரசியல் செய்தவர்கள். செய்கின்றார்கள். மக்கள் தொடர் துன்பத்தில் உழன்று கொண்டும், கொல்லப்பட்டுக் கொண்டுமிருக்கும் இன்றைய நிலையில், திருகோணமலையில் சிங்களமயமாகி வரும் இனவாத அடாவடித்தன ஆக்கிரமிப்பை எல்லாம் கண்டும் காணாது கண்மூடி சுகபோகத்துக்கு அலைந்து துணைபோனவர்கள். இவர்களின் அரசியல் கட்சிக்கும், இவர்களுக்கும் அநுதாபம் தெரிவித்து துயர் கொள்வது என்பது, கொலையாளியின் மிக மோசமான அரசியல் நடத்தைக்கு எந்த விதத்திலும் சளைத்தது அல்ல.

இங்கு இரண்டு பக்க அரசியலும் விமர்சனத்துக்குரியதே ஒழிய அநுதாபத்துக்குரியதோ துயரத்துக் குரியதோ அல்ல. சரிநிகருக்குள்ளும், கொழும்பிலும், தங்கள் சிலந்தி வலையை விரித்துள்ள சர்வதேச நிதி அமைப்புக்கள், (NGO) தன்னார்வக்குழுக்கள் மூலம், எப்படி எல்லாம் அரசியல் கருத்தைச் சிதைக்கத் தொடங்கியுள்ளது என்பதற்கு நாசமறுப்பான் ஒரு நல்ல உதாரணமாகும். ○



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐ.பி.சியின் 'புலம்' சஞ்சிகை முதலாளித்துவத்திற்கும் பொய்க்கும வக்காலத்து வாங்குகிறது




இலண்டனில் இருந்து புலம் என்ற சஞ்சிகை ஒன்று வெளிவந்துள்ளது. இலணடன் ஐ.பி.சி தமிழ் வானொலிப்பிரிவால் நடத்தப்படும் இச்சஞ்சிகை தனது முதலாவது இதழிலேயே தன்னைத்தான் நிர்வாணமாக்கியுள்ளது. ஐ.பி.சி வானொலி குறுகிய தமிழ்த் தேசிய இனவாதத்தை கக்குவதுடன், நடுநிலைத்தன்மையைக் கூடப் பேண முடியாத ஒரு வானொலியாக உள்ளது. இதற்கு வெளியில் இச் சஞ்சிகை சினிமா விளம்பரங்கள் முதல் புலி விளமபரங்கள் ஈறாகக் கொண்டு வெளியாகி உள்ளது. இச் சஞ்சிகை சரிநிகர் போன்ற பத்திரிகையில் இருந்து மறுபிரசுரம் செய்த கட்டுரைக்குக் கூட நன்றி போட முடியாத ஏதோ புதிதாக தாமே எழுதியமாதிரி பிரசுரித்து, ஒரு பத்திரிகை மரபைக் கூட மறுத்து நின்றது. இச் சஞ்சிகை மார்க்சியத்துக்கு எதிராக கட்டுரைகளைக் கொண்டு வெளிவந்ததுடன் மட்டும் இன்றி யமுனா ராயேந்திரன் போன்ற மிக மோசமான இந்திய தமிழ் சினிமாவை முதலாளித்துவத்தை நியாயப்படுத்த மறுவாசிப்பு செய்து நுண் அரசியலில் கண்டு நியாயப்படுத்துவது போன்று பல கட்டுரைகளைக் கொண்டு இருந்தது.

இதில் இரு வன்ணங்களைப் பார்ப்போம்.- மு. புஷபராசன் ருசிய மொழியில் இருந்து மொழி பெயர்த்து வெளியிட்ட செய்தியைப் பார்ப்போம்.

"உக்கிய மரக்குற்றியுள எறும்புகளின் குடியிருபபை அறியாது அதை நெருப்பிலுள் எறிந்தேன்.
சுவாலையில் குற்றி எரிந்து சடசடத்தது. எறும்புகள் தடுமாற்றத்துடன் வெளிவந்து அங்குமிங்கும் ஓடின. வெந்த குற்றி நுனியை நோக்கி ஓடிய அவை துடித்துப் புரண்டு நெளிந்தன. குற்றியை எடுத்து அருகில் உருட்டிவிட்டேன். அநேக எறும்புகள் சுதாகரித்து மணலில் தப்பிச் சென்றன.
ஆனால் அதிசயம் அவை நெருப்பை விட்டு ஓடிச்செல்லவில்லை.
மிக விரைவில், பயத்திலிருந்து மீண்டு, ஒருவகை வேகத்துடன் திரும்பி வந்து கைவிடப்பட்ட தமது வாழ்விடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தன. அவைகளிற் பல எரிந்து கொண்டிருந்த மரக்குற்றியில் மீண்டும் ஏறின. அவற்றின் மேல் ஓடின. எரிந்து இறந்தன."என

மு. புஷ்பராசன் அலெக்சாண்டர் கொல்ரெனிஷ்ரன் என்ற ருசிய எழுத்தாளனின் சிறு பகுதியை மொழி பெயர்த்து, சோவியத் பாட்டாளி வர்க்கம் சமூகம் மீதும், பாட்டாளி வர்க்கம் மீதும் சேறடித்து இருந்தார். 1970 இல் நோபல் பரிசு பெற்ற இவர் எழுதிய ஒரு நாவலை குருசேவ் ஸ்ராலினுக்கு எதிரான முதலாளித்துவ பிரச்சாரத்துக்கு பயன்படுத்தியவர். ஸ்டாலின் காலத்தில் 8 வருடம் சிறையில் அடைக்கப்பட்ட பின் விடுதலையாகி இவர் ஸ்டாலின் மரணத்தைத்தான் தனது விடுதலை எனப் பிரகடனம் செய்தார். முதலில் மொழி பெயர்ப்பைப் பார்ப்போம்.


Aleksandr Solzhenitsyn
Mastro/Archive Photos

எவ்வளவு திமிர்த்தனமான முதலாளித்துவ எழுத்து பாட்டாளி வர்க்கம் ஆட்சியை கைப்பற்றி முதலாளித்துவ சுரண்டலை மனித விரோத செயற்பாடாகவும், அது சட்ட விரோதமாகவும் ஆக்கப்பட்டது. மனிதனை மனிதன் சுரண்டுவது தான் மிக மோசமான ஒடுக்குமுறை. மற்றவன் உழைப்பில குளிர் காயவும் தின்டு கொழுக்கவும் தடைவிதித்ததை சகித்துக் கொள்ள முடியாத எழுத்தாளர்கள். அதை மீள மீட்க, மனிதாபிமானம், கருத்துச்சுதந்திரம், கலைச் சுதந்திரத்தின் பேரால் பல படைப்புக்களை முன்வைத்தனர். அதில் ஒரு வடிவம் தான் மேல் உள்

www.tamilarangam.net

ள சிறு மொழிபெயர்ப்பு உவமைக்கதைகள். . போன்று பலவகையில் பழைய அமைப்பை மீள மீட்க கனவு கண்டவர்களின் படைப்புக்கள் பல தந்திரங்களைக் கையாண்டனர்.

இங்கு எறும்புகள் ஒரு முதலாளியாகவும், நெருப்பில் எரியும் மரக்குற்றி ஸ்டாலின் காலகட்டம் வெளியில் தனக்கும் மரக்குற்றிக்கும் குருசேவ் காலகட்டமாக சித்தரிக்கப்படுகின்றது. மீள மீள முதலாளிகள் போராடியதையும் அதை மீட்டு எடுப்போம் என சபதம் இட்டதைத்தான் இக்குறிப்பு தெளிவாக்குகின்றது.

மு.புஷ்பராசன் என்ற முதலாளித்துவ எழுத்தாளன் இதை மனித விழுமியத்தின் பெயரிலும், மனித உரிமை பெயரிலும் மீள தமிழுக்கு முன்வைத்துள்ளார். சுரண்டுவதும், சுரண்டப்படுவதும் மனித உரிமை மீறல் அல்ல. அதை ஒடுக்குவதே மனித உரிமை மீறல் எனக் கூறும் இந்தப் படைப்புக்கள், பாட்டாளி வர்க்க ஆட்சியில் தடை செய்யப்பட வேண்டும். இதற்காக மட்டும் தான் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் கையாளப்படுகின்றது. யார் சுரண்ட உரிமை கோருகின்றானோ அவன் மனிதன் அல்ல ஒரு மிருகமே. ஸ்டாலின் வழங்கிய தண்டனை மிகச் சரியானது என்பதை இப்படைப்ப மிக அழகாக துல்லியமாக காட்டுகின்றது. ஆம் ஸ்டாலின் மரணம் தான் பாட்டாளி வர்க்க ஆட்சி முடிவுக்கு வந்ததை, இந்த ருசிய எழுத்தாளன் தனது விடுதலை என்கின்றான். இது எந்த வர்க்கத்தின் கதை என நாம் சொல்வதை விட அவனின் நோபல் பரிசு மேலும் உறுதியாக்குகின்றது.

நோபல் பரிசு என்பது துரோகத்தனத்துக்கும் சுரண்டலுக்கும் மனித விரோதத்துக்கும் பெரும் பணக்கார சுரண்டல் ஆட்சியாளர்களால், மதவாதிகளால், பிரபுகளால் வழங்கப்படும் அத்தாட்சியாகும். சுரண்டலைக் கோருவது பாட்டாளிவர்க்க சமூகத்தில் எப்போதும் மனித விரோத செயல் தான். இதைக் கோருவது மனித உரிமையல்ல. இதை எதிர்க்கும், காப்பாற்றும் எல்லா எழுத்தாளர்களும், குரல்களும் உண்மையில் மனித விரோதிகளின் கூட்டாளிகள். இவர்களை வேரறுப்பது தான் இன்றைய வரலாற்று கடமை.

இனி அடுத்த எழுத்தாளர் ப. வி. சிறிரங்கனின் கரடி விடுகையைப் பார்ப்போம். "இலங்கையில் தேசிய விடுதலைப் போராட்ட விளைவால் தமிழ்மொழி பற்பல மாற்றங்களோடு வளர்வுறுகிறது வெள்ளிடை மலை." என எடுத்துக்கூறும் சிறிரங்கன் அந்த வெள்ளிடை மலையைக் கொஞ்சம் எழுதியிருக்கலாம். தமிழ்மொழி வளர்ச்சியை எங்கே தமிழீழப் போராட்டம் வளர்த்து எடுத்தது.
இராணுவதாக்குதல் எல்லாம் தமிழ்மொழி வளர்ச்சியாகி விடுமா? மொழி வளர்ச்சி என்பது இலங்கையில் தேய்மானமாகி உள்ளது. தமிழ்மொழிக்கல்வி என்பதும், அதன்மீதான வளர்ச்சி என்பதற்கும் தேவை அடிப்படையான அரசியல் பார்வையாகும். இவ் அரசியல் பார்வை ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை உள்ளடக்கிய ஒரு பார்வையில் மட்டும் தான் சாத்தியம். ஏன் முதலாளித்துவ தேசிய எல்லைக்குள் செய்யக்கூடிய தமிழ் சீர்திருத்தம் கூட இன்றித்தான் இன்று இலங்கைத் தேசிய விடுதலைப் போராட்டம் சீரழிகின்றது.

எல்லாம் சுத்த இராணுவாதக் கண்ணோட்டம். அதுவே போராட்டமாக மாறிய பின் எப்படி தமிழ் வளர முடியும்.

---


வல்லரசுவாதிகளிடம் பிச்சை கேட்பதன் மூலம் அல்ல அனைத்து நாடுகளிலுள்ளமக்கள் போராட்டத்தின் மூலமாகவே உலக சமாதானம் வென்றெடுக்கப்பட முடியும், அடிப்படையில் பொதுமக்களை சாந்திருப்பதன் மூலமும், வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைக்கு எதிராக 'பழிக்கு பழி' 'அடிக்கு அடி' (TIT for TAY) கொள்கையில் போராட்டங்களை நடத்துவதன் மூலம்தான் சமாதானத்தை உறுதியுடன் பாதுகாக்க முடியும், இதுதான் சரியான கொள்கையாகும்.

(மா.ஓ)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்று தேவை
## உலகம் தழுவிய பார்வையே தவிர இனம் தழுவிய
## இனவாதப் பார்லையல்ல

01-07 ஜனவரி 1998 ஈழமுரசு இதழில் "சின்ன விளக்கம் ஆனால்---நீண்டு போயிட்டுது" என தலைப்பிட்ட அலசல் ஒன்றை சடையர் செய்து இருந்தார். ஜெர்மனியில் இருந்து ஈழமுரசுக்கு எழுதும் கருணாமூர்த்தி இனவாதத்தில் நின்று எழுதவேண்டாம் என கேட்கப்போக புலிகளின் பினாமி பத்திரிகையான ஈழமுரசு முதல் முதலில் புலிகளின் வரலாற்றில் இனவாதத்தின் ஒட்டுமொத் த வடிவை வெளிகாட்டி இருந்தனர். அதை கொஞ்சம் பார்ப்போம்.

*"சிங்களவன் தமிழனை கொன்றொழித்தால் நமக்கென்ன என்று முகம் திருப்பி நம்மவர் சிலர்... கொழும்பில் குண்டென்றால்.... எல்லைப்புறத்தில்.... திட்டமிட்ட குடியிருப்பில் வெடிப்பென்றால் அடித்துப் பதறி.... மோட்டு வேலை... அப்பாவிகள் எத்தனைபேர் என்று கணக்குத் தேடுவினம்.*

*பக்குவமாய்... சிங்களவரை பாசாங்குடன் விளிக்க வேண்டும்...என்பது சரிதான்...மெத்தச்சரி. ஆனால் தற்போது ஒத்துவராதாம். ஒருவேளை... தமிழீழம் விடுதலையடைந்த பின்னர்... தமிழர்களை பயங் கரவாதிகள் எண்டு சிங்களவர்கள் விளிக்காதகாலம் வந்த பின்னால்.... ஒருவேளை சாத்தியப்படும். அதுவரை சொல்லிலும் செயலிலும்... எழுதும் போக்கிலும் கடுமை இருப்பது தவிர்க்கமுடியாதே."*

என சடையர் கூறுகின்றார்.

தமிழ் மக்களை கொல்வதையிட்டு அலட்டிக்கொள்ளாதவன் எப்படி சிங்களவன் கொல்லும் போது அலட்டிகொள்ள முடியும் என்பது எழுதியவருக்கே வெளிச்சம். சொந்த வாழ்க்கையில் சுகம் காண பவன் தமிழன் என்றோ சிங்களவன் என்றோ கவலைப்படுவதில்லை. எனவே இங்கு அப்பாவி மக் களையிட்டு கவலைப்படுகிறான் எனின் அவன் எந்த இனம் எனப் பார்ப்பதில்லை. அது தமிழனா சிங்களவனா என பிரிப்பதுமில்லை.

கொழும்பில் குண்டு எனினும் எல்லைப்புறத்தில் தாக்குதல் எனினும் எல்லாவற்றையிட்டும் விமாசிப் பவர்கள் அல்ல உண்மையான மனிதர்கள். எதை எதையெல்லாம் தாக்குதல்களின் பின் உரிமைகோராமல் விடப்படுகின்றதோ அதை அதை எல்லாம் விமர்சிக்க முனைகின்றனர். உரிமை கோரமறுக்கும் போதே அங்கு தவறை மறைமுகமாக கொண்டுள்ளதையும் அதை விமாசிப்பதையிட் டும் தான் சடையர் சொநத வாழ்க்கையில் சுகம் தேடுபவர் என முத்திரை குத்தி சேறடிக்கின்றார்.

ஒரு தாக்குதல் உரிமை கோர முடியாத வகையில் மனிதயுரிமை மீறலைக்கொண்டதாயின் அனைத்து தாக்குதலும் விமசனத்துக்கும் கண்டனத்துக்குரியது அல்லவா? கொழும்பிலும் எல்லைப் புறத்திலும் இராணுவ மற்றும் இராணுவ பொருளாதார இலக்குகள் தாக்குதலுக்கு உள்ளாகும்போது அதை நாம் எதிர்த்து அல்ல வரவேற்கும் அதே நேரம் தாக்குதல்காரர்களின் அரசியலை மட்டுமே விமர்சனததுககுள்ளாக்கின்றோம். ஏன்? தமிழ் மக்களின்விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவேண் டின் சரியான ஓர் அரசியல் மார்க்கம் தேவை என்ற ஒரே ஒரு நல்ல நோக்கோடு மட்டும்தான்.

பக்குவமாக சிங்களவரை அழைப்பது இப்போது ஒத்துவாராது என்பது எவ்வளவு முட்டாள்தனம். ஒரு சாதாரண சிங்கள மகனைக் கூட எதிரியாக பார்க்கும் போக்கும் அவனை எதிர் நிலைக்கு பிடித்து இழுத்து தள்ளும் வகையில் தான் பேசுவோம் என நியாயப்படுத்தும் ஈழமுரசினது. புலியின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அரசியலும் தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான நிலைப்பாடு உள்ளடங்கியதாகும். இனவாத அரசையும் சிங்களமக்களையும் வேறுபடுத்துவது அவசியம். ஆனால் சிங்கள மக்களை அரவனைக்கவேண்டும். அவர்களை எமது போராட்டத்திற்கு சார்பாக அணிதிரட்டி அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் வியட்நாமில் நடந்தது போல். இது அல்லவா சிறந்த யுத்த தந்திரம்.



" நாங்கள் ஆண்டாண்டு காலமாய் அடக்கப்பட்டு வந்த இனம்.. திட்டமிட்டு அழிக்கப்பட்டு வந்த இனம். ஆனால்.... அடக்கப்படும் சிங்கள இனத்தில் இருந்து ஒரு மனிதாபிமானியும் தமிழரைக்காக்கப் புறப்படேல்ல எந்த சிங்கள அறிவு ஜீவியும் தமிழருக்காக போராட்டம் நடத்தேல்ல. எந்த சிங்கள முற்போக்கு வாதியும்... தமிழரைக்காக்க கொடி பிடிச்சுக் களம் இறங்கேல்ல. ஜீவகாருண்யம் நிறைந்த எந்த புத்தமதத் துறவியும் தமிழரின் நிலைகுறித்து கண்ணீர் வடிக்கத் தயாராக இல்லை. "

என சிங்கள இனத்தை சடையர் குறிப்பிடுவது உண்மைக்கு புறம்பானது.

ஏன் விடுதலைப் புலிகளின் தலைவர்களில் சிலர் முதல் சிங்கள பிரதிநிதிளை வரவேற்று விட்ட அறிக்கைகள், செய்திகள் சடையரின் கூற்றுக்கு எதிராக உள்ளது. சிங்கள மக்கள் எமது எதிரி இல்லை எனக் கூற்றுக்கள் பல. தமிழ் மக்களுக்காக சிங்களப் புத்தி ஜீவிகள் பலர் குரல் கொடுத்தனர் கொடுக்கின்றனர். ஆனால் அது ஓர் அரசியல் அலையாக இல்லை என்பது உண்மை தான். இது ஏன்? சர்வதேச சூழல் இன்று ஒடுக்கப்பட்ட பாட்டாளிவர்க்க அமைப்புக்களை நாசம் செய்து சிதைத்துள்ளது. இதனால் இலங்கையிலும் அதன் சிதைவிலிருந்து ஒரு புரட்சிகர அமைப்பு உருவாகவில்லை. இதை செய்ய சொந்த புரட்சிகர இனம் தயாரில்லாத வகையில் இனவாதமும், குட்டிபூர்சுவா JVP இயக்கமும் இனம் காண முன்வரத்தடையாக இருந்தன. இன்னுமொரு புறத்தில் புலிகளின் தாக்குதல்கள் சாதாரண சிங்கள மக்களுக்குள் நடத்தப்படும் நிலையில், சிங்கள இனவாதம் நிறுவனப்படுத்தப் படுகின்றது.



இதிலிருந்து மீள்வதற்கு சாதாரண மக்களை இனம் கண்டு அவர்களை அணிதிரட்டும் வகையிலும், புலிகளின் நடவடிக்கை அமைவது அவசியம். மறுபுறத்தில் சிங்கள புரட்சிகர பிரிவுகள் இலங்கை நிலைமையை சரியாக ஆய்வு செய்து மட்டும் தான் இன்று தமிழ்மக்களின் பிரச்சனைக்கு சரியான தீர்வை வழங்கும். தமிழ் ஒடுக்கப்பட்ட மக்கள் தம்மை சரியாக அணிதிரட்டிக் கொள்வதும் அவசியமாகும். எனவே போராடும் நாம் அவர்களை எம்பக்கம் வென்று எடுக்க போராட வேண்டுமே ஒழிய எதிர்த்து அன்னியப்படுத்துவது ஒரு சிறந்த புத்திசாலித்தனமான யுத்த தந்திரம் அல்ல.

"இப்ப ....குண்டடிச்சாலும் பயங்கரவாதிகள். குடல் அறுத்தாலும் பயங்கரவாதியள் .. இது தான் சிங்களத்தில தமிழருக்கு வைக்கப்பட்ட பெயர். உலக அரங்கில மனிதப் படுகொலைகளுக்கும் இனப் படுகொலைகளுக்கும் இந்தப் பதம் நல்ல கவசமாக இருக்கிறபடியால் .. சிங்கள அரசாங்கம் இலாவகமாகச் சுழட்டியாடுது. "

"பயங்கரவாதி" என்பது எல்லா ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்துக்கு உலக அரசுகள் சேர்ந்தும், தனித்தும் கொடுக்கும் பெயர் தான். அரசுகள் சொல்வதையிட்டு ஒரு சரியான விடுதலை இயக்கம் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை. ஏனெனின் ஒடுக்கப்பட்ட மக்களை சார்ந்து அல்லவா நாம் உள்ளோம். ஒடுக்கப்பட்ட மக்களை சார்ந்து இல்லாத ஒரு நிலையில் தான் அரசு சொல்வதையிட்டு பயம் வருகின்றது. புலிகள் இன்று ஒடுக்கப்பட்ட மக்களின் நலனிலிருந்து விலகி உள்ள நிலையில் இராணுவவாதத்துக்குள் சிக்கி அதையே அரசியலாக்கி உள்ள நிலையில் தான் இப்பயங்கரவாதம் என்ற சொல் பீதியூட்டுவதானதாகவுள்ளது. இந்நிலையில் தாக்குதல்கள் மிகவும் அவதானத்துடன் நடத்தப்பட வேண்டும். அதாவது அரசு-இராணுவ இலக்குகளுக்கு வெளியில் பொதுமக்களுக்குள் தாக்குதல் பாயும்போது, ஒடுக்கும் அரசுகள் முத்திரை குத்த விரும்பிய பயங்கரவாத முத்திரை பொதுமக்கள் அபிப்பிராயமாக மாறுகின்றது. இதுதான் ஒரு போராட்ட இயக்கத்தை சிதைத்து அழிக்கின்றது. இதன் முழுப்பொறுப்பும் ஒரு விடுதலை இயக்கத்தினதும், அதன் அரசியல் -இராணுவ மூல உபாயத்தின் மீது சாரும். வெளியில் அல்ல. உதாரணமாக முஸ்லீம் மக்களை வெளியேற்றியது, அநுராதபுரத் தாக்குதல் (இதை பாலசிங்கம் ஒத்துக் கொண்டார் ). .. போன்றன நல்ல எடுத்துக்காட்டு.

*"உண்மையில் எங்கட இனத்திலதான்.. மனிதாபிமானமும் மனித உரிமை மீதான பற்றுதலும் உலகம் தழுவிய பரந்த அன்புப் பிணைப்பும் கொண்ட ஜீவாத்மாக்கள் இருக்குதெண்டது உண்மை. சிலபேர் அறிவும் ஆற்றலும் உலகப் பண்பியலும் நாகரீகமும் மனதளவில் வாய்க்கப்பெற்ற நல்ல மனிதர்களாக*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

*நடிக்கிறது. அவர்கள், தமிழீழ தேசத்தவள், தமிழன் எண்ட எல்லை கடந்து மனிதன் என்ற பெருங் கடலில் நீச்சலடிக்கிற அதிலும், முழுமனித இனத்தையே நேசிக்கக் கற்றுக் கொண்ட மகாத்மாக் களாக நடிக்கிறது'*

இப்படி எழுதும் சடையர் இதில் உண்மையில் நல்ல மனிதாபிமானம் உடையோர் எம்மினத்தில் தான் உள்ளர் எனக் கூறி பின் அதற்கு முரணாக, நடிப்பதாக அதையே சேறடிக்கின்றார். உண் மையான மனிதாபிமானமும், மனித உரிமை மீதும் உலகம் தழுவிய பார்வை கொண்டோரும் எம் மினத்தில் தான் இல்லை எனலாம். அந்தளவுக்கு இனவாதத்துக்குள்ளும் சாதிய மற்றும் பிற்போக்கு மதவாதத்துக்குள்ளும் சிக்கி மற்றைய இனங்களை உலகளாவிய ரீதியில் எதிரியாகப் பார்க்கும் போக்கு விரவி ஆழப்பதிந்துள்ளது. இருக்கக்கூடிய சில நல்ல மனிதரைத்தான் சடையர் நடிப்பதாகக் கூறுவதன் மூலம் அவர்களைக் கொச்சைப்படுத்தி சேறடிக்க முனைகிறார் அவ்வளவே. இது எம் தேச விடுதலைப் போராட்டத்துக்கும் உலக மக்களின் பரந்த ஆதரவைப் பெறுவதிலும் தடையாக உள்ள இனவாத அரசியலாகும். இது களையப்படுவது அவசரமும் அவசியமுமான பணியாகும்.

05 பெப்ருவரி ஈழமுரசில் பாரிசில் வெளிவரும் லுமொடை பத்திரிகைக்கு பலஸ்தீன விடுதலை இயக்கம் 'Hamas' பிரதிநிதி ஷேக் அகமத் யசின் வழங்கிய பேட்டியை ஈழமுரசு தமது நிலைக்கு சார்பாக போட்டு இருந்தனர். அதில் தற்கொலை தாக்குதலில் அப்பாவி இஸ்ரேலியர்கள் கொல்லப்படுவதை ஒட்டிய கேள்விக்கு அவர் அப்பாவி பலஸ்தீன மக்களை கொல்லும் வரை இதை செய்வோம் எனக் கூறி உள்ளார். ஓர் இராணுவத்துக்கும் விடுதலை இயக்கத்துக்கும் இடையில் உள்ள அடிப்படை வேறுபாட்டை மறுக்கும் போக்கில் தான் இப் பேட்டி உள்ளது. ஓர் இராணுவம் என்பது ஒரு கூலிப்படை. ஒரு விடுதலை இயக்கம் மக்களின் விடுதலைக்காக போராடும் இயக்கம் தனது மக்கள் என்று மட்டும் பார்ப்பது இல்லை. மற்றைய மக்களை இட்டு அக்கறைப்படுகிறது. மற் றைய மக்களை தனக்கு சார்பாக விடுதலைப் போராட்டத்துக்காக அணிதிரட்டுகிறது.

வியட்நாம் மக்கள் அமெரிக்க அப்பாவி மக்களைக் கொல்லவில்லை. மாறாக தனக்கு சார்பாக மாற்றி அமெரிக்காவிலேயே வியட்நாமுக்காக போராட்டத்தை நடத்தியது. இது உலகில் பல பலவாக வரலாறாக உள்ளது. இதை மறுத்து Hamas புலிகள் போன்றோர் அப்பாவி மக்களுக்குள் நடத்தும் தாக்குதல் விடுதலை இயக்கத்தையும், போராட்டத்தையும் சிதைக்கின்றது.
இதை பார்க்க மறுத்து கூலி இராணுவமாக வேறுபாடு இன்றி தான் இருப்போம் என்றால் விடுதலைப் போராட்டம் உருப்பட்ட மாதிரித்தான். ○

---


# மார்க்சின் மூலதனம்

பிரசித்தி பெற்ற மார்க்சின் மூலதனம் முதன் முதலாக தமிழில் ஐந்து தொகுதிகளாக வெளிவத் துள்ளது. இதனைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உடனடியாக சமருடன் தொடர்பு கொள்ளவும்.

## வெளிவந்துவிட்டது

5 தொகுதிகளின் விலை
250 பிராங்குகள் மட்டுமே!

87 Rue de colombes
92600 Asnieres sur-seine
France

samar




பிரதிகளுக்கு முந்துங்கள்!

www.tamilarangam.net



# பேரினவாத சிங்கள பாசிச அரசின் ஜனநாயகம் பற்றிய கபட நாடகத்தின் முன் புலிகளின் சுத்த இராணுவவாதம் செயல் அற்று போய் உள்ளது

சிங்கள பேரினவாத பாசிச ஆட்சியாளர்களின் பாத தூசுதட்டி மீளவும் ஒரு வரலாற்று துரோகத்தை முன்னைநாள் போராளி இயக்கங்களும் இன்றைய துரோகிகளும் அரங்கேற்றினர். 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இறந்து போன இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் எந்தவிதமான நியாயத்தையும் கூட வெற்றி பெறமுடியாத நிலையில் காலம் காலமாக இருந்து வரும் எந்த வித அதிகாரமும் அற்ற நிருவாக பிரிவுகளுக்காக ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போட்டியிட்டு எலும்பு துண்டுக்காக நாய் சண்டையில் ஈடுபட்டனர். தமிழ் மக்கள் சிங்கள மக்கள் போன்று வாழும் உரிமைக்கான போரில் முன்பு ஈடுபட்டவர்கள் இன்று அதை கைவிட்டு சிங்கள இனவாதத்திற்கு காட்டிகொடுத்த நிகழ்வு முன்னைய துரோகத்தைவிட இன்று தேசிய விடுதலைப் போராட்டம் உள்ள நிலையில் மிகமோசமான வரலாற்று துரோகமாகும்.



இத்தேர்தல் இனவாத அரசுக்கு தனது இனவெறி கொடூர தாக்குதலை மேலும் தீவிரமாக்க கம்பளம் விரித்து கொடுத்ததுடன் மட்டும் இன்றி தேசிய விடுதலை போராட்டத்தின் எதிர்கால அரசியல் வழியை பற்றிய ஒருநடை முறை அனுபவத்தையே போராடுபவர்களுக்கு தந்துள்ளது. இத் தேர்தல் எதிர்பார்த்ததை விட அமைதியாக நடந்ததுடன் கணிசமான மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். தேர்தலில் நின்ற முன்னாள் ஆயுதம் ஏந்திய போராளி துரோகிகளும் அகிம்சைவாதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி எட்டப்பர்களும் தங்கள் விபச்சாரத்தை அரங்கேற்றினர். ஒருவரை ஒருவர் மாறிமாறிக்குத்தும் சண்டைகள் அநேகமான மனித உரிமைமீறல் மீது முன்வைத்த நிலையில் அரசியல் வேறுபாடு அற்ற இந்த குழுக்களுக்கு இடையில் மக்களின் தெரிவு வன்முறையில் ஈடுபடாத கூட்டணி சார்பாக இருந்தது. இது துல்லியமாக கடைவிரிக்க முழுமையான பலத்தை கூட்டணி கொண்டிராமை மட்டும் தான் பலத்தை நிறுவ தடையாக இருந்தது.

இந்த நிலையில் எதிர்காலத்தில் புலி உட்பட ஒரு தேர்தல் நடக்குமாயின் அத்தேர்தல் முடிவுகள் கூட்டணி சார்பாக மட்டும் இருக்கும். ஆயுதம் ஏந்திய குழுக்கள் படிப்படியாக ஒதுக்கப்பட்டு அரசியல் அநாதை ஆகும் நிலமைக்குள் செல்வர். சிலவேளை முதல் தேர்தல் மட்டும் புலிக்கு சார்பாக இருக்கமுடியும். தியாகங்கள் போராட்டங்கள் என்பன எல்லாம் பந்தாடப்படும். இது ஏன்? ஏற்படும் என்ற கேள்வி தான் எதிர்கால தேசிய விடுதலைப் போராட்டத்தையும் பலப்படுத்தும். தமிழீழ விடுதலை புலிக்கும் கூட்டணிக்கும் மற்றய துரோககுழுக்களுக்கும் அரசியல் ரீதியில் என்ன வேறுபாடு என்ற கேள்விதான் அடிப்படையான பிரச்சனையாக உள்ளது

இங்கு துரோகம் இழைத்து ஆயுதம் ஏந்தியவர்கள் என்ற குறிப்பான அரசியல் வேறுபாட்டிற்கு வெளியில் கூட்டணிக்கு சார்பான வகையில் பொதுவாக மனித உரிமைமீறலில் ஈடுபடவில்லை என்ற சாதகமான நிலையும் அரசியல் நிலவரத்தில் மக்களின் முன் எந்த விதமான தெரிவிற்கும் இடமில்லாத நிலையை ஏற்படுத்தி இருக்கிறது. இங்கு கிடைக்கும் அரசியல் தீர்வு கூட பலவிதமான விளக்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கத்திற்கூடாக ஒரு தேர்தலுக்கு மட்டும் புலிக்கு பகுதியளவில் சாதகமாக இருக்கும். மக்கள் ஒருபகுதி ஆயுதபோரட்டத்தையும் ஒருபகுதி அகிம்சை போரட்டத்தையும் பெரும் பகுதி இதில் எதிலும் இன்றியே உள்ளனர். இன்று தமிழ் தேசிய விடுதலை போராட்டத்தில் எந்த பிரிவு மக்களும் எந்த குழுவையும் ஆதரிக்கும் அளவுக்கு குறித்த அரசியல் நலன்களின் பின்னால் அணிதிரட்டப்படவில்லை. புலிகள் இன்று நடத்தும் போராட்டத்தில் கூட பார்வையாளராக ஆதரவாளர்களாக எதிராக இருக்கின்றனரே ஒழிய குறித்த நலன்சார்ந்த குறித்த மக்கள் பிரிவு இல்லாத நிலை என்பது நாளைய விடுதலைப் புலிகளை அரசியல் அநாதைகள் ஆக்கும். இதில் எந்த சந்தேகமும் யாருக்கும் இருக்க முடியாது. இதை இன்று புரிந்து கொள்வது அவசியமானதும் அடிப்படையானதுமாகும். தமிழ் பேசும் மக்களின் பொதுவான ஜனநாயக தேசிய கோரிக்கைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களுக்கு உட்பட்ட ஓர் அரசியல் பாதையை முன்னெடுப்பதும் அதை ஆதரித்த போராட்ட அரசியல் பாதையை எடுப்பதும் தான் போராடும் அமைப்பின் அரசியல் நலங்கள் தியாகங்கள் அர்த்தமுள்ளவையாகவும் நாளை அரசியல் அநாதையாகாது தடுக்கும் ஒரே ஒரு பாதையாகும்.

இன்று இதை எல்லா தரப்பும் காண்பதும் புரிந்து கொள்ளலும் அவசியமான அவசரமான பணியாகும். இந்நிலையில் தலதாமாளிகை மீதான தாக்குதலை புலிகள் உரிமை கோராவிட்டாலும் அது புலிகளால் நடத்தப்பட்டது என்பது பொதுவான அபிப்பிராயமாகும். அண்மையில் நடந்த கொழும்பு குண்டு தாக்குதல்கள் ஞாயிற்றுக்கிழமைகள் தேர்ந்து எடுக்கப்பட்டும் மக்கள் குறைந்த பகுதியில் நடத்தப்பட்டன. இது குறித்த செய்தியை தற்கொலைத்தாக்குதல் நடத்தியோர் விட்டுச் சென்று இருந்தனர். அப்பாவி மக்களுக்குள் நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்து எழுதப்படும் தொடர்ச்சியான விமர்சனங்கள், புலிகளை நோக்கிய சர்வதேச செய்தி ஊடான கேள்விகள், மற்றும் உலகளவில் புலிகள் மீதான நிர்ப்பந்தங்கள், தடைகள், அழுத்தங்கள், என்பன மக்களுக்குள்ளான தாக்குதலை தடுத்துள்ளதே ஒழிய, புலிகளின் அரசியல் மாற்றத்தினால் அல்ல என்பதை தலதா மாளிகை சம்பவம் துல்லியமாக்கி உள்ளது.

சிங்கள அப்பாவி மக்களுக்குள் தாக்குதலை நடத்துவதை நாம் கண்டிக்கும் போது அவர்களை தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தின்பால் வென்று எடுக்க நடுநிலைப்படுத்த மற்றும் அப்பாவி மக்கள் காரணத்தால் மட்டுமே நாங்கள் எதிர்த்து வந்தோம். புலிகள் உலக கண்டனங்களைத் தவிர்க்க மட்டுமே இதை கைவிட முனைகின்றனர் அவ்வளவே என்பதை தலதா மாளிகை மீதான தாக்குதல் காட்டுகின்றது. அவர்கள் எதிர்பார்த்ததை விட தலதா மீதான தாக்குதல் அதை செய்ததுடன், மேலும் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக உலகம் முன் மீளவும் முன் வைக்கப்பட்டு விட்டது.





500 வருட பழைமை வாய்ந்த தலதா மாளிகையும், அதில் புத்தரின் புனிதப் பொருட்கள் உள்ளது என நம்பப்படும் ஓர் இடத்தின் மீது தாக்குதல் நடத்தும் போது, அது மொத்த இன மக்கள் மீதும் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலாகவே அமைகின்றது. இன்று சிங்கள பேரினவாதம் புத்த மதத்தின்ஊடாக கட்டமைக்கப்பட்டுள்ள நிலையில், இது போன்ற தாக்குதல் பேரினவாத ஒடுக்கு முறைக்கு சிங்களமக்களை நிபந்தனையின்றி ஆதரவு அளிக்க கோருவதாகும். இது தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்துவதுமாகும். எப்போதும் சிங்கள மக்களை நடுநிலைப்படுத்துவதும், வென்று எடுப்பதன் மூலமும் சிங்கள பேரினவாத அரசை தனிப்படுத்தி செயல்பட வேண்டிய தேசிய விடுதலைப் போராட்டம், அதன் எதிர்திசையில் திசையறியாது செல்வது அபாயமானது, ஆபத்தானது. கடந்த தியாகங்கள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகப் போய்விடும். இதில் எந்த சந்தேகமும் இல்லை.

தேவை புத்திசாலித்தனமான அரசியல் மற்றும் ராஜதந்திரம். இது ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையுடன் கூடிய அரசியலில் மட்டுமே சாத்தியம். இருந்தபோதும் அதற்கு வெளியிலும் குறைந்தபட்ச புத்திசாலித்தனம் அவசியம். குறிப்பாக அண்மையில் அமெரிக்க ஈராக் ஆளும் வர்க்கங்களுக்குள் நடந்த இழுபறியுடன் கூடிய அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான ஈராக் ஒரு சிறிய நாடாக ஒரு பெரிய வல்லரசை எதிர்த்து நடத்திய ராஜதந்திரம், உலக மற்றும் போராட்டங்களின் மிக அவதானத்துக்குரிய படிப்பினைக்குரியதுமாகும்.

www.tamilarangam.net



ஈராக் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்கமக்களின் போராட்டம்

ஏகாதிபத்திய முரண்பாடுகளைக் கையாண்ட ஈராக் அமெரிக்காவைத் தனிமைப் படுத்தியும், அமெரிக்காவிலேயே அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியை உண்டு பண்ணியும், அரபு உலகில் ஈராக் சார்பான ஆர்ப்பாட்டங்களை நடத்தியும், உலகளவில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை அம்பலப்படுத்தியும் வெற்றி பெற்ற வரலாற்றை நாம் ஏன் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் கையாள முடியாது? ஈராக் குண்டுத்தாக்குதலால் அல்ல (அதைச் செய்ய முடியாத நிலையில் ஈராக் இருக்கவில்லை) மாறன அரசியல் முன்னெடுப்பால் சாதித்தது. இது மேலும் துல்லியமாக வெற்றி பெற, முடிவாக வெற்றி பெறவும் அங்கு ஒடுக்கப்பட்ட மக்களைச்சார்ந்த அரசியலைக் கொண்டு இருக்கவில்லை. இருந்தபோதும் நாம் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று எம் தேசிய விடுதலைப் போரில் எல்லா இனங்களும் அனைவருக்கும் உரிமை வழங்கக் கோரும் போது, நாம் இராணுவவாதங்களை மட்டும் சார்ந்து இருப்பது அல்ல. மாறாக அரசியல் ராஜதந்திரம் தான் குறிப்பான தீர்க்கமான அரிசியல் விளைவுகளை தருகின்றது. இது உலகில் நீண்ட போராட்ட வரலாறு மீள மீள கற்றுத்தருகின்றது.

இன்று எம் தேசிய விடுதலைப் போராட்டம் சிதைந்து சீரழிந்து சுத்த இராணுவவாதமாக தான் எஞ்சிப்போயுள்ளது. இது கண்மூடித்தனமான தாக்குதல் வெற்றி தோல்விகளை அரசியலாக்கி மக்கள் முன் பரஸ்பரம் எண்ணிக்கை அரசியலாய் போய் உள்ளது. இந்நிலையில் சிங்கள பேரினவாத பாசிச அரசு மிகபுத்திசாலித்தனமான அரசியல் விளையாட்டில் இறங்கியுள்ளது. புலிகளை சர்வதேச ரீதியில் அம்பலபடுத்தி தனிமைபடுத்தி ஒரு பயங்கரவாத குழுவாக காட்ட இடைவிடாத தீவிர முயற்சியில் வெற்றிகளைச் சந்தித்து வருகின்றது. இதை புரிந்து கொள்ளலும், ஏற்றுக்கொள்வதன் மூலம் தான், வந்த பாதையை மீளவும் சுயவிமர்சனத்துக்கு உள்ளாக்கி சரியான வகையில் தேசியப் போரை முன் தள்ள முடியும்.

இன்று பேரினவாத பாசிச தரகு அரசு, புலிகளைத் தனிமைப்படுத்த ஒரு பயங்கரவாத இயக்கமாக சர்வதேச அரசுகளுக்கு முன் மட்டுமல்ல, சர்வதேச மக்கள் முன் தன் கடையை திறந்து வியாபாரம் அமோகமாகி உள்ளது. எந்த உப்புச்சப்பும் அற்ற என்ன எனத்தெரியாத ஒரு கற்பனை தீர்வுபொதியை முன் வைத்து தாம் தீர்வு வழுங்க தாயார் ஆனால் புலிகள் தயார் இல்லை என்ற பிரச்சாரம் சரியான முறையில் எதிர்ப்பிரச்சாரம் இன்றி புலிகளை தனிமை படுத்தியுள்ளது. இராணுவ தாக்குதலுக்கும் இராணுவவாதமாகவும் போராட்டம் சித்தரிக்கப்பட்டபின் இந்த பொதியை அம்பலப் படுத்தி அதை வேரறுக்கும் அளவுக்கு புலிகளின் அரசியல் ஆளுமையை இழந்துபோய் உள்ளமை வழமை போல் மாற்றுக்கருத்தை எதிர்கொள்ள திராணியற்று வன்முறையில் ஈடுபடுவது போல், அரசுபொதிமீது அதை செய்யமுடியாது என்ற நிலையில் பொதி பற்றிய மாயையை தமிழ் பேசும் மக்களுக்கு அல்ல சா்வதேசமக்கள் முன் ஏற்படுத்தி உள்ளது. இது சிங்களமக்களுக்கு முன் விதிவிலக்கு அல்ல.

வடக்கை இராணுவம் கைப்பற்றிய பின் ஜனநாயகம் மீளவும் மீட்கப்பட்டுவிட்டது என்ற மாயையை ஏற்படுத்தியதன் மூலம் புலிகளை ஜனநாயக விரோதிகளாக அரசு உலகளவில் நிறுவியுள்ளது. இதற்கு புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தான் அடிப்படையானதும் ஆதாரமானதுமாக இருந்துள்ளது. இந்நிலையில் அண்மையில் துரோகிகளைக் கொண்டு நடத்திய போலி ஜனநாயக தோ்தல் நாடகம் அரசுக்கு மேலும் இதை நிறுவ வாய்ப்பை அளித்துள்ளது. புலிகள் இத்தேர்தலில் அதிகம் தலையிடாத போக்கை காட்டினர். ஜனநாயகம், மனிதஉரிமை பற்றய புலிகளின் சரியான நியாயமான நிலைப்பாடு இல்லாத போக்கு என்பது அரசின் கபடத்தையும் உலகளாவிய பிரச்சாரத்தையும் தடுத்து நிறுத்த முடியாத வகையில் போராட்டம் பலவீனம் அடைகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலதாமாளிகை மீதான தாக்குதல் என்பது மொத்த சிங்களமக்களுக்கு எதிராக நடத்தப்பட்டதே. தலதா மாளிகை பௌத்தர்களின் நம்பிக்கையின் இடமாக உள்ள நிலையில் சிங்களபேரினவாதம் பௌத்தமதத்தைக்கொண்டு கட்டியமைக்கப்பட்டு உள்ள நிலையில், இது போன்ற தாக்குதல்கள் சிங்கள இனவாதத்துக்கு சிங்களமக்களை நிபந்தனையின்றிய ஆதரவை வழங்க இத்தாக்குதல் ஊக்குவிக்கின்றது. தமிழ் மக்களின் மிக பழைமை வாய்ந்த கோயில்கள் உட்பட பல நூறு கோயில்கள் தாக்குதல்களுக்கு உட்பட்டன உட்படுகின்றன என்ற போதிலும், புலிகள் இயக்கம் இந்து மதத்தின் ஊடாக கட்டியமைக்கப்பட்ட ஓர் இயக்கமல்ல. அதன் தன்மை பகுதியானளவில் இருந்த போதும் புலிகளின் போராட்டம், தமிழ்மக்களின் போராட்டம் இந்து மதத்துக்குள் கட்டியமைக்கப்பட்டது அல்ல. ஆனால் சிங்கள பேரினவாதம் புத்தமதத்தின் ஊடாக கட்டியமைக்கப்பட்டது. புத்தபிக்குகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட அரசுதான் இன்று உள்ளது. ஆனால் புலிகள் சைவ தலைவர்களின் தலைமைக்குள் இல்லை.

இந்நிலையில் ஒரு புனிததலம் என மக்கள் நம்பும் இடத்தின் மீதானதாக்குதல், அதை நம்புகின்ற மக்களை தாக்குதல்காரர்களுக்கு எதிராக அணிதிரட்டுகின்றது. இந்நிலையில் ஒரு மதசார்பு இடத்தில் நடக்கும் ஒரு சுதந்திரதின விழா அத்துடன் கூடிய ஓர் இராணுவமுகாம் என்ற அளவில் கூட இத்தாக்குதல் போராட்ட யுத்ததந்திரத்தில் பாதகமானவை. எப்போதும் போராட்டம் மேலும் ஒரு படி வளர்க்கும் வகையில் தாக்குதல்கள் அமைய வேண்டும். எதிரியை தனிமைப்படுத்தும் வகையில் தாக்குதல் திட்டமிடப்படவேண்டும். இந்த வகையில் முற்றுமுழுதாக இராணுவம் சம்மந்தபட்ட இடங்கள் மற்றும் இராணுவ பொருளாதார இலக்குகள் மீதான தாக்குதல் தெரிவு மட்டும்தான் ஒரே ஒரு சரியான பாதையாகும். இவ்விடங்களில் மக்கள் சம்மந்தப்பட்டு இருப்பின் அவைதிட்டவட்டமாக தவிர்க்க வேண்டும்.

இன்று உலகில் புலிகள் மீதான தடை மற்றும் அவர்களின் உறுப்பினர்கள் நாடுகடத்தும் முயற்சி, மற்றும் அவர்கள் மீதான நிர்ப்பந்தங்கள் அழுத்தங்கள் இன்று ஏற்பட புலிகளே காரணமாக இருந்தனர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மக்கள் மீதான புலிகளின் வன்முறைகளும் புலிகளின் அரசியல் தோல்வியும் தான் மிகமுக்கிய அடிப்படையாகும். இலங்கை பேரினவாத அரசின் புத்திசாலிதனமான புலிகளை தனிமைபடுத்தும் அரசியல் காய்நகர்த்தலின் முன் புலிகளின் சுத்த இராணுவவாதத்தை செயலற்றதன்மைக்குள் முடக்கிவிடுகின்றது. புலிகள் ஒடுக்கப்பட்ட மக்களை சார்ந்து இருக்க தவறியநிலை என்பது இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தை பேரினவாத அரசு ஏகாதிபத்தியதுணையுடன் நசுக்கிவிடுமளவிற்கும், புலிகளை ஒரு கெரில்லா குழுவாக மட்டும் நீடிக்கமுடியும் என்ற நிலைக்குள் நகர்த்தியுள்ளது. இது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எற்பட்டுள்ள மிகப் பெரிய இழப்பாகும். இதில் இருந்து மீள்வது ஆயின் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமையில் போராடுவது அவசியமாகும் இது மட்டும்தான் இன்று இலங்கையில் ஒரு ஆரோக்கியமான புரட்சிகரமான பாதையாகும். ☆

---

# எதிரியுடன் கூட்டுச் சேர்ந்த போராட்டம் எதிரி சார்பானதே ஒழிய மக்கள் சார்பானது அல்ல



சக்தி 43ம் இதழில் வெளியாகியிருந்த சில கருத்துகளை விமர்சனம் செய்ய வேண்டிய அளவிற்கு எதிர்புரட்சியை கோருவதாகும். இதை ஒத்த ஒரு விமர்சனம் சக்திக்கும் எழுதியிருந்தேன்.

"ரங்கூனுக்கு அப்பால்" என்ற யமுனா ராயேந்திரனின் சினிமா விமர்சனத்தை பெண்விடுதலைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் போராடும் சக்தி வெளியிட்டு இருக்கத்தேவையில்லை. சக்தியின் நோக்கத்திற்கு எதிரான அடிப்படையை இக்கட்டுரை உள்ளடக்கியுள்ளதுடன் அதை நியாயப்படுத்தப்பட்டும் உள்ளது.⇨



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

⇨ மேற்கு நாட்டு சினிமாக்கள் பலவற்றில் மூன்றாம் உலக ஜனநாயகத்தை மீட்க எனகூறி மேற்கு நாட்டு ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த சில கதாநாயகர்களை முன்னிறுத்துவதன் ஊடாக மூன்றாம் உலகம் மீதான ஆக்கிரமிப்பை சொந்த நாட்டிலும் மூன்றாம் உலகநாட்டிலும் நியாயபடுத்துகின்ற நடைமுறை இன்று பரவலாக காணப்படுகின்றது. இந்த வகையில் ரம்போ முதல் எண்ணற்ற இராணுவ நடவடிக்கை படங்கள் மூன்றாம் உலகில் ஜனநாயகத்தை நிலைநாட்ட போராடிச்செல் வதாக பலநூறுபடம் வெளியாகிவிட்டது. இது தொடர்ச்சியில் இராணுவகண்ணோட்டம் இளகிய மனங்கள் முன் எடுபடாது எதிரான போராட்டங்கள் எழுந்தன, எழுகின்றன.

இதைத்தணிக்க இன்று மருத்துவ உதவி, ஜனநாயகத்திற்கு போராடுவது, உண்மையைச் சொல் லும் பத்திரிகையாளன் என பலநூறு படங்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. இந்த இருவழிப் பாதையும் மூன்றாம் உலகநாடுகளின் ஜனநாயகப்பிரச்சனை மீது மேற்குநாடுகள் கரிசனையிருப் பதாக காட்டவும் அதை செய்யவே தமது தலையீடுகள் அவசியமாக உள்ளது என நிறுவவும் தொடர்சியான ஒருபிரசார வேலையே இப்படங்களின் அடிப்படை நோக்கமாகும்.

“ரங்கூனுக்கு” அப்பால் என்ற படமும் இதைச்செய்கின்றது அதை நியாயப்படுத்தும் யமுனா “எமது நாடுகளில் நிலவும் ஒடுக்குமுறையமைப்புக்களின் தன்மையில் இத்தகைய கலைப்பண்புகள் வருவது சாத்தியமில்லை. இத்தகைய சந்தர்ப்பத்திலேயே “ரங்கூனுக்கு அப்பால்” மாதிரி படங்கள் தருகின்ற சம்பவங்கள், அனுபவம் போன்றவற்றை அங்கீகரித்துக்கொண்டு, இவைகளை விமர்சனம் பூர்வமாக பார்ப்பதன் மூலம் நமக்கான கலைப்படைப்புக்களை சிறிய அளவிலேனும் உருவாக்கிக் கொள்ள முயலவேண்டும்” என்கிறார்.

இது போன்ற படங்களை நாம் உருவாக்கும் சூழல் இல்லை என்று கூறியபடி விமர்சன ரீதியாக பார்த்தபடி படம் படைக்கவேண்டும் என்கிறார். பர்மீய மக்களின் போராட்டத்தை அதன் இரத்தம் சிந் திய வரலாற்றை கேவலமாக அமெரிக்காவிற்கு சார்பாக, அமெரிக்கா தலையிட்டு மீட்கும் உரிமை ஜனநாயகத்தை பறைசாற்ற கோரிய படத்தை நல்லபடம் என்கிறார் சிறு விமர்சனத்தை பெயரளவில் வைத்தபடி. இதன் பின்னால் உள்ள நோக்கத்தை பார்ப்பின் “மாணவர்கள் கமியூனிஷ்டுக்கள் என் று இராணுவம் சொன்னதை நான் நம்பினேன் ஆகவேதான் நான் மக்களைக் கொன்றேன்”. என்ற காட்சிப்படிமமான வார்த்தைதான் எவ்வளவு கேவலமானது. அதாவது கம்யூனிசமல்லாத போராட்டத்தை அமெரிக்கா ஆதரிக்கும், அதற்காக அமெரிக்கா போராடும் என்பதைத்தான். இதைத் தான் யமுனா எம்மைப்பார்த்து இதைப்படைக்க கோருகின்றார்.

ஒரு ஜனநாயக இயக்கம் கம்யூனிசத்தை எதிர்க்கக்கூடாது. அது வரைதான் அது முற்போக் காக இருக்கும். இந்த ஜனநாயக இயக்கமும் லாராவின் (இங்கு லாரா அமெரிக்கப் பெண்) மனிதநேய உதவியும் கம்யூனிஷ்டுக்கள் இல்லை என்பதால் எழுகின்ற அனுதாபத்துடன் கூடிய ஏகாதிபத்திய சார்பு நிலைதான். அதாவது கம்யூனிஷ்டுக்கள் என்றால் கொல்லமுடியும் என்பதை லாராவின் கேள்வி புலப்படுத்துகின்றது. “அதாவது இப்போது இராணுவம் அப்படிச்சொன்னதை நம் புகிறாயா” என்ற போது “இல்லை” என்ற பதில் கம்யூனிஷ்ட்டுக்கள் என்றால் கொல்ல உரிமையும், நான் அதற்காக போராடப்போவது இல்லை என்பதை லாராவின் கேள்வி இராணுவவீரனின் பதில் தெளிவாக்கின்றது.

இதே கருத்தைக் கொண்ட யமுனா இதை நியாயப்படுத்த முன்வைக்கும் பிறிதோர் கருத்தை பார்ப்போம். “வளைகுடா யுத்தத்தில் பெரும்பாலான இடது சாரிகளால் சார்பான நிலைப்பாடு எடுக்க முடியவில்லை. அமெரிக்க மேற்குலக தலையீட்டை விமர்சிக்க முனைந்து ஆனால் சதாம் குசை யினின் குவைத் படையெடுப்பை குர்திஷ் மக்களை சதாம் கொன்று குவித்ததை நியாயப்படுத்த இடது சாரிகளால் முடியவில்லை. இத்தகைய இடைவெளிகளின் பிரதேசங்களில்தான் மனித உரிமை அரசியலும் அதைபற்றிய கலைபடைப்புகளும் அதன் மேலான விமர்சனங்களையும் மீறி முக்கியத்துவம் பெறுகிறது. Neither Moscow nor Washington என்று ஓர் இடதுசாரி இயக்கம் கோசமாக வைத்துள்ளதை இப்படி விளங்கிக் கொள்ளமுடியும்” என யமுனா அமெரிக்கசார்பை நியாயப்படுத்த அழகாக விளக்கம் கொடுக்கின்றார்

அதாவது ஒரு பிரச்சனை மீது ஆம் அல்லது இல்லை என்ற முதலாளித்துவ கோட்பாட்டை முன் வைத்து இடது சாரிகளையும் அரசியல் விமர்சகர்களையும் கொச்சைப்படுத்தியபடி மனித உரிமை யின் பெயரால் தலையீட்டை ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துகின்றார் இலங்கை யுத்தத்தில் அரசு அல்லது புலிகள் இரண்டில் ஒன்றை ஆதரிக்கவேண்டும் என்கிறார். இதில் இடதுசாரியின் நிலை என் ன? என்கிறார். இடதுசாரிகள் இருவரையும் ஏற்றுக்கொள்வதில்லை ஏன் ஏனில் இடதுசாரிகள் எப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பொழுதும் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பானவர்களே ஒழிய ஆளும் வர்க்க அணியின் யுத்தத்தின் சார்பாக ஒரு நிலையெடுப்பதில்லை. புலிகள் தமிழ் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அல்ல என்பதால் புலிகளை விமர்சித்தபடி தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரிக்கின்றனர். இது புலியின் நலனில் இருந்து வேறுபட்டது. இது சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டிற்கு உட்பட்டது.

நாம் மெக்சிக்கோவுக்கோ வாசிங்டனுக்கோ ஆதரவாக இருக்கவேண்டும் என யமுனா கோருவதும் இதில் ஏதாவது ஒன்று ஜனநாயகத்தின் பெயரால், தலையிட்டால் ஆதரிக்ககோருவது என்பது கடைந்தெடுத்த ஏகாதிபத்திய சார்பேதான். ஏன் எனில் இன்று உலகில் உள்ள அனைத்து மனிதவுரிமை மீறலும் ஏகாதிபத்திய தயவு இன்றி (இது நேரடியாகவோ மறைமுகமாகவோ) நடக் கமுடியாது. குழந்தையை கிள்ளி விட்டுவிட்டு தொட்டிலை ஆட்டுவதற்கு ஆதரிப்பதில் தான் யமுனா தனது இடைவிடாத முயற்சியை இடதுசாரிகள் பெயரில் செய்ய எண்ணுகிறார். அதாவது ஆணாதிக் கத்தை எதிர்த்து பெண் போராடும் போது பெண்ணுக்கு அமெரிக்கா ஆதரித்தால் நாம் ஏற்கப் போகிறோமா இல்லையா, என்ற கேள்வியை சக்தி முன் வைத்து, பின் அதை ஏற்க வேண்டும் என் கிறார். இது தான் அவரின் அரசியல் விபச்சாரக்கலை. இதை அவர் "இப்படம் நமக்குள் ஏற்படுத் துகிற, சில காட்சிகள் தருகிற அரசியல் தத்துவ அநுபவங்கள் நம்மை நெகிழ்த்தி விடுபவை" என் பதன் ஊடாக அமெரிக்க சார்பு தத்துவத்தை தத்துவரீதியில் அழகியல் ஊடாக புகுத்தும் தன் மையைத் தான் மெச்சி அது நெகிழ வைக்கின்றது என்கிறார். இந்த மாதிரியான மோசடித்தனங் களையும், ஏகாதிபத்திய சார்பை நியாயப்படுத்தும் கருத்துக்கு சக்தி இடம் கொடுப்பது நிறுத்தப்பட வேண்டும் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக கேட்கத்தோணுகின்றது. இது சக்தி முன்னுள்ள ஒரு கோட்பாட்டு பிரச்சனையாகவும் உள்ளது.

அடுத்து அசோகா பண்டாரகே எழுதிய சுவிஷ் தேவி மொழி பெயர்த்த "சர்வ தேசப் பெண்ணியத் தை நோக்கி --- " என்ற கட்டுரையைப் பார்ப்போம்.

"சர்வதேசிய பெண்ணியத்தை நோக்கி -- " எனத் தலைப்பிட்ட கட்டுரை இறுதியில் "பெண்கள் விடுதலைப் போராட்டம் என்பது ஓரிடத்தில் உருவாக்கப்பட்டு மற்றைய நாடுகளுக்கு ஏற்றமதி செய் யக்கூடிய கொள்கையல்ல. அந்தந்த நாட்டுக் கலாசாரச்சூழலின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டிய ஒன்று" என தலைப்புடன் முரண்படுகின்றது. அதாவது இக்கோட்பாடு பின்நவீனத்துவத் தின் பின்னால் கட்டியமைக்கப்படுகின்றது. ஒரு பிரச்சனை உலகளவில் பொதுவாக இருந்தால், அதன் பொது அடிப்படை உலகளாவிய ரீதியில் பொதுவானது. பெண் ஒடுக்குமுறை அதாவது ஆணாதிக்கம் உலகளவில் பொதுவானது. அது அமெரிக்காவில் ஏகாதிபத்திய கலாசாரம் முதல் இந்தோனேசியா அடர்காடுகளில் வாழும் மக்கள் எல்லோருக்கும் பொதுவானதாக, ஒரே வகைப்பட்ட ஒடுக்குமுறையாகக் காணப்படுகின்றது. இதன் ஒடுக்குமுறைவடிவம் மட்டும் தான் ஒவ்வொரு நாட்டு சமூக பொருளாதார கலாசாரத்துடன் வேறுபடுகின்றது.

எனவே பெண்விடுதலைக்கோட்பாடு உலகளவில் பொதுவாகவும், நாட்டுக்கு நாடு குறிப்பான விசேட விடையங்களையும் உள்ளடக்கியவைதானே ஒழிய, கலாசார வேறுபாட்டை அடிப்படையாக கொண் டவை அல்ல. கலாசாரம் என்கின்ற போது மதம் மற்றும் பொருளாதார அடிப்படையாக கொண்ட இது, ஒருக்காலும் ஒரு சரியான பாதையை கலாசாரம் ஊடாக அடைந்து விடமுடியாது. கலாசாரம் என்பது பிற்போக்கின் மீது கட்டப்பட்டவை தான். எனவே பிற்போக்கு கலாசாரத்தை கடக்க வேண் டின் முற்போக்கு கலாசாரம் உலகளவில் ஒன்றாகவே இருக்கமுடியுமே ஒழிய வேறுபட்டு இருக்க முடியாது. வேறுபட்டு இருக்க முடியும் என வாதிடின் அது இனம், நிறம், பொருளாதார வேறுபாட்டை தொடர்வதாக அர்த்தப்படும்.

அடுத்து வர்க்கம் பற்றி சொற்பதத்தில் பேசியபடி பொதுவான அமைப்பை தேட வேண்டும் எனப் பிரயோகிக்கப்படுகின்றது. அதாவது வர்க்கத்தைக்கடந்த பொதுவான பெண்கள் அமைப்பு என்பது ஆளும் வர்க்க பெண்கள் சார்ந்ததே ஒழிய அடிமட்ட பெண்கள் சார்பானது அல்ல. இதை அவர் "சமகால பெண்ணியப் போராட்டம் உலகளாவிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டம். இது மனித உறவுகளை மேம்படுத்த வளப்படுத்தக்கூடிய குணாம்சம் கொண்டவை. பெண்களின் கலாசார பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கில் கொண்டு நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு பெண்ணிய அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்" எனக் குரல் கொடுக்கின்றார்.

பெண்ணின் ஏற்றத்தாழ்வான கலாசார பொருளாதார வேறுபாடுகளைக் கடந்த பெண்கள் அமைப்பு வேண்டும் என்பது வர்க்கப்போராட்டம் அல்லாத சமரசப் போராட்டத்தை கோருகின்றார். இதைத் தான் இன்றைய முக்கியத்துவம் வாய்ந்தது என்கின்றார். அதாவது இன்றைய உலகப்பொருளாதார

www.tamilarangam.net

அமைப்பில் ஏற்றத்தாழ்வை எல்லாத்துறையிலும் தகர்க்காத பொதுவான பெண்கள் அமைப்பை கோருவது என்பது மிக கீழ்நிலையில் உள்ள மக்களையும், அடிமட்ட பெண்களையும் ஏமாற்றும் முயற்சியாகும்.

அடுத்து "அத்துடன் லெப்பினிசம் இச் சூழ்நிலைகளில் நடைமுறையில் இருப்பின் அதற்கான அரசியல் பார்வையும் இங்கு வைக்கப்படவில்லை." என கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். தொடர்ந்து "கணவன் -மனைவி அடிப்படையிலான வாழ்க்கைத்துணை நலஉறவு பல சமூகப்பெண்களுக்கு ஒரு முக்கிய உறவாக அமையாது உணர்வு பூர்வமான பல தேவைகள் மற்றைய பெண்களுடனான இவர்களது உறவில்தான் பெறப்படுகின்றது." என்கின்றார்.

கட்டுரையாளர் ஆண்களின் ஆணாதிக்கத்தை நியாயப்படுத்த அதை மறைமுகத்தில் பெண்களே நீங்கள்: நீங்களாவே முரண்படாது விலகிச்செல்லுங்கள் என்கிறார். பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டால் தற்கொலை தீர்வு. ஆணின் உறவால் ஏற்படும் கருவை அழிப்பது தீர்வு. பெண்-பெண் உறவு, என முன்வைக்கப்படும் மாற்றுத்தீர்வுகள் ஆணாதிக்கத்தின் இருப்பைக் கேள்விக்குள்ளாக் காத, அதிலிருந்து கண்ணை மூடிப் பால் குடிக்கும் பூனைபோல் கண்ணை மூடி விலகிச்செல்லும் தீர்வுகளை முன்வைப்பதுதான், இன்று இருக்கும் ஆணாதிக்க பொருளாதார அமைப்பை பாதுகாக் கும் அல்லவா? பெண்-பெண் உறவு, ஆண் - ஆண் உறவு என்பன ஆணாதிக்கமும் சுரண்டல் சமூ கமும் கொடுத்த கொடைதானே ஒழிய, அதற்கு வெளியில் கண்டுபிடித்தவை அல்ல. ஆணாதிக்கம் தான் பெண்களை தனியாக்கி சொத்தாக்கிய பொருளாதார சுரண்டலை பாதுகாக்கும் அமைப்புத் தான் ஆண் பெண்ணின் இயல்பான பாலியல் உறவுகளை கண்ணி வைத்தும், நலமடித்தும் பிளவுபடுத்தின. இந்த முடக்கம் தான் ஆண்-ஆணுக்கு இடையிலும், பெண்-பெண்ணுக்குமிடையிலும் உறவை முடக்கப்பட நலம் அடித்த செக்ஸ் வேட்கையை தீர்த்துக் கொள்ள வழி ஒழிய இதற்கு வெளியில் அல்ல.

இந்த மனிதர்களின் இயல்பான உணர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டதை எதிர்த்து போராட வேண்டிய சமூ கம் அதற்கு வெளியே தீர்வைத் தேடி முன்வைத்த போது அதை பெண்விடுதலையின் அங் கமாகவும் அல்லது ஏதோ ஒருவிதத்தில் நியாயப்படுத்துவது என்பது அடிப்படையில் ஆணாதிக்கத் துக்கு சார்பானது. அதைக் கேள்விக்குள்ளாக்காது, அதை நொருக்காது பேண முயலும் வழிகளாகும். ஆண்-பெண்ணுக்கு இடையில் ஆணாதிக்க சுரண்டல் அமைப்பு ஏற்படுத்திய பிளவை, பெண் மீதான ஆணாதிக்க சுரண்டல் சமூக ஒடுக்குமுறை தகர்க்கும் போது, ஆண் பெண்ணுக்கு இயற்கையாகவே உள்ள பரிமானத் தெரிவான உணர்ச்சி தடுக்கப்படாத சமூகத்தில் ஓரினச் சேர்க் கை என்பது இல்லாமல் போய்விடும். அதுவரை இருப்பதை நியாயப்படுத்துவதற்குப்பதில் அதை எதிர்த்து போராடுவதன் மூலம், ஒரு சரியான அரசியல் மார்க்கத்தை முன்வைத்தும் ஆண்-பெண் ணுக்கு இடையில் உள்ள இடைவெளியைத் தகர்க்கவும் பெண் மீதான ஆணாதிக்க ஒடுக்கு முறை யை ஒழித்துக்கட்டவும் போராடுவதே எம்முன் உள்ள ஒரே பணியே ஒழிய அதை விடுத்து இருப் பதை அங்கீகரித்து அதை நியாயப்படுத்தி அதற்கு ஊடாக ஆணாதிக்கத்துக்கு வக்காலத்து வாங் குவது அல்ல.

சில குறிப்புகள் -

ஒரு பொருளில் இருபோக்குகள் இருக்க முடியும் என்ற பின்நவீனத்துவ நியாயப்படுத்தல் தான், ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை ஏகாதிபத்தியத்துக்கு சார்பாக மாற்றக் கோருகின்றது. அதாவது யமுனா முன்வைத்த ரங்கூன் சினிமா அமெரிக்காவுக்கு சார்பாகவும் அதேநேரம் அங்குள் ள ஜனநாயகப் போராட்டத்தைச் சித்தரிப்பதால், இரட்டைத்தன்மை கொண்டவை. ஆகவே அதில் நல்ல அம்சம் உள்ளது. எனவே படத்தை ஜனநாயகத்தின் பெயரில் நாம் ஏற்றுக் கொள்ள வேண் டும் என்கின்றார். இது பின் நவீனத்துவத்தின் இழி நிலபரத்தைக் காட்டுகின்றது. இது இன்று பணம் வாங்கி மூன்றாம் உலக நாடுகளில் இயங்கும் தன்னார்வக்குழுக்கள் செயற்பாடு. அன்னை திரேசாவின் காட்டுமிராண்டித்தனமான திமிர்த்தனமான கத்தோலிக்க செயற்பாடு, டயானாவின் ஆடம் பரத்தில் மக்கள் மீதான செயற்பாடு, எம்.ஜி.ஆர். இன் சினிமாத்தன செயற்பாடுகள் என அனைத் தையும் அங்கீகரிக்கக் கோருவதுமாகும். அதாவது இரண்டும் உண்டு. நல்லதை உயர்த்தி அவர்களைப் போற்றுவோம் என்கின்றனர். இது பின்நவீனத்துவ கோட்பாட்டின் பின் நின்று ஏகாதிபத் தியத்துக்கு, ஒடுக்கும் வர்க்கத்துக்கு சேவை செய்யும் செயலாகும்.


*-சக்திக்காக எழுதப்பட்ட கட்டுரை சமரிலும் பிரசுரிக்கின்றோம். -*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆயிரம் ஆண்டு மேற்கு சூறையாடல் போதும், இனி நாம் எமது சொந்த காலில் நிற்க போராடுவோம்



கிழக்கும் மேற்கும் என்ற அனைத்துலகத் தமிழ்படைப்புகளின் தொகுப்பு என்ற பெயரில் ஒன்றை லண்டன் தமழர் நலன்புரி சங்கம் வெளியிட்டுள்ளது. இவ் வெளியீடு தொடர்பான விமர்சனம் நீண்டது. சுருக் கமான விமர்சனத்தை மட்டும் வெளியிட முடியும் என்பதால் பலவற்றை விடுத்து சுருக்கமாக விமர்சிக்க முனைகின்றோம்

"கிழக்கும் மேற்கும்" என்ற அனைத்துலகத் தமிழ்ப் படைப்புக்களின் தொகுப்பு என குறிப்பிட்ட இவ் வெளியீடு தான் தமிழ் பேசும் அனைத்துலக மக்களின் வெட்டுமுகத்தோற்றம் எனின் இதையிட்டு நாம் வெட்கி தலைகுனியவேண்டும். உலகில் மிக அதிகளவு மக்கள் பேசும் மொழியில் தமிழும் ஒன்று. இந்த மொழியின் படைப்புகள் "கிழக்கும் மேற்கும். கொண்டு உள்ளது போல் தான் இருப்பின் தமிழ் மொழி அழிவதைவிட வேறு வழியில்லை. "கிழக்கும் மேற்கும்" ஓர் அனைத்துலக தமிழ்படைப்புகளின் தொகுப்பு அல்ல. இதை விட மிகச்சிறந்த படைப்புகள் மனிதனின் அடிப்படை பிரச்சினைகள் மீது படைக்கப்பட்டுள்ளன, படைக்கப்படுகின்றன. எனவே அவைகளை இவ் "கிழக்கும் மேற்கும்" கொண்டிராதவரை இது அனைத்துலக என்பதற்கு பதில் வேறு ஒன்றே என்பது தெளிவான ஒன்று.

அனைத்துலக படைப்புசரி, புலம் பெயர்ந்த படைப்புசரி மனிதர்களின் அடிப்படை பிரச்சினைகளை உள்ளடக்க வேண்டும். யுத்தம். அகதி. குடும்பப்பிரிவு. புலம்பெயர்வு இரண்டாவது பிரசையாக வாழும் புலம்பெயர் வாழ்வு, சாதி ஒடுக்குமுறை. பெண் அடக்குமுறை. சுரண்டல். வறுமை சிறுவர்பாலியல் வன்முறை. ஜனநாயக மறுப்பு என பல பலவாக இது நீண்டது நெடியது. "கிழக்கும் மேற்கும்" எதைக்கொண்டுவந்துள்ளது. ஒரு சில எழுத்தாளரை தவிர மற்றவை பிரச்சனையில் இருந்து விலகிவிடுகின்றது. இது ஏன் இதற்கு தொகுப்புரை வழங்கிய இ.பத்மநாம ஐயரின் கூற்றைப் பார்ப்போம்.

"படைப்பின் உள்ளடக்கம் அரசியல் போன்றன பற்றிய விவாதங்களின்று விலக்கி நிறுத்திக் கொணடோம்" என குறிப்பிடுகின்றார். இது உண்மைதானா எனப்பார்ப்போம்.

சுரண்டலுக்கும் சுரண்டலுக்கு எதிரான அரசியலில் இப்புத்தகம் எதன் பக்கம் நிக்கிறது. நிச்சயமாக சுரண்டலுக்கு எதிராக அல்ல. ஏகாதிபத்தியத்துக்கும் மூன்றாம் உலகத்திற்கு இடையிலான முரண்பாட்டில் இப்புத்தகம் எதன்பக்கம் நிற்கிறது. நிச்சயமாக மூன்றாம் உலக சார்பாக அல்ல. சிலவேளை அரசியலை புலியின் அரசியலாக நினைத்து கூறின் புலிக்கு சார்பான, எதிரான அரசியலில் எதன்பக்கம். நிச்சயமாக புலிக்கு எதிராக அல்ல ஜனநாயகத்துக்கு சார்பாக அல்ல. நிச்சயமாக இப்புத்தகம் பொத்தம் பொதுவில் அரசியல் உண்டு. அது நிச்சயமாக நடுநிலையின் பெயரில் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக அல்ல. புத்தகத்தில் விதிவிலக்குகள் உண்டு. ஆனால் பொதுவில் இது ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியலை கொண்டது அல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்கு ஐயரின் பிறிதோர் கூற்றை பார்ப்போம்.

"மனித குலம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நின்றுகொண்டிருக்கின்றது. அடுத்து வரும் ஆயிரமாாண்டுகளை வரவேற்கவும், அந்த ஆயிரமாண்டுகளில் மனித குல மேம்பாட்டிற்கான செயற் திட்டங்களை வகுப்பதிலும் மேற்கு நாடுகள் ஈடுபட்டுள்ளன" எனக் கூறும் ஐயரின் கருத்தை ஒட்டி கி-செ-துரையின் முதலாவது கட்டுரை அதை பிரதிபலிக்கின்றது.



மேற்கு நாடுகள் கடந்த 1000 வருடத்தில் எதை உண்மையில் செய்தன. இந்த ஏகாதிபத்தியங்கள் உலகை பங்கிட்டு சூறையாடி தமது காலனியாக்கி உலகின் அனைத்து செல்வங்களையும் கவர்ந்து சென்றன. இதன் மூலம் தமது பலத்தை பெருப்பித்து அடுத்த ஆயிரம் வருடத்திற்கு எப்படி சூறையாடுவது எனத்திட்டமிடுகின் றன.

மூன்றாம் உலக தமிழன் உட்பட அனைத்து மூன்றாம் உலகமனிதனும் சொந்த சுய பொருளா-தாரத்தை இழந்து கைகட்டி வாய்பொத்தி கையேந்தவைத்த கடந்த காலம் சூறையாடலையும் எதிர்கால மேற்கு நாட்டு கனவுகளையும் நாம் எதிர்த்து போராடவேண்டுமே ஒழிய இவ் தொகுப்புரை கூறுவதுபோல் கையேந்தி நிற்க கோருவது தமிழரான எமக்கு அழிவைத்தான் தரும். துரையின் வாதத்தில் அய்ரோப்பிய ஒன்றுபாடு உயர் வாழ்க்கையை எட்டிப்பிடிக்க முயலும்போது அதில் எமது நிலை அதை ஏற்று நாம் மாறுதல் காணவேண்டும் என்கிறார். அடுத்து அவர் அய்ரோப்பியரின் கடந் தகால சூறையாடலை தவறானது என பேசவேண்டாம் என்கிறார் எப்படி வளத்தை பயன்படுத்துவது என பார்க்க கோருகிறார்.

அடுத்து முன்னேறிய சமுகத்துக்கு பின்தங்கிய சமூக இடைவெளியை கடக்க கீழ் இருந்து சமூ கத்தை சீர்குலைக்காது (புரட்சியை நடத்தாது இது நாம்) தயார்படுத்த வேண்டும் (அமைதியாக என் கிறார்) அடுத்து இரண்டாம் உலகயுத்தம் இல்லாவிட்டால் ஜப்பானையும் ஜேர்மனியையும் இப்படி கட்டியிருக்க முடியுமா? என்கிறார். எப்படி இருக்கிறது. அப்பட்டமாக ஏகாதிபத்தியத்துக்கு (மேற்கு நாடுகளுக்கு) சேவை செய்யும் இக்கட்டுரை, மூன்றாம் உலக கொந்தளிப்பை தணிக்க கோருகின் றார். நீ உழைத்தால் முன்னேற முடியும் என்கிறார். ஏன் அவனை திட்டவேண்டும் என்கிறார். அய் ரோப்பிய ஒன்று இணைவு சொந்த நாட்டை சூறையாடியபடி மூன்றாம் உலக நாட்டை சுடுகாடாக் குகின்றது.

இதை மறந்து மயங்கியிருக்க கோரும் இந்த "கிழக்கும் மேற்கும்" கட்டுரையின் அரசியல் நிச்சயமாக ஒடுக்கப்பட்ட மக்களினது அல்ல. அடுத்து மிகப்பெரிய இடத்தை எடுத்த யமுனா ராயேந்திரனின் பார்த்திபனின் கதைகள் குறித்த விமர்சனத்தைப் பார்ப்போம்.

புலம் பெயர் இலக்கியம் குறித்த யமுனாவின் கட்டுரை பார்த்திபனை அறிமுகத்துடன் முகமனுக்கு அப்பால் அது எதை கொண்டுவந்ததுள்ளது. எதுவுமே இல்லை. யார் இந்த பார்த்திபன் என்ற அறிமுகத்தில் பார்த்திபன் எப்படி ஒரு எழுத்தாளன் ஆனான் என்பது வசதியாக வசதிகருதி மறந்து போனது ஏன்? பார்த்திபன் புலிகளுக்காக ஜேர்மனியில் செயற்பட்டதும் 1986 இல் புலிகள் ரெலோ வை அழித்தபோது ஜனநாயகத்தை வலியுறுத்தி விலகியதும் பின் "தூண்டில்" என்ற ஜனநாயகத் துக்கான கோரிக்கையில் ஒரு சஞ்சிகையை வெளியிட்ட பார்த்தீபனின் முகம்தான் எல்லாவற்றுக்கும் அடிப்படை.

ஒரு படைப்பாளியை அறிமுகம் செய்யும் தேவை ஏன் யமுனாவிற்கு ஏற்பட்டது? படைப்பாளியின் கதையை விமர்சனத்திக்கு உள்ளாக்கமுடியாத புகழ் உரைகள் அந்த படைப்பாளியின் உயிர் ஓட் டமான மனித உணர்வுகளை சிதைக்க கைக்கொள்வதாகும். உண்மையான விமர்சகர், உண் மையான படைப்பாளிக்கு இடையில் உள்ள மனித நேயம் பாராட்டுக்களில் அல்ல விமர்சனங்களில் சார்ந்துள்ளது. பார்த்திபன் கதைகள் ஏதோ உயர்படைப்புகள் என யமுனாவால் காட்ட முடியுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்திபன் கதைகள் விமர்சனத்துக்கு உரியன. அதை பார்த்திபனே ஏற்கக்கூடிய ஒரு படைப்பாளி. அப்படியிருக்க யமுனா ஏன் விமர்சிக்க முன்வராது அறிமுக பாராட்டுகள் தேவைப்படுகின்றன. அய்ரோப்பிய இலக்கியச்சந்திப்பு, முதுகு சுரண்டல் போல் யமுனா பார்த்திபனுக்கு செய்ய விமர்சனத் திற்குரியது.

பார்த்திபன் கதைகள் யதார்த்ததின் மீதானதாக உள்ளது. இந்த யதார்த்தம் மீதான தேடுதல் பார்த்திபனிடம் இருக்கும் அதேநேரம் அதன் மீதான கீறல்விழுந்த மெல்லிய விமர்சனம் தொனிக்கின்றது. இதை கடக்கமுடியாதது அரசியல் இன்மைதான். பார்த்திபனின் கதைகளின் தொடர்பு உயிர் ஓட்டம் இழந்து போகின்றது. அதாவது ஒரு யதார்த்தம் மீதான விமர்சனத்தை முன்வைக்கும் தைரியத்தை பார்த்திபனிடம் காணமுடியாது. அதை கடந்து ஒருவழியை காட்டும் வரவேற்கும் கோட்பாட்டை வைக்கும் பலமும் பார்த்திபனிடம் கிடையாது. பார்த்திபன் எல்லாக் கதையிலும் இக் குறைபாடு காணப்படுகின்றது. இதை விட ஒவ்வொரு கதையிலும் குறைபாடு இருந்த போதும் எல்லாவற்றிலும் நான் மேற் குறிப்பிட்ட பிரச்சனைதான் பார்த்திபனின் கதைகளின் ஓட்டத்தை முறித்து விடுகின்றது. ஒவ்வொன்றாக எடுப்பின் விமர்சனம் நீண்டுவிடும். ஆனால் இது சுருக்கமாக இறுக்கமான விமர்சனமாகும்.

சி.சிவரஞ்சித்தின் புலம் பெயர் சூழலில் எங்கள் மொழியும் குழந்தைகளினது தமிழ் கல்வி தொடர்பான கருத்து ஆழமான பாரவையோ ஏன் கல்வி தேவை என்பதையோ குறைந்தபட்சம் ஆய்வுக்கு உள்ளாக்காத நடைமுறை வாதங்களே. நாம் தமிழர், எங்கள் மொழி தமிழ், எங்கள் கலாசாரம் அறிய ஆகவே எங்கள் குழந்தைகள் தமிழ் படிக்கவேண்டும் என்பதைத் தாண்டியது அல்ல சிவரஞ்சித்தின் வாதம். ஒரு குழநதைக்கு இப்படி தான் தமிழ் என்றால் தமிழை திணிக்கத்தான் முடியுமே ஒழிய வேறு ஒன்றும் நடக்காது.

முதலில் மொழி என்றால் என்ன என பார்க்க வேண்டும். இரண்டு மனிதர்க்கு இடையில் தொடர்பு மொழி மட்டும்தான் மொழி என்பதை புரிந்து கொண்டால் மட்டுமே மொழி தொடர்பாக சரியான சிந்தனை முன் எழும். குழந்தைக்கு ஒரு தொடர்பு மொழி இருக்கும் பட்சத்தில் தமிழ் ஏன் என்ற கேள்வி எழுவதும் அதற்கு பதில் தர முடியாது பெற்றோர். சிவரஞ்சித் கட்டுரை, வெறும் மொழித் திணிப்பை நடத்த முடியுமே ஒழிய இயல்பான மொழி கற்றுவித்தலை அல்ல. மொழி ஏன் தேவை என்றால் நாம் இரண்டாம் தர பிரசையாக இந்த நாட்டில் வேண்டாத பிரசையாக நாம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளோம். இந்த ஒரேயொரு காரணத்தால் மட்டுமே நாமும் எம் குழந்தைகளும் தவிர்க்க முடியாது. நாம் எங்கு இருந்தோம் என்ற தேடுதலுக்கும், போராட்டத்திற்கும் தமிழ் கற்றுக் கொண்டு அதில் இருந்து முன்னேற அவசியமாக உள்ளது. இது தமிழ் கல்வியின் அடிப்படை பிரச்சனையாகும். அடுதது

"பாரதி ஒரு மறுவாசிப்பு "என்ற இந்திரா பார்த்த சாரதியின் கட்டுரையைப் பார்ப்போம்.

"பாரதியின் அந்தரங்க குரல் எது பகிரங்க குரல் எது" என மறுவாசிப்பின் ஊடாக கேட்டு பாரதியையே கொச்சைப்படுத்துகின்றார். ஒரு மனிதனில் இரண்டு நேர் எதிர் படைப்புகள் நடக்கமுடியும் என்பது சிரிப்புக்குரியது. அந்தரங்கமா பகிரங்கமா எனின் இதில் ஒன்று பொய்யாகவே இருக்க முடியும.

பாரதியின் பிற்போக்கின் மீது உள்ள சில சீர்திருத்த அம்சங்களை முற்றாக இரண்டாக பிரிப்பதன் மூலம் இரண்டையும் தனித் தனியாக நியாயபடுத்தி பாரதியின் பிற்போக்குக்கு நியாயம் கூறுவதன் மூலம், அதை நீடிக்க வைக்கும் முயற்சிதான் இந்த மறுவாசிப்பு வாதம். பாரதியின் படைப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்தவையே ஒழிய பிரிந்தவை அல்ல. இந்திரா பார்த்தசாரதி பாரதி பாடல் பற்றி தனது கொள்கை விளக்கத்தில் பின் நவீனத்துவத்தை சேர்ந்த பாடல்கள் எனக் கூற முற்படுகின்றார். பின்நவீனத்துவம் பொதுமையை மறுத்து குறித்த தனித்துவங்களை முதன்மைப்படுத்துகின்றது. பாரதியின் பொதுமையை மறுத்து, பாரதியின் குறித்த சில தன்மையை முன்னிலைப்படுத்தி பாரதியின் பிற் போக்கை பாதுகாக்க முனைவது ஆகும். அதாவது நாட்டை மறுத்து பிராந்தியத்தையும், பிராந்தியத்தை மறுத்து கிராமத்தையும், கிராமத்தை மறுத்து குடும்பத்தையும், குடும்பத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுத்து தனி நபராக பார்க்க கோரும் பின் நவீனத்துவம் மனிதர் ஒன்று சேர்ந்து போராடுவதை அடிப்படையில் மறுக்கின்றது.

அதாவது பொதுவாக சாதிக்கு பதில் தனிச்சாதி, பின் அதற்குள் சாதி, பின் தனிநபர் என கோருவதன் மூலம் இருக்கும் பொதுவானதை மறுப்பது எப்போதும் ஒடுக்கும் வர்க்கத்திற்கு சாதகமானது.

இதை அழகாக இந்திரா பார்த்தசாரதி "கவிஞன் என்ற நிலையில் அழகுணர்ச்சிக் கோயிலின் கர்ப் பக்கிரகத்தில் அழகின் பூசாரியாக இருந்து அழகை உபாசிப்பதுதான் தம் வாழ்க்கை நெறி என்று அவர் நினைக்கையில் காலத்தின் சவால்களை ஏற்க வேண்டிய சமூகப் பொறுப்பை உணர்ந்து ஒரு சமுதாய மனிதனாக ...... " என எடுத்துக்காட்டுகின்றார்.

ஒரு பார்ப்பான் பார்ப்பனாக இருந்தபடி சமூகத்தில் சாதிக்கு எதிராக, பெண் அடிமைக்கு எதிராக - தேசியவாதியாக இருக்கமுடியும் என்கிறார். இதன் விளைவு என்ன? சீர்திருத்தத்தில் எஞ்சுவது அதே பார்ப்பனிய சமூகம் தான். இதை மூடி மறைக்க பாதுகாக்க இரண்டு பக்கம், பின் தனித்தனி ஆய் வு மறுவாசிப்பு, நவீனத்துவம் என பல வகை விளக்கம் தேவைப்படுகின்றது. ஏன் எல்லாச் சமூக கொந்தளிப்பும் அதைத் தணிக்க தேடும் மருந்துகளே இவை

அடுத்து மு.பொன்னம்பலம் " விசாரம் " என்ற ஒரு பகுதியில் "இன்றைய அறிவியல் சிந்தனையை ஒதுக்கிக் கொண்டு மனித உணர்வுகளும், இயல்பூக்கங்களும் மேலோங்கியுள்ளமையை சுட்டுகின் றன என்பேன் " என்கிறார்.

உலகம் அறிவியல் சிந்தனையை ஒதுக்கிடில் மனிதன் எங்கே செல்வான் ?. இக்கட்டுரை எழுதிய பேனை பேப்பர், அச்சகம், புத்தகம் என அனைத்தும் அறிவியல் சிந்தனையின் தொடர்ச்சிதான். அறிவியல் இன்றி மனிதன் வாழமுடியாது. மனிதன் இதை நிராகரித்தான் என்று கூறுவது என்ன சிந் தனை ?.

மனித உணர்வு எங்கு இருந்து தோன்றுகின்றது. உலகில் உள்ள பொருளில் இருந்துதான். பொருளின் மீதான மீதான சிந்தனை எழுகின்றது எனின் அது அறிவியலை மறுத்து அல்ல. அடுத்த ஒரு சமூகம் சிந்தனையின் மீதான தெளிவை பெறாதபோது, அது அதை தொலைக்கும் போது சமூ கம் கீழ்நோக்கி நகர்கின்றது.ஆனால் அது அடுத்த கட்டத்தில் அதை கைவிட்டு மேல் நோக்கி வரமுயல்கின்றது.

கியுபாவில் இருந்து மக்கள் வெளியேறுவதை சுட்டிக்காட்டுகின்றார். கியுபாவில் இருந்து வெளியேற காரணம் என்ன என்ற சிந்தனைவரட்சி ஏற்படும்போதுதான் இப்படி சுட்டிக்காட்டமுடியும். தமிழ் ஈழத் தில் இருந்து மக்கள் புலம் பெயர்கின்றனர் எனின் ஏன் என்று தெரியாத ஒரு சிந்தனைவரட்சி எஞ் சின் அதை "விசாரம்" கட்டுரையில் உள்ளது போல் விளக்கலாம் .

கியுபாவில் அமெரிக்கா ஏன் பொருளாதார முற்றுகையிட்டு உள்ளது. ஏன் உள்நாட்டில் சதி செய் கின்றது. ஏன் கியுபா சந்தை பொருட்களின் விலையை அமெரிக்கா குறைக்கின்றது. ஏன் டங்கல் ஒப்பந்தத்தில் மிரட்டி கையெழுத்து கோருகின்றது ... என கொஞ்சம் சிந்தனையைவிரித்தால் அறிவு மேலோங்கும். அதைவிடுத்து ஏகாதிபத்தியத்துக்கு வக்காலத்து வாங்க முயல்வது தேவைதானா ?. வறுமை என்றால் விபச்சாரம் செய்ய கோருவது தான் உணர்வுகளும் இயல்பூக்கங்களும்.

"தகவல், தமிழ், வாழ்வு" என்ற நா.கண்ணன் கட்டுரையில் ஒரு இடத்தில் "கலைஞர் வீட்டில் கன் றுக்குட்டி பிறந்தால் சன் டீவியில் ஒளிபரப்பாகிறது. ஆயிரம் வீடுகளில் அதுவே அன்றைய தகவலாகி ஆனந்திக்க முடிகிறது " எனக் கூறும் கண்ணன் கலைஞர் வீட்டு கன்றுக்குட்டி பிறந் தால், என்ன ஏழை வீட்டில் பட்டினிதான் மிஞ்சும்.

ஏன் சண்ரீவி கலைஞனின் கொள்ளையடிப்பை செயதியாக்கவில்லை. ஏன் தகவல் ஒடுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசின் கையில் உள்ள வரை 90 வீத மக்களுக்கு அதனால் எதுவும் பிரயோசனம் கிடைப்பதில்லை. தகவல் மக்களை அடக்கும் ஒரு ஊடகமாக உள்ளதே ஒழிய மக்களின் பயன்பாட்டிற்கு மக்களின் அறிவியல் ஏணிக்கு துணைபோவது இல்லை இதை காண மறுக்கும் கண்ணன் கலைஞர் கன்று குட்டி போட்டதையிட்டு மகிழும் ஆளும் வர்க்க உணர்வை உதாரணம் காட்டுவது விசனத்துக்குரியது.

என் -கே.மகாலிங்கம் எழுதிய "கருக்கல் பொழுதும் காத்திருப்பும்" என்ற கட்டுரையில் எஸ்ரகனுக்கும் விளாடிமருக்கும் (இது நாடகப்பாத்திரங்கள்) இடையே உள்ள அன்பு, நெருக்கம், விசுவாசம் ஒருவரைப் பற்றி மற்றவர் கவலைப்படுவது, அக்கறைப்படுவது எல்லாம் அர்த்தமாவது இந்த நம்பிக்கையால்தான்" என்கிறார்.

நம்பிக்கை என்பது என்ன? நம்பிக்கை என்பது ஏமாற்றம். லொட்டோவை எடுத்து விழும் என்ற நம்பிக்கை. குதிரை பந்தயத்தில் குதிரை வெல்லும் என்ற நம்பிக்கை. பரீட்சையில் சித்தி நம்பிக்கை. காதல் நம்பிக்கை. எல்லாம் எல்லாத்திலும் நம்பிக்கை. இது ஒருவித மோசடி ஏமாற்று. மனிதனின் தேவையை, கோபத்தை, துன்பத்தை என அனைத்தையும் தணிக்கும் மருந்தாக. உள்ளவன் சொல்லித்தரும் ஒரு விடயம் "நம்பிக்கையாக" இவை எல்லாம் சரிவரும் என்பது.

நம்பிக்கை அல்ல ஒருமனிதனின் தேவையை பூர்த்தி செய்வது. மாறாக வாழ்வதற்காக போராடுவதுதான் மனிதன் தன் உயிர்வாழுதலுக்கான தேடுதல், போராட்டம் தான் அனைத்தும். நம்பிக்கை என்பது தேவையை மறுக்கவும், தேவைகிடைக்கும் என நினைக்க வைக்கச் செய்யும் தந்திரம்தான் நம்பிக்கை என்ற மந்திரம் ஆகும். அது எப்போதும் எல்லோருக்கும் கிடைப்பது அல்ல. இப்படியாக "கிழக்கும் மேற்கை" கேள்விக்கு உட்படுத்தியபடி அதே அளவுக்கு ஒரு புத்தகத்தை விமர்சனமாகவே எழுதமுடியும். படைப்புக்கள் மீதான ஒரு விமர்சனம் என்பது அதன் தவறுகள் மீதானதே.

விமர்சனத்தை சுருக்கம் கருதி இத்துடன் முடிக்கும் நாம், படைப்புகளை விமர்சனக் கண்கொண்டு, அது சமூகத்துக்காக என்ன சொல்ல முனைகின்றது என்ற கேள்வியில் இருந்து பார்க்க கோருகின்றேன்.



### வாசகர்களுக்கு!

வாசகர்களே, பெருகிவரும் திரிபுவாதங்களுக்கும், சந்தர்ப்ப, இடது விலகல்களுக்கும் எதிராக போராடிவரும் சமர், ஒரே இதழில் எல்லாவற்றையும் கொண்டுவர முடியவில்லை. எதிர்ப்புரட்சிக்கு எதிரான எமது கட்டுரைகளை எழுதிக்கொண்டிருக்கும் போதே திரிபுவாதிகள் புற்றீசல்போல் எழுதி பிரசுரித்துவிடுகின்றனர். அவர்களின் பணப்பலமும், ஏகாதிபத்தியத் தயவும் அவர்களைத் துரிதப்படுத்துகின்றன. இதனால் சமரானது, பணம் மற்றும் இதழுக்கான பக்கநெருக்கடியையும் சந்தித்து வருகிறது. வாசகர்களே, தங்களது சந்தாக்களையும், பங்களிப்பையும் துரிதமாக்குங்கள். சமரை காலக்கிரமத்தில் கொண்டுவர உழைப்போம்! சமர் ஆர்.கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சரிநிகரில் உள்ள பெரும் தேசியவாதிகளின் திட்டமிட்ட தமிழ் தேசிய ஒடுக்குமுறை வெளிப்படும் நிலையில்

அண்மையில் பாரிஸ் வந்திருந்த சரிநிகர். மற்றும் மோர்ஜ் நிறுவனத்தின் முக்கிய நிர்வாக உறுப்பினர் வெளிப்படுத்திய சில கருத்துக்களை அறியக் கூடியதாக இருந்தது.

சரிநிகர் பத்திரிகையினுள் உள்ள முரண்பாடுகள் பற்றி பேசிய அவர், சரிநிகரில் தமிழ் தேசியத்தை உயர்த்திப் பிடிக்கும் மூவர் பெயர் குறிப்பிட்டு தனது அதிருப்தியை தெரிவித்துக்கொண்டார். அம்மூவரையும் வெளியேற்ற மோர்ஜ் நிறுவன நிர்வாகத்தில் இருந்த ஒருவர் தடுத்து வந்ததாகவும், அவர் தற்போது இறந்துவிட்டதால் அம்மூவரையும் வெளியேற்ற வேண்டும் எனப்பிரகடனம் செய்தார்.

இம் மூவரையும் வெளியேற்றத்தடையாக உள்ள மிகப்பெரிய பிரச்சனை, சிங்கள பெரும் தேசிய இனவாதத்துக்கான சார்பு எனப்பார்க்கப்படும் என்ற பயம் தான் இவர்கள் முன் பிரச்சனையாக உள்ளது. இதை வெட்கம் இன்றி கூறிக்கொண்ட அவர், இதைத் தடுக்க ஒட்டுமொத்தமாகவே சரிநிகரை ஏதாவது ஒரு காரணம் கூறி நிறுத்திவிடுவது நல்லது என நம்புகின்றார்.

அதாவது கொழும்பும், மற்றும் தமிழ் பிரதேசங்களில், சரிநிகரின் அரசியல் வங்குரோத்துக்கு அப்பால், இன்று உள்ள நிலையில், அதன் ஆய்வுத்தளங்கள், மனிதர்களின் சிந்தனைத்தளத்தை அகலமாக்குகின்ற அபாயத்தை சிங்களப்பேரினவாதம் சகித்துக்கொள்ள முடியாதுள்ளது. தேசியம் பற்றி புலிகள் இராணுவவாதமாக சீரழிந்துள்ள நிலையில் சரிநிகர் மட்டும் தான் சிறுசஞ்சிகைக்கு வெளியில், தேசியத்தின் அரசியல் பிரச்சனையைப் பேசுவதும், அதனால் போராட்டம் அரசியலால் ஆயுதபாணியாவதால், அதை தடுக்க சிங்கள பேரினவாதம் முயல்கின்றது.

சரிநிகர் தேசியப் போராட்டம் தொடர்பான சரியான அரசியல் வழியைக் கொடுக்காத நிலையிலும், அது முன்வைக்கும் நியாயமான தேசிய வாதங்கள் பேரினவாதத்துக்கு தலையிடியாக உள்ளதால், அதை முன்வைப்பவர்களை வெளியேற்றுவது அல்லது நிறுத்திவிட தயாராக அதன் நிர்வாகிகள், ஆசிரியரின் ஒருபகுதி தீவிரமாக முயன்று, அதற்கான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. ஐரோப்பா வந்த இந்தப் பேரினவாதப்பிரதிநிதி தனக்கென்று ஓர் அரசியல் இல்லை எனக்கூறியபடி பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் எடுபிடியான இவர், சந்திரிகா அரசு பற்றி வெளிப்படுத்திய நியாயங்களை ஆராய்வோம்.

சந்திரிக்கா அம்மையாரும், பீரிஷ்சும் தமிழ் மக்களுக்கு தீர்வை நிச்சயமாக தருவார்கள் என சாத்தியம் பண்ணிய இந்தப்பேரினவாதி, சந்திரிகா தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்க விரும்புவதால் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைக் கொடுத்து, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற முனைகிறார். இதற்காக தீர்வை முன்வைப்பார் நம்புங்கள் என்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அதுபோல் பீரிஷ் தான் உலகில் ஒரு சிறந்த ராஜதந்திரி என நிறுவ விரும்புவதால் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்க விரும்புகிறார் என நம்புங்கள் துரோகம் இழைக்க வாருங்கள் என்கிறார். இருவரும் நோபல் பரிசு பெற முயல்வதால் தீர்வு தருவார்கள் என்று நாளை கூறினாலும் கூறுவார்கள்.

எப்படி ஏமாற்ற முடியும் எப்படி நம்ப வைக்க முடியும் என்ற பேரினவாத சிங்கள சதிராட்டத்தின் வெளிப்பாடு தான் இந்த பேரினவாத வெண்தாமரை கண்டுபிடிப்புக்கள். சமாதானம் பற்றிய மக்களின் நம்பிக்கைகள். எதிர்பார்ப்புக்களை தமக்கு சாதகமாக காணும் இந்த நரித்தனமான பேரினவாத சக்திகள், தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை குழிதோண்டிப் புதைக்க நிற்கும் சதியாளர்களாக பவனி வருகின்றனர். மனித உரிமை பற்றி அரசியல் போதனை கேட்க, பேச, விவாதிக்க ஐரோப்பிய ஒடுக்குமுறையாளர்களிடம் வரும் இவர்கள், மனித உரிமையை யாரும் சொல்லித்தான் தெரியும் நிலையில், இன்று ஐரோப்பிய விஜயங்களை ஏகாதிபத்திய அழைப்புக்களில் செய்கின்றனர்.



இலங்கை மக்களினது, தமிழ் பேசும் மக்களினதும் ஒடுக்குமுறை. அதன் துன்பங்கள், துயரங்கள், ஓர் இனத்தின் ஜனநாயக உரிமை என்பன வெட்டவெளிச்சமானது. இதை நாம் தெரிந்து கொள்ள, ஐரோப்பிய எஜமானர்களின் மனிதஉரிமை கல்விக்கூடங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியது இல்லை. இப்படிக் கேட்டுத் தெரியும் இந்த மாதிரியான பேரினவாத சிங்கள அடிவருடிகள், எப்படி தமிழ் மக்களை ஏமாற்றி மனித உரிமை பேச முடியும் என்பதைத்தான், ஏகாதிபத்திய உரிமை ஆய்வு கூடங்களில் கற்றுக் கொள்கின்றனர். இவர்களை இனம் கண்டு கொள்வதும், இவர்களை வேரறுப்பதும் இன்று தேவையான அவசரமான பணியாக உள்ளது. ○

---



# உள்ளடக்கம் கேள்விக்கு உள்ளாக்கப்படும் போது, மறுக்கப்படும் கருத்துச்சுதந்திரம்

கலை இலக்கியம் யாருக்காக எதற்க்காக படைக்கப்படவேண்டும் என்ற கேள்வி, இன்று சமூகத்தில் கேள்விக்கு உள்ளாக்கப்படாமல் உள்ளது. படைப்புகள் படைக்கப்பட்ட பின் அதன் கலை அம்சம் மட்டும், புகழுக்குரிய சிறந்த படைப்புகளாகி விடுகின்றன. படைப்பின் உள்ளடக்கம் அதை ஒட்டிய சமூகப் பார்வை என்பது விவாத்துக்குரியதாக பார்பது என்பது, கலை இலக்கியவாதிகள் மீதான சட்டாம்பித்தனமானது என சேறு அடிக்கும் நிலையில், படைப்புகள் பற்றிய துல்லியமான ஒரு விவாதம் அவசியமாகின்றது.

ஒரு படைப்பு மனிதன் முன் கற்பனையாக திடீரென வருவதோ, இதற்கென உருவாகியுள்ள படைப்பாளிகள் முன் விழுந்து விடுவது இல்லை. மாறாக சமூகத்தில் ஒரு பொருளாக மறைமுகமாகவோ நேரடியாகவோ உள்ளது. படைப்பு என்பது மனிதனின் ஐந்து அறிவான பார்த்தல், கேட்டல், சுவைத்தல், நுகர்தல், தொடுணர்ச்சி என்ற மனித அறிவுக்கு அப்பால் ஒருக்காலும் ஒரு படைப்பை யாராலும் தரமுடியாது. இதில் ஒன்று அல்லது பல சேர்ந்த நிலை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில்தான் மனிதசிந்தனை தோன்றுவதுடன் அதில் தான் படைப்பு உருவாகின்றது. பொருளை ஐந்து புலன் அறிவுக்கு உட்படுத்திய செய்திதான் படைப்பாகின்றது. இது அனைத்துக்கும் பொருந்தும். பொருளை மறுப்பவர்கள், இலக்கியத்தில் பொருளில்லை என்பவர்கள், இந்த ஐந்து புலனுணர்வுக்கு வெளியில் ஒன்றை படைக்கமுடியும் என்பவர்கள் கருத்து முதல்வாதத்தை முன்தள்ளுகின்றனர். பொருள் இன்றி உலகில் எதுவும் இருக்க முடியாது. வாய் பேச முடியாத காது கேட்க்க முடியாத ஒருவன், காது மூலம் கேட்டோ வாய் மூலம் விவாதித்தோ ஒன்றை உருவாக்க முடியாது. மிகுதி மூன்று மூலமும் தான், அதே நேரம் கைப்பாஷை மூலமும் தான் முடியும். கண் தெரியாத ஒருவன் ஒன்றைப்பார்த்து படைக்க முடியாது. படைப்பு என்பது பொருளை புலனுணர்ச்சிக்கு உட்பட்டுத்தி தான் உருவாகின்றது.



படைப்பு என்பது பொருள் மீதான புணர்ச்சிக்கு உட்பட்டது என்பதும், அது இல்லாத எந்தப்படைப்பையும் உருவாக்கமுடியாது. இந் நிலையில் படைப்பின் கலை அம்சம் உள்ளடக்கம் என அனைத்தும் இந்த புலனுணர்ச்சிக்கு உட்பட்டதுதான். இதற்கு வெளியில் கற்பனையில் ஒருக்காலும் முடியாது. இந்நிலையில் உள்ளடக்கத்தை எடுப் பின் ஒருமனிதன் முன் எது ஒரு பொருளாக உள்ளதோ அது மட்டும்தான் படைப் பாகின்றது. ஒரு பொருளை, ஒரு கருவை ஒரு மனிதன் எப்படி அறிந்து தெரிந்து கொண்டு உள்ளான் என்பது மட்டும்தான், அதன் மீதான படைப்பு மட்டுமின்றி அவனின் அறிவாகவும் உள்ளது.

ஆகவே மனிதனுக்கும் அப்பொருளுக்கும் உள்ள உறவு, அது என்ன உறவாக உள்ளதோ அதைத்தான் படைக்கின்றான். அதைத்தாண்டி ஒருக்காலும் அவனால் வேறு ஒரு படைப் பை உருவாக்கமுடியாது. ஒரு பொருள் மனிதர்களின் முன் அவனின் பயன்பாட்டுடன் பலவிதமாக காட்சியளிக்கின்றது. ஒரு கல்லை எடுத்தால் வேட்டைக்காரன் முன் வேட்டை ஆயுதமாகவும், ஓர் ஆய்வாளன் முன் ஆய்வுக்குரிய பொருளாகவும், கட்டிடக்கலைஞன் முன் அது கட்டிடக்கலை பொருளாகவும் தேவையை ஒட்டியும் அதன் பயன்பாட்டையொட்டியும் விளக்கம் கொடுக்கமுனைகின் றனர். ஆனால் அது எல்லோர் முன்னும் ஒரு கல்லாக, தனக்கேயுரிய குறித்த சேர்க்கைகளை கொண்ட பொருளாகவுள்ளது. ஆனால் பொருள் எப்போதும் மாறுவது இல்லை. அதாவது இங்கு வேறுபாடு என்பது மனிதனின் பயன்பாட்டுடன், பொருளுக்கு உள்ளதொடர்புடன், அவனின் நிலை யுடன் தொடர்புடைய விடையமாக உள்ளது.

ஓர் ஏழை ஒருபணக்காரன் முன் அருவருப்புக்குரிய எளிய பிறப்பாகவும், சுரண்டும் முதலாளி முன் அடிமை நாயாகவும், மத்தியதரவர்க்கத்துக்கு முன் பரிதாபத்துக்குரிய ஜீவனாகவும் பல்வேறுபட்ட மக்களின் சமூகப்பார்வைக்கு ஏற்ப மாறுபட்ட வடிவங்களில் பார்க்கப்படுகின்றன். இது எல்லாப் பொருளிலும் மனிதனின் மாறுபட்ட சமூகநிலையுடன் மாறுபட்டுப் பார்க்கப்படுவதுடன் அதற்க்கு ஏற்ப மாறுபட்ட விளக்கமும் கொடுக்கப்படுகின்றது. உலகில் உள்ள ஒரு பொருள் சுயமாக ஒருக் காலும் இயங்க முடியாது. மாறாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டபடிதான் எல்லாம் இயங்குகின்றது. படைப்பில் சமூக நிகழ்வுகள் சரி, இயற்கை சரி ஒன்றுக்குள் ஒன்றாக இனைந்தே இயங்குகின்றது. படைப்பு சமூக ஏற்ற இறக்கங்களை புறக்கணிக்க முடியாத வகையிலும், இயற்க்கையும் சேர்க் கையும் ஏற்ற இறக்கத்துக்கு உட்பட்டே இயங்குகின்றது. இதை மீறி யாரும் ஒன்றிலும் தொடர்பு அற்ற படைப்பை படைக்க முடியாது. இந்த வர்க்க சமுதாயத்தின் ஏற்ற இறக்கத்தை மீறி ஒரு படைப்பை தரமுடியாது. சாதாரண இயற்க்கை கூட பயன்பாட்டில் பிளவுபட்டுள்ளது. எனவே படைப்பு என்பது வர்க்க எல்லைக்கு உட்பட்டது என்பதும், படைப்பு தனக்குள் தானே வர்க்க முத்திரையை குத்திக்கொண்டுள்ளது. இயற்க்கையும் சேர்க்கையும் உள்ளடக்கிய கலை இலக்கியப் படைப் புகளை மேலும் ஆராய்வோம்.

மனிதன் பிளவுண்ட வாழ்நிலையும், அதையொட்டி பொருளின் பயன்பாடும் முழுமையற்ற நிலையில் உலகில் காணப்படுகின்றது. இதனால் பொருளை முழுமையாக பார்க்கமுடியாத நிலை அல்லது முழுமையாக பார்த்தலை மறுத்து பொருளை பகுதியில் காண்பதன் மூலம், அரைகுறை விளக்கத் தை கொடுப்பதன் மூலம், பொருளை அவர்களை மீறி மறுக்கின்றனர். இது இன்று எல்லாப் படைப் புகளிலும் விதிவிலக்கின்றி விரவிப்போய்யுள்ளது. பொருளை முழுமையாக பார்க்க மறுக்கும் போக் கும், பகுதியாக பார்த்து அதற்க்கு விளக்கம் கொடுப்பதும், படைப்பிலக்கியத்தில் கேள்விக்கு அப் பாற்பட்ட அறையப்பட்ட விடையமாக இன்றுள்ளது. ஒரு சமூகத்தில் ஒரு படைப்பின் உள்ளடக்கம் கலையம்சம் வேறுபட்ட மக்கள் முன் எப்படி இன்று உள்ளது எனப்பார்ப்பதும், அது முழுமையில் என்ன நிலையில் உள்ளது எனப்பார்ப்பதும் மறுக்கப்படுகின்றது. இன்று முன்னேறிய படைப் பாளிகளாக கூறிக்கொள்ளும் அனைவரும் இந்த சாபக்கேடான நிலையில் உள்ளனர். இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களையப்பட வேண்டும். இது மட்டும்தான் உயிரோட்டமுள்ள சமூகத்தை உருவாக்க முன்நிபந்தனையாக உள்ளது.

சமூகத்தில் உள்ள பிரதான முரண்பாடும், அதற்க்கு அடுத்த முரண்பாடுகளையும் கவனத்தில் எடுக்காத எல்லாப்படைப்புகளும் சமூகம் இருக்கும் நிலையில் சீர்திருத்தைக் கோருவனவாகவே உள்ளது. அதாவது பிரதான முரண்பாட்டுடன் இணைந்து படைப்பை பார்க்கமறுக்கும் போது, இருக்கும் சமூகத்துக்குள் சுற்றிச்சுற்றி நிலைநிறுத்த எத்தனிப்பதாகும். சமூகம் இன்று முரண்பாடுகளால் சூழ்ந்துள்ளது. எனவே பஞ்சமில்லா முரண்பாடுகளில் ஒன்றை படைப்பில் உள்ளடக்கி விட்டால், அவை எல்லாம் முற்போக்குப் படைப்பாகிவிடுமா? இல்லை நிச்சயமாக ஒருக்காலும் இல்லை. மாறாக அவ்முரண்பாட்டுக்கும் பிரதானமுரண்பாட்டுக்கும் என்ன உறவைக் கொண்டு உள்ளன எனப் பார்க்க படைப்பு மறுப்பதோ அல்லது கொண்டு இருக்காத வரை, அப்படைப்பு சமூகத்தின் வெறும் சீர்திருத்த எல்லைக்குள் சமூகத்தை முடக்க கோருவதோ அல்லது மனிதாபிமானம் பேசும் விடையமாக சீர்ரழிகின்றது.

இங்கு ஒரு கேள்வியை சிலர் எழுப்புகின்றனர். ஒருபடைப்பாளி சமூகத்தை முழுமையாக பார்க்கக் கோருவது தவறானது என்கின்றனர். இது அரசியல்வாதியின் வேலை என்கின்றனர். படைப்பாளி அரசியல்வாதியாக இருக்க வேண்டியது இல்லை என்கின்றனர். படைப்பு சமூகத்தை ஆராய்ந்து படைப்பதில்லை என வாதிடவும் பின் நிற்க்காத நிலையில், இக் கேள்வி இச்சமூகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாய்யுள்ளது. மனிதன் இச்சமூகத்துக்கு வெளியில் சுயமாக இருக்க முடியாது என்பதும், சமூகத்தை தாண்டிய படைப்பை சமூகத்துக்கு வெளியில் கொண்டு வரமுடியாது. இச் சமூகம் பிளவுபட்ட மனிதர்களின் சேர்க்கையாகவும், போராட்டக்களமாகவும் உள்ளது. இப் போராட்டமானது அரசியல் தளத்தில் நின்றபடி எல்லாத்துறைகளிலும் நடக்கின்றது. இது ஏற்ற இறக்கம் கொண்ட நிலையில் மீளமீள அமைதியற்ற நிலையில்தான் எல்லா நேரமும், இந்த வர்க்கசமூகம் நீடிக்கின்றது.

ஒரு மனிதன் நேரடியாக அரசியலில் ஈடுபட்டாலும் சரி ஈடுபடாவிட்டாலும் சரி., அவன் ஓர் அரசியல் பிராணியாக அவனை அறியாமலே இருக்க, இதுபோல் எல்லா மனிதர்களும் இருக்கின்றனர். இந்த அரசியலில் இருந்து அந்நியப்பட்டு எந்தசெயலும், ஏன் சுவாசிக்கும் காற்றும் இருக்க முடியாத வகையில், இந்த வர்க்க சமூக கொந்தழிப்புக்குள்ளும், அதன் பாதிப்புக்குள்ளும் மனிதன் சிறைப்பட்டு, ஒரு திறந்த சிறைக்கூடத்துக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளான். ஒவ்வொரு விடையம் மீதும் தீவிரமாக மாறுபட்ட அபிப்பிராயத்தை நிச்சயமாக கொண்ட, இரு பாரிய பிளவுக்குள் ஒவ்வொரு மனிதனும் கூட்டாகவும் பகை நட்பு கொண்ட சமூகமாக உலகம் உள்ளது. இந் நிலையில் இதற்க்கு வெளியில் ஒருக்காலும் இருக்க முடியாத ஒரு படைப்பாளி., ஒரு கருவையும் அதைச்சுற்றிய நிகழ்வுகளையும் அவதானத்துக்கு உட்படுத்தி, இச் சமூகத்தில் அதை விமர்சனத்தைக் கண்கொண்டு பகுத்து ஆய்வு செய்து கருவின் (பொருளின்) உள் வெளி செயல்பாடு இவ் வர்க்க சமூதாயத்தில் வெவ்வேறு நிலைகளில் எப்படி என ஆராய்ந்து அதன் முழுமையில் பார்க்காதவரை, அப்படைப்பு அரை குறையான சமரசத்துக்கு இட்டுச்சென்று சீரழிக்கின்றது.

முதலில் பொருளை முழுமையாக பார்க்க வேண்டுமாயின், முதலில் அப்படைப்பாளி சமூகத்தை ஆராய்யும் கோட்பாட்டை முரன்நிலையின்றி கண்டறியவேண்டும். இதற்க்கு யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அடிப்படையானதும் அவசியமானதுமான தத்துவமாக மார்க்சியம் உள்ளதால், அதை முரண்நிலையின்றி புரிந்து கொள்வதும், அதன் உண்மையான உண்மையை முரண் நிலையின்றி ஏற்றுக்கொள்ளவேண்டும். அதாவது ஒரு நல்ல படைப்பை படைக்க வேண்டுமாயின் மார்க்சியமின்றி சாத்தியமில்லை. இது மட்டும் தான் பொருளை முரண்நிலையின்றி ஆராய்கின்றது. புரட்சிகர சிந்தனை நடைமுறை இல்லாத வரை புரட்சிகர படைப்பு உருவாக முடியாது. இது போல் மார்க்சியத்தை புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்ளாதவரை மக்களுக்கான சிறந்த படைப்பையும் கொண்டு வரமுடியாது.

இதற்கு வெளியில் கருவின் (பொருளின்) பகுதிக்குள் அரைகுறை பிரவச பூஷ்சுவா படைப்புகள் தான் வெளிவர முடியும். இந்த வகையில் இன்று வருடம் வருடம் இலங்கை புலம்பெயர் நாடுகளில் இருந்து வெளிவரும் 700 முதல் 1000 சிறுகதைகள் இதைத்தாண்டி வெளிவர முடியாத நிலையில், இப் படைப்புகள் முதலாளித்துவ முரண்நிலையில்லாத துாய ஜனநாயகத்தை கோருவதை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளையும், சீர்திருத்தங்களையும் முன்வைத்த படைப்புகளாக விதிவிலக்குயின்றி வெளிவருகின்றது. இரண்டாவது இப்படைப்பாளர்கள் பெரும்பாலானோரின் கதைக்குரிய கருவின் தெரிவுகள் பெரும்பாலும் பூர்ஷ்சுவா வர்க்க பிரிவுகளில் ஏற்படும் மன உழைச்சல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை அடிப்படையாக கொண்டவையாக உள்ளது. பூர்ஷ்சுவா வர்க்கத்தின் துன்பம் துயரத்தில் வெளிப்படும் கருக்கள், அதற்க்கேயுரிய ஊசலாட்டத்துடன் சீர்திருத்தத்தை முன் வைக்கின்றன. இன்னுமொரு பக்கத்தில் இரண்டு வர்க்கத்தில இருந்தும் இருகருவை எடுத்து அதன் முரண் பாடுகளில் மனிதாபிமானம் பேசினால் போதும். அதுபுரட்சிகரப் படைப்பாக சிலர் பார்க்கும் பூர்ஷ் சுவாத்தனமும் இன்று அதிகரித்துள்ளது.

பொதுவாக இந்தியா சினிமாவை எடுத்தால் இதேபோன்ற கருக்கள் நிறையவே அங்கு இருப்பதை காணமுடியும். சிறுகதைகள் வெளிப்படுத்தும் ஓட்டு மொத்த விளைவுக்கும், சினிமா வெளிப்படுத்தும் விளைவுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு ஊடகத்திலும் மசாலத்தனத்திலும் மட்டும்தான் உள் ளது. மசாலைத்தனம் அற்ற இந்திய சினிமா கலைப்படைப்பும், வெளிவரும் படைப்புகளும் ஓரே அச்சில் வார்த்தவையாக முரண்பாடு இன்றி உள்ளது.

சமூகத்தின் முன் முரண்பாடுகள் உள்ளதால் அங்கு கருவுக்கு பஞ்சமில்லை. அதை எடுதது எழுத, கலை அம்சத்தை இணைக்க தெரிந்த எல்லாப்படைப்புகளும் முற்போக்காக மாறிவிடுமா? நிச்சயமாக இல்லை. முரண்பாடுகளின் அடிப்படை, அதன் போக்கு, அதன் வளர்ச்சி, அதன் தீர்வு என்பன ஒட்டிய முழுமையான கண்ணோட்டம் அற்ற, அதை பார்க்க மறுத்த படைப்புகள், வெற்று அனுதாபங்களும் மனிதாபிமான சோகங்களையும் மட்டும் பேசுவதால், அப்படைபுகள் சீர்திருத்தத்தை மட்டும் கோருபனவாக இச் சமூக எல்லைக்குள் முடக்குவனவாக இருக்கின்றன.



இந்த இடத்தில் தீர்வு தொடர்பான விவாதங்கள் எழுகின்றன. இதை மறுக்கும் தொடர்ச்சியில் தான் தீர்வை முன் வைக்க கோருகின்றனர். என எதிர் குற்றச்சாட்டை முன்வைத்து பிரச்சனையை திசைதிருப் புகின்றனர். படைப்பாளியின் படைப்பில் கைவைக்கும் முயற்ச்சி எனவும், படைப்பாளியின் கலைத்திறனை அழிக்கும் முயற்சி எனவும், படைப்பாளியின் சுதந்திரத்தை தடுக்கும் சர்வாதிகாரம் என முத் திரை குத்துகின்றனர். தீர்வு என்பது கலையைமறுத்த பிரச்சாரப் படைப்பைக் கோரும் ஓர் அவலட்சணமான சாவாதிகாரம் என்று கூறி திசை திருப்ப படாதபாடுபடுகின்றனர். இதை நியாயப்படுத்த மார்க் சியத்துக்கு எதிராக கோட்பாட்டளவில் செயல்படும் பிண்டங்களின் கோட்பாடுகளில் இருந்து ஆங்கு ஆங்கே பொறுக்கி முன்வைக்கின்றனர்.

மார்க்சியவாதிகள் தீர்வை பிரச்சாரத்தைக் கோருகின்றனரா? நிச்சயமாக இல்லை. மாறாக ஒரு படைப்பு தனக்குள் தானே தீர்வையும், அதை ஒட்டி திட்டவட்டமான பிரச்சாரத்தையும் கொண்டுள் ளது என்ற பேர் உண்மையை மறுக்கும். இந்த நரித்தனமான மார்க்சிய எதிர்ப்பு பிரச்சாரம், உண் மையில் தமது தீர்வை அதன் பிரச்சாரத்தை விமர்சிக்கும் உரிமையை மறுக்கும் போக்கில், சேறுயடித்து முத்திரைகுத்தி தப்பிச்செல்ல முயல்கின்றனர். ஒரு படைப்பாளி சமூகம் பற்றிய தனது வர்க்க கண்ணோட்டத்துடன், பொருளை பார்க்கும் பகுதிக்குள் படைப்பை வெளிப்படுத்தும் போது, அது அவ்வர்க்க அடிப்படையில் தனக்கான தீர்வையும் பிரச்சாரத்தையும் செய்கின்றது. இது வாசகன் இடம் செல்லும் போது தனது வர்க்க கண்ணோட்டத்துடன் அதை ஏற்பதும் எதிர்ப்பதும் விமர்சிப்பதும் நடக்கின்றது. இதன் மூலம் படைப்பு வாசகன் மீது தீர்வையும் பிரச்சாரத்தையும் யார் விரும்பாவிட்டாலும் அவனுக்கு கொடுக்கின்றது.

ஒரு சமுதாயத்தின் நீடித்தலும், அதை கட்டி பாதுகாத்தல் என்பதும் இன்று இது போன்ற படைப் புகளால்தான் நீடிக்கின்றது. இது நேரடி வன்முறைக்கு பதிலாக மறைமுகமான வன்முறைக்கு ஊடாக மக்களின் துன்பதுயரங்களை திசைதிருப்பி அதன் மீது சவாரி செய்கின்றன. இன்று மனிதன் எதைத்தெரிந்து கொள்கிறான் என்பது மட்டும்தான், இந்த சமூக அமைப்பு நீடிக்கும் தன் மையை தீர்மானிக்கிறது. இந்த வகையில் ஒவ்வொரு படைப்பும் தீர்வையும் பிரச்சாரத்தையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்கின்றது. இன்று நக்கீரன், ஜூனியர்விகடன்................ போன்ற பத்திரிகைகள் லட்சக்கணக்கில் மக்கள் முன் எப்படி விற்பனையை எட்டுகின்றது எனின், அங்கு சமூகத்தில் உள்ள முரண்பாடுகள் மீதான அபிப்பிராயத்தில் தான் என்பதை மறுக்கமுடியாது. ஏதாவது ஒரு பிரச்சனை எடுத்து அதற்க்காக அங்கு சென்று, நீதி கோரும் இவ் இதழகளின் உயிர்மூச்சு. மனிதர்களின் இயல்பான நீதியின் பாலான நியாயப்படுத்தல்கள் மீது உயிர் வாழ்கின் றன. சமூகத்தில் உள்ள பிரதான முரண்பாடுகளை இனம் காட்டுவதற்க்குப் பதில், எடுக்கும் பிரச் சனையை முழுமையில் ஆராய்வதற்க்குப் பதில், மனிதர்களை சிறுபிரச்சனைக்குள் அழுத்தி அதற்க்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குள் முடக்கி, மனிதர்களின் நீதியின்பாலான இயல்பான உணர்ச்சியை விழுங்கி ஏப்பமிடவும், அதை சாந்தப்படுத்திவிட முயலும் முயற்ச்சியின் தொடர்ச்சியில் தான் இப்பத்திரிகைகள் இயங்குவதுடன், மக்களை முட்டாள் ஆக்க முயல்கின்றன.

இதையே இன்று படைப்பாக்கலில் ஈடுபடும் படைப்பாளிகளும் எடுக்கும் கரு பூர்சுவா வர்க்கத்துக் குள் தெரிவதுடன், அதற்க்கு வெளியில் அக்கரு எப்படி மொத்த சமூகத்தில் உள்ளது என, ஏன் எப்படி என ஆராய்யாத படைப்புகள் இருக்கும் சமூகத்துக்குள் முடக்கும் கோட்பாட்டை, தீர்வை, பிரச்சாரத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் முன்வைக்கின்றது.

இந்நிலையில் மார்க்சியம் தீர்வையும் பிரச்சாரத்தையும் படைப்புகளில் ஒருக்காலும் கோரவில்லை. விமர்சனம் வைக்கும் போது கோருகின்றது என்பது பொய்யானது. மாறாக மார்க்சியம் வைத்து இருக்கும் தீர்வையும் பிரச்சாரத்தையும் எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கண்கொண்டு விமர்சிக்கின்றது. இதை மட்டும் தான் மார்க்சியம் மக்களின் விடுதலைக்காக மீண்டும் மீண்டும் கோருவதுடன் வேறு ஒன்றும் அல்ல. படைப்பு கொண்டு உள்ள தீர்வையும், அதன் பிரச்சாரத் தையும் கேள்விக்குள்ளாக்குவதுடன், படைப்பின் பொருளை முழுமையாக ஆராய்யக் கோருகின்றது. இதைப் படைப்பாளி மறுப்பதும், சேறுயடிப்பது மட்டும்தான் எதிர்தரப்பின் ஒரே நியதியாக உள் ளது. இதற்கு கோட்பாட்டுத் தேவையை மார்க்சிய விரோதிகள் தலைமை கொடுத்து வழங்க, மத் தியதரவர்க்க எழுத்தளர்கள் தனக்கே உரிய வர்க்க ஊசலாட்டத்துடன் இதில் அங்கொன்று இங் கொன்று எடுத்து வைத்து மார்க்சிய விமர்சனத்துக்கு எதிராக போராடமுனைகின்றனர்.

இதன் தொடர்ச்சியில் படைப்பில் தீர்வா? அப்படி ஒன்றும் அதில் இல்லை. இது கற்பனையானது. படைப்பில் கரு என்று ஒன்று கிடையாது. படைப்பு மனிதனின் கற்பனையான இயல்பான எந்த விதமான நிர்ப்பந்ததுக்கு வெளியில் மட்டும்தான் உருவாகின்றது. இன்னும் சிலர் அதற்க்கு மேல் சென்று இதற்க்கு என உருவாகியுள்ள மனிதர்களின் சுதந்திர வேட் கையின் வெளிப்பாடு என்கின்றனர். இதற்க்குள் பொருள் கரு தீர்வு பிரச்சாரமாவது மண்ணாங்கட்டியாவது இவை எல்லாம் அபத்தமானது மட்டும் இன்றி படைப்பாளியின் சுதந்திரத்தில் தலையிடுவது என்கின்றனர். எல்லாவற்றையும் பகுத்தாராய்ந்து படைப் பது என்பது வரட்டுவாதம் என்கின்றனர். படைப்பில் கலை அம்சம் தான் முதன் மையானது உள்ளடக்கம் பற்றி அலட்டிக்கொள்வது தேவையற்றது எனப் பலப் பலவாக விமர்சனங்களுக்கு எதிராக அணிதிரட்டி படைப்பாளிகளும் அது சார்ந்த வாசகர்களும் முன்வைக்கும் வாதங்களாக உள்ளது.



படைப்பு எதுவும் அற்ற கலை அம்சங்களின் தொகுப்பா? அதற்க்குள் பொருளின் பிரதிபலிப்பு கிடையாதா? சமூகத்தில் உள்ள மனிதர்களினதும், மனிதன் இயற்க்கையை பயன்படுத்தும் பிரதிபலிப்புகளின் வெளிப்பாடாக படைபபுகள் உருவாகுவது இல்லையா? இதை ஆராய்வோம்.

மக்கள் பொருளைப் முதலில் பார்த்து அதற்க்கு பெயரிட்ட பின்தான் மொழியியலில் அதற்க்கு ஒத்த சொல் உச்சரிப்பு எல்லா மொழியியலிலும் ஏற்பட்டது. நாம் மொழியியலில் ஒவ்வொரு எழுத் தை எடுப்பின் அது பொருட்க்களை அடையாளப்படுத்த பொருளில் இருந்து உருவாக்கப்பட்டதே. ஒரு சொல்லை எடுத்தால் ஒரு பொருளையோ ஒரு பொருளைக்குறித்து பேசும் கருத்தாகவோ பொருளுக்கு உரிய வகையில் அர்த்ததைப் பிரதிபலிக்கும். பொருளுக்கு வெளியில் சொற்கள் கற் பனையில் உருவாகுவது இல்லை. அப்படி உருவாக்கப்படும் சொற்கள் கற்பனையானதாக மாயையானதாக இருக்கின்றது. இது சொல்லில் கருத்துமுதல்வாதத்தை முன்தள்கின்றது. அதாவது மூளை என்ற பொருளுக்கு வெளியில் எந்த ஒரு சொல்லோ, ஒரு படைப்போ உருவாக முடியாது. அதுபோல் உலகில் பொருட்கள் இன்றிய உலகில் ஒரு சொல்லோ படைப்போ உருவாக முடியாது. மொழியியலலில் பொருள் செயல் காலத்தால் மறைந்துவிடும் போது அதற்க்குரிய சொல்லும் மறைந்துவிடுகின்றது. புதிதாக பொருள் செயல் உருவாகும் போது புதிய சொல் உருவாகின்றது. இதற்க்கு வெளியில் கற்பனையாக உருவாக்க நினைப்பவை கருத்துமுதல்வாத சொல்லாக மட்டும் பொய்யாக இட்டுக்கட்டப்படுகின்றது.

ஒரு வசனத்தை எடுத்தால் சொல்லில இருந்து வேறுபட்டு ஒரு செயலையோ, பொருளின் வேறு பட்டபண்பு குறித்தோ, பொருளின் வேறுபட்ட இயக்கங்கள் குறித்தோ பொருளைப் பற்றி மட்டும்தான் வசனம் பேசுகின்றது. இப்படி சொல்லில் இருந்து வசனங்களில் இருந்து உருவாகும் ஒரு பந்தி, பல பந்தி என நீடிக்கும் ஒரு தொடர்ச்சி இறுதியில் பல பொருளில் இருந்து ஒரு பொது பொருளைப் பற்றிய வெளிப்பாடாக மொழியியல் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதாவது மொழி என்பது மனிதர்கள் பொருளைப்பற்றி பேசிக் கொள்ளமட்டும் உருவானது என்பதும், எது மனிதன் முன் தெரியாத பொருளாக உள்ளதோ அது தெரியாததவையாக உள்ளது. விரல்விட்டு எண்ணக்கூடிய படைப்பாளிகளுக்கு படைப்பு என்ற பொருள் தெரிந்துள்ளதால் மட்டும் படைப்பை படைக்க முடிகின்றது. படைப்பையும் படைப்பு என்ற பொருளையும் தெரிந்து கொள்ள முடியாத ஒருவருக்கு படைப்பை படைக்க முடியாது. ஆனால் அவன் முன் ஒவ்வொரு சம்பவமும் படைப்பு என்ற பொருள் தெரியாத சிறுகதையாக நாளாந்த நடவடிக்கையாக பரிமாறும் விடையமாக உள்ளது.

எழுத்து மூலம் செய்தி பரவமுன், வாய் மூலம் காலம் காலமாக மக்களால் பரிமாற தெரிந்த செய்தி என்ற பொருள். இன்று எழுத்தில் முன்வைக்க முடியாத சூனியமான நிலையில் பொருளை அடையாளம் தெரியாத இன்றைய நிலையில் மட்டும்தான், எல்லோராலும் படைக்க முடியாது உள்ளனர். எல்லோரும் உடல் உழைப்பில் ஈடுபட்டு வாழ வேண்டி இருந்த சமுதாயத்தில் எல்லோரும் படைப்பாளிகளாக இருந்தனர். அவர்கள் எல்லோர்ரும் கலையனாக படைப்பாளியாக எல்லாமாகவும் இருந்தனர்.

நாம் பயன்படுத்தும் பொருட்கள் முதல் உலகில் உள்ள எல்லாப் பொருட்களும் வெறும் வடிவத்தால், கலை அம்சத்தால் அல்ல தனியான சிறப்பான உள்ளடக்கத்தால் தான் தெளிவாக வேறுபடுகின்றது. ஓரே வடிவம் உள்ள வேறுபட்ட பொருட்கள் அதன் சிறப்பான உள்ளடகத்தால் தெளிவாக வேறுபடுகின்றது. அதன் மேல் உள்ள கலை அம்சம் அழகியல் சிறப்பான வேறுபட்ட உள்ளடக்கத்தை மெருகூட்டுகின்றனவே ஒழிய, பொருளை உள்ளடக்கத்தில் வேறுபடுத்தி காட்டுவனவாக இருப்பது இல்லை. வடிவத்தில் மட்டும் வேறுபடுத்திக் காட்டுகின்றது.

மாம்பழத்தை எடுத்தால் அதன் வடிவம், அழகியல், கலை அம்சம் என்பன அதன் வேறுபட்ட தன்மையை, அதன் உள்ளடககத்துடன் வேறுபடுத்தி விடுவதில்லை. மாறாக வடிவத்தால் மட்டும் வேறுபடுத்த முடியும். வேறுபட்ட உள்ளடக்கத்தை ருசியை ருசிக்காத ஒருவனால் வேறுபடுத்த முடியாது. ருசித்த ஒருவனால் தான் பார்த்த மாத்திரத்தில் வேறுபாட்டை செய்ய முடியும். வடிவத்தில், அழகியலில், கலையில் ஓரே மாதிரியான பலாப்பழத்தை ஒருக்காலும் பார்த்த மாத்திரத்தில் கலை அழகியல் கூட வேறுபடுத்த முடியாது. இங்கு உள்ளடக்கம் மிக தெளிவானதாக மயக்கம் இன்றி அப் பொருளை வேறுபடுத்தி இனம் காட்டுகின்றது. இது எல்லாப் பொருளுக்கும் விதிவிலக்கு இன்றி பொருந்தும். பொருட்களின் சேர்க்கையும், அதன் மீதான தொழில்பாடுகளையும் பேசும் ஒரு படைப்பு இந்த விதிக்கு உட்பட்டதுதான். ஒரு படைப்பு மாம்பழம் பலாப்பழம் போல் தனககான உள்ளடக்கத்தை, அதை ஒட்டிய ஒரு தீர்வை, அதை ஓட்டிய அபிப்பிராயத்தை (பிரச்சாரத்தை) கொண்டுதான் எப்போதும் உள்ளது. இதை யாராலும் மறுத்து நிறுவமுடியாது.

இன்று ஆண் பெண் திருமனங்களில் என்ன நிகழ்கிறதோ அது படைப்பில் விதிவிலக்கு இன்றி ஒரே கண்ணோட்டம் கொண்டதாக அப்படியே உள்ளது. ஆன் பெண் வெளிஅழகு, கவர்ச்சி, பணம், அந்தஸ்து......... போன்றவற்றில் நடக்கும திருமனங்கள் உள்ளடக்கத்தில் தேர்வு மறுக்கப்படுகின்றது.

இதுபோல் இன்று இலங்கை - புலம்பெயர் நாடுகளில் வெளிவரும் படைப்புகளில் சிறு சஞ்சிகையில் முற்போக்கு என்ற முகாந்திரத்தின் கீழ் வெளிவரும் படைப்புகள், நடைமுறை ஒன்று இல்லாதால், படைப்பாளிக்கு உள்ள செல்வாக்கைப்பொறுத்தும், தொடர்பைப் பொறுத்து முற்போக்கு என்ற அடையாளத்தை ஈட்டிவிடுகின்றனர். இதன் மூலம் மற்றைய படைப்பாளிகளில் இருந்து வேறுபடுவதாக ஒரு மாயையை எற்படுத்த முனைகின்றனர். உண்மையில் இப் படைப்புகளில் உள்ளடக்கத்தில் வேறுபாடு இருப்பதில்லை. இப் படைப்புகளின் உள்ளடக்கம் மீதான முற்போக்கு கேள்விக்கு உள்ளாக்க முடியாத விடையமாக, இதை ஓட்டிய கொள்கை வகுப்பார்க்கு வெளியில், யாரும் படைக்க முடியாது எனப்பிரகடனம் செய்கின்றனர். இவை ஒடுககப்பட்ட மக்களின் -இலக்கியமாக இருப்பது இல்லை என்பதும், அவை படைக்கப்பட முடியும் என்ற உண்மை ஒருபுறம் இருக்க இன்று வெளிவந்து கொண்டு இருக்கும் இன்னுமொரு வகைப்படைப்பு முற்றாக இருட்டடிப்பு செய்யப்படுகின்றது. இப்படைப்பு புலிகளின் அரசியல் சார்பானதாக வெளிவருவதாகும். வாசிக்கப்படாமலும், முத்திரை குத்தப்பட்டுபோய் உள்ள இப்படைப்புகள், புலிகளின் மக்கள் விரோத அரசியலால் கறைபடிந்து போய் உள்ளதால், இப்படைப்புகள் அரசியல் ரீதியில் புறக்கணிப்புக்கு உள்ளாகின்றது. ஆனால் இன்று இப்படைப்புகள் புலிகளின் அரசியல் உள்ளடக்கத்துக்கு வெளியில், பொது உள்ளடக்கத்தையும் கலையையும் இனைப்பதில் மற்றையபடைப்புகளை விட ஒப்பிட்டடளவில் தரம் வாய்ந்தவையாக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ் பேசும் மக்களின் தேசிய இன பிரச்சனையை கையில் எடுத்து அதை புலிகளின் குறும் தேசிய அரசியல் உடன் இனைத்து சிறந்த கலை அம்சத்துடன் இப்படைப்புகள் வெளிவருகின் றன. இங்கு இவர்களின் அரசியல் தான் இப்படைப்பை சிறுமைப்படுத்துகின்றது. இப்படைப்புகள் தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சனையை, மேல்மட்ட பூர்ஷ்சுவா உள்ளடக்கத்துடன் இனைத்து மிக நேர்த்தியாக, இன்று முற்போக்கு எனக்கூறிப் படைப்பவர்களை விட, சிறந்த படைப்புகளை புலிகளின் அரசியலுக்குள் படைக்கின்றனர். இதை அவர்களின் சினிமா, முற்றிலும் மாறுபட் டவையாக உள்ளதை இலகுவாக பார்த்தமாத்திரத்தில் புலிகளின் அரசியலுக்கு வெளியில் வைத்து பார்க்க முடியும். இது போன்று அவர்களின் அநேக படைப்புகள் இருக்கின்றன. படைப்புகள் எப்படி படைக்கப்பட வேண்டும் என்பதை புலிகளின் அரசியலுக்கு வெளியில் இன்றைய படைப்பாளிகள் எனறு கூறிக்கொள்வோர், அங்கு உள்ளடக்கம் தொடர்பான படைப்பை எப்படி படைத்தல் என்பதை காண முடியும்.

ஓர் உள்ளடக்கத்தை பொதுவான சமூக முரண்பாட்டுடன் இணைத்து ஒரு கலை அம்சத்துடன் கூடிய படைப்பை எப்படி படைக்க வேண்டும் எனபதற்க்கு, புலிகளின் அரசியலுக்கு வெளியில் புலிகளின் படைப்புகள் நல்ல உதாரணமாக உள்ளது.

முற்போக்கு என புலிகளின் அரசியலில் இருந்து தம்மை வேறுபடுத்தி காட்டுபவர்கள், தம் அரசியலுக்குள் நின்று எடுக்கும் கருவை பொதுவான சமூக முரண்பாட்டுடன் இணைக்கும் கலை வளராதவரை, தமிழ் சமூகம் இருண்ட நுகத்தடிக்குள் இருத்தல் தொடர்வது தவிர்க்க முடியாது. இன்று வருடம் அண்ணளவாக வெளிவரும் 1000 கதைகளில் இருந்து வேறுபட்ட வகையில் ஒரு படைப்பை படைக்கும் தேவை, கருவுக்கும் பொது முரண்பாட்டுக்கும் இடையில் உள்ள உறவை குறிப்பாக வர்க்க, அதன் மீதான விமர்சனக் கண்கொண்ட உணர்ச்சியின் மீதான கலை அம்சம் தான் அவசியமானதும் அடிப்படையானதுமாகும். இது மட்டும் தான் மக்களின் உண்மையான பிரச் சனையை பேசுவனவாகவும் பூசி மொழுகாததுமாகும். இது மட்டும் தான் மக்களின் படைப் புகளாக இருக்கும் இருக்கவும் முடியும்.

இனி நாம் சதாரணமாக படைக்கப்படும் படைப்புகளை பார்ப்போம். இன்று வெளிவரும் படைப்புகள் விதிவிலக்கு இன்றி யதார்த்த படைப்புகளாக உள்ளது. யதார்த்த படைப்புகளாக முன்வைக்கப்படும் படைப்புகள் எல்லாம் முற்போக்கானதாக நம்பும் ஒரு மரபை, இலங்கை முற்போக்கு எழுத்தாளார் சங்கம் கடந்த கால இலக்கிய விவாதங்கள் ஊடாக ஏற்படுத்தியுள்ளனர். உண்மையில் இவர்கள் சோவியத்யூனியனின் சோசலிச யதார்த்தை எடுத்தவர்கள், ஒன்றுக்கு ஒன்று எதிரான வேறுபட்ட பொருளாதார எல்லைக்குள் பார்க்க மறுத்து தமது பொதுவான பூர்ஷ்சுவாதனத்துக்குள் பொதுமைப்படுத்தியதின் விளைவு யதார்த்தம் எல்லாம் முற்போக்கானதாக காட்டியதனால், சிறந்த படைப்பாளிகளை உருவாக்க தடையாகயிருந்தது. இந்த போக்கு மக்களின் போராட்டத்தை திசை-திருப்பி தடுக்கவும், சோவியத்தின் முதாளித்துவ மீட்சியை மூகமூடியிட்டு மறைத்த தொடர்ச்சியில் தான், சாதாரணமாக அவர்களின் வர்க்க அடிப்படைக்கு தேவையாக இருந்த பூர்ஷ்சுவா யதார்த்த படைப்புகளை முற்போக்கு படைப்புகளாக மகுடம் சூட்டி யதார்த்தின் புரட்சிகரத் தன்மையை மழுங் கடித்து, புரட்சிகரத்தன்மை அற்ற கோட்பாட்டை வளர்த்து எடுத்து அதை மரபாகமாற்றி முற்போக்கு முத்திரைகுத்தி சீரழித்தனர். மார்க்சிய லேபல் இருந்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தி அதை மரபு ஆக்கினர். அதாவது சிவப்புக் கொடியை ஆட்டி முதாளித்துவ மீட்சியை சோசலிச மாற்றமாக காட்டியதையே இவர் இலக்கியத்தில் கலையில் எந்த வெட் கமும் இன்றி மார்க்சிய மூலாம் இட்டு செய்தனர். இதையே இன்று பல படைப்பாளிகள் மார்க்சிய அடையாளம் இட்டோ, முற்போக்கு மூகமூடி போட்டோ எழுதி நியாயப்படுத்தி விடுகின்றனர். ஆனால் இதை உள்ளடக்கத்தில் செய்ய முடியாது வரண்டுபோய் உள்ளனர்.

யதார்த்தம் என்பது சோசலிசம் அல்லாத சமூகங்களில் பிற்போக்கானவை. சீர்திருத்தத்தைக் கோரும் அமைதிக்கால யதார்த்தம் இச்சமூக எல்லையை தாண்ட அதிர்ப்தியை வெளிப்படுத்தி இச் சமூக எல்லைக்குள் இருக்க கோருவதே. சீர்திருத்தைக் கோரும் யதார்த்தம் புரட்சிகர எழுச்சிகளின் போது சமூக மாற்றத்தை தொட்டும் முற்போக்கான பாத்திரத்தை வகிக்கின்றது. விமர்சனம் கொண் ட இந்த சமூக கருவின் விளைவை புதிய சமூக மாற்றத்தை ஒட்டி கருமாறுவதை கோரும் யதார்த் தம் மட்டும் தான் முற்போக்கானவை.

பொதுவான யதார்த்தம் பூர்ஷ்சுவா கண்ணோட்டம் கொண்டவை. சாதாரண மனித நிகழ்வுகள் எல் லாம் இந்த முதலாளித்துவ எல்லைக்குட்பட்ட பூர்ஷ்சுவா நிகழ்வாக உள்ளதால், அவை படைப் பாகும் போது பூர்ஷ்சுவா கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கும்.

www.tamilarangam.net

இதே போன்று சாதாரண நிகழ்வுகளில் ஏற்படும் முரண்பாடுகளை எடுத்து. அதில் அதிருப்தி தெரிவித்த. எதிர்ப்பு தெரிவித்த படைப்புகள். பூர்ஷ்சுவா சமூக அமைப்பை கேள்விக்குள்ளாக்காத சீர்திருத்தத்தை முன் வைப்பனவாக இருக்கின்றது. இதைவிட மேல் மட்ட மக்களின் யதார்த்தம் என்பது சுரண்டும் நிலையை நியாயப்படுத்தும் யதார்த்தமாக உள்ளது.

ஆகவே யதார்த்தப்படைப்பு என்பது சமூகத்தைக் கேள்விக்குள்ளாக்கி அதில் பிரச்சனைகளை ஆராய்யும் படைப்பு தான் புரட்சிகர யதார்த்தமாக இருக்கின்றது. ஒவ்வொரு பிரச்சனையும். ஒவ்வொரு காரணமும், ஒவ்வொரு நிகழ்வும் ஒட்டு மொத்த சமூகத்தில் இருந்து விலக முடியாதவை. ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை.

ஆபிரிக்காவில் ஒரு குடிசையில் நடந்தாலும் அது இன்று உலகப் பொது நிலைக்கு வெளியில் சுயமாக செயல்பட முடியாது. அமெரிக்காவில் நடந்தாலும் அது இலங்கையில் உள்ள ஒரு வீட்டுக்கு புறம்பாக சுயாதீனமாக நடப்பது இல்லை. இந் நிகழ்வுகள் பொது நிலைக்கு உட்பட்டு குறிப்பான நிலைகளில் மட்டும்தான் வேறு படுகின்றன. எனவே ஒவ்வொரு நிகழ்வும் குறித்த சமூகத்தில் இருந்தும். ஒட்டு மொத்த சமூகத்தில் இருந்தும் விலக முடியாதவை. ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. ஒவ்வொரு சம்பவமும் முழு உலகுடன் தொடர்புடையதாக முழு இயற்கையுடன் தொடர்புடையதாக உள்ளது.

ஆகவே ஒரு பிரச்சனையை முழுமையில் வைத்து குறிப்பானதில் ஆராய்யும் படைப்புத்தான், மக்களின் பிரச்சனையை முழுமையாக பார்ப்பதுடன், அது மட்டும் தான் புரட்ச்சிகரப் படைப்புகளாக இருக்கின்றன. இப்படைப்புகள் புகழுக்குரிய படைப்புகளாக காலத்தால் அழியாத வகையில் நீடிக்கும் தன்மை கொண்டவையாக நீடிக்கும். இன்று சாதாரண படைப்புகள் அவர் அவரின் தனிப்பட்ட செல்வாக்கை பொறுத்தும், அவரின் தொடர்பைப்பொறுத்தும். கடந்த காலத்தில் இது போன்ற படைப்பாளிகளுக்கு நடந்தது எதுவோ, அதைப் போல் அவர் அவர்களின் எல்லைக்குள் தமக்குள் தாம் பேசிக் கொள்வதற்குள் முடிந்துவிடும்.

இன்று சாதாரண பூர்ஷ்சுவா யதார்த்ததில் சமூக பொருளாதார கலாசார பண்பாடுகளின் ஏற்ற தாழ்வுகளில். மறுக்கப்படும் ஒரு நிகழ்வை படைப்பு முன்னெடுக்கும் போது. அது முற்போக்காக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் பலர் முற்போக்கு என கற்பனை செய்கின்றனர். ஏற்ற தாழ்வான சமூகத்தில் மறுக்கப்படும் நிகழ்வு என்பது அதற்குள் நடக்கும் பாய்ச்சலில் தான் தோன்றுகின்றது. இவை ஒரு ஜனநாயக கோரிக்கையாக இல்லாத அனைத்து மறுப்புகளும் பிற்போக்கானவையாக செயல் படுகின்றது. ஏற்ற இறக்கத்துக்கு வெளியில் எதிர் நிலை மாற்றத்தைக் கோரி மறுக்கப்படும் போது. அதை உயர்த்தி பிடிக்கும் போது அவை முற்போக்காக இருக்கின்றது. எனவே ஒரு விடையத்தை பாட்டாளி வர்க்க மற்றும் முதலாளித்துவ சமூக கண்ணோட்டத்தின் தொடர்ச்சியில் அதற்குள்ளன வர்க்க கண்ணோட்டத்தில் ஆராய்யப்பட வேண்டும். ஏன் எனின் முதலாளித்துவம் கூட தனது வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை மறுக்கும் தன்மை கொண்டது. ஏன் எனின் முதலாளித்துவ வளர்ச்சி ஏற்ற தாழ்வான வளர்ச்சியைக் கொண்டதால். இங்கு ஏற்படும் முரண்பாடுகள் அதில் மறுக்கப்படும் போது அது முற்போக்காக இருப்பதில்லை. இன்று தேசிய பொருளாதாரம் மறுக்கப்படுவதையும், உலக பொருளாதாரம் கோரப்படும் முரண்பாட்டில் இரு யதார்த்தமும் ஒன்றுக்கு ஒன்று எதிரானது. இது போன்று ஓரினச்சேர்க்கை கோரும் ஆணாதிக்க (ஏகாதிபத்திய பண்பாடாக இது இன்று உள்ளது.) யதார்த்தமும் பெண் விடுதலையைக் கோரும் பாட்டாளி வர்க்க யதார்த்தமும் ஒன்றுக்கு ஒன்று எதிரானது. மாறுபட்ட யதார்த்தை கொண்ட வேறுபட்ட சமூக யதார்த்தத்தை வர்க்க கண்கொண்டு நுணுகிப்பார்க்க வேண்டும்.

யதார்த்தம் என்பது சமூக்கதில் உள்ள போராட்ட முரண்பாடுகள் உடன் மாறுபட்ட வகையில் இந்த வர்க்க சமூதாயத்தில் நீடிக்கின்றது. இதில் முற்போக்கு பிற்போக்கு என்பது சமுதாய போராட்டத்துடன் ஆராய்யப்பட வேண்டும். இதை விடுத்து மாறாத யதார்த்தத்தை நியாயப்படுத்தக் கூடாது. அடுத்து படைப்களில் புலம்புவது நடக்கின்றது. ஐயோ எல்லாம் மாயை எல்லாம் கற்பனை எனக் கூக்குரல் இட்டு. நம்பிக்கையினத்தை விதைத்து அதில் பிழைத்துக்கொண்டு வம்பளப்பது நடக்கின்றது. மனிதர்களின் இயல்பான போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்க. தம்மைப்போல் சூடுசுரனையின்றி இருக்க புலம்புவதை முன்தள்ளுகின்றனர். இவர்களின் ஒரே நோக்கம் மக்கள் அணிதிரண்டு போராடக்கூடாது. அதற்க்கு படைப்பில் ஒப்பாரி வைத்து புலம்புவதும் கோட்பாட்டை கேள்விக்கு உட்படுத்துகின்றோம் என்ற பொயரில் அதைக் கோட்பாடாக முன்நிறுத்தி. அதில் நின்றபடி மக்கள் அணிதிரண்டு போராட தத்துவம் இல்லை என்று கூறுவதன் மூலம் மக்களை திட்டமிட்டு ஒடுக்கு முறைக்குள் அமுத்திவைத்திருக்க திட்டமிட்டே புலம்புகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்து இன்றைய உலகப் பொது நிலையின் கீழ் இலங்கையின் புரட்சிகரப்போக்கு அழிந்து செல் லும் நிலையில் படைப்பாளிகள் தமது பச்சோந்தித்தனத்துக்குள் எந்த வெட்கமுமின்றி, கடந்த காலத்தில் எதை எதிர்த்து கருத்துரைத்தனரோ அதற்க்குள் தாவிவிடுகின்றனர். இது இலங்கையில் தொடங்கி மேற்க்கு நாடுகள் வரை தொடர்கதையாக உள்ளது. படைப்பாளிகள் மக்களுக்காக சேவை செய்வதைவிட, சொந்த புகழ் மற்றும் இலகுவான சொகுசு உழைப்புக்கு ஆசைப்பட்டு தமது வர்க்க நிலைக்கு ஏற்ப மக்களை விட்டுச்செல்கின்றனர். மிகமோசமான ஒடுக்குமுறையை செய்யும், பத்திரிகை செய்தி அமைப்பு முதல் நிலப்பிரபுத்துவ பண்பாட்டை உயர்த்து பத்திரிகை செய்தி அமைப்பு ஈறாக இவர்கள் அதற்க்கு முண்டு கொடுக்க பலர் விலை பேசப்பட்டு மெதுவாக சென்று கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் கடந்தகாலத்தில் எந்தமக்களின் விடுதலை பற்றி பேசினார்களோ அந்த மக்களுக்கு துரோகத்தை செய்ய முன்வைக்கும் வாதங்களைப் பார்ப்போம்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் குறிப்பாக கைலாசபதி, சிவத்தம்பி போன்றோர் சாதாரன எல்லா செய்திப் பத்திரிகையிலும் எழுதினர். அப்படியாயின் ஏன் நாம் எழுதக்கூடாது தொழிலாக சம்பளம் பெற்றுத்தான் இதைச் செய்கின்றோம். அப்பத்திரிகைகளில் முற்போக்கான சில விடையங்கள் வெளிவருகின்றன. நாம் சென்றால் அதை மேலும் செழுமைப்படுத்துவதன் மூலம் மக் களுக்கு சேவை செய்யமுடியும். மறுபக்கம் (அதாவது புரட்சிகரப் பக்கம்) எதுவுமற்ற சிறு குழுக் களாக இருப்பதுடன் மற்றப்பக்கம் (சீரழிவுப் பக்கம்) நடக்கும் மாற்றத்தை பார்க்க மறுக்கின்றனர். இதற்கான வேர் எல்லாச் சமூகத்தைப் போல் அதன் வர்க்க அடிப்படையில் தொடர்கின்றது. போராட்டம் தணிகின்ற போது, எதிர்புரட்சி சக்திகள் வன்முறையை கையாளும் போது, புகழுக்குரிய பக்கம் புரட்சிகர பக்கமாக இல்லாத போது மக்கள் பற்றிய வாய்சவாடல்கள் தேவையற்றதாக மாறிவிடுகின்றது.

இங்கு எந்தக்கருத்து மேலோங்கியிருக்கிறதோ அதைப் பொறுத்து அவன் செயல்பாடும், எந்தக் கருத்து வெல்கிறதோ அதைப் பொறுத்து எதிர்கால நடவடிக்கைகளை தீர்மனிக்கின்றனர். இதற்கு ஆதாரமாக பழைய வரலாற்றில் இருந்து தரவுகளை எடுத்து முன்வைக்கின்றனர். இதில் முக் கியமாக "இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க" நடவடிக்கைகளை எடுத்து வைக்கின்றனர். முற் போக்கு எழுத்தாளர்களின் கடந்தகால நடவடிக்கை இந்த வகையில் திரும்பி பார்க்க வேண்டிய முக்கிய விடையமாக உள்ளது.

முற்போக்கு எழுத்தாளர்கள் மார்க்சிய எழுத்தாளர் அல்ல. மாறாக புத்தக படிப்பறை அரைகுறை பூர்ஷ்சுவா மார்க்சியவாதிகளால் சோசலிசசாயம் பூசியே கருத்துக்களை முன் தள்ளியதுடன் புரட்சி செய்யாத படைப்பை கோரினர். அதாவது சோவியத் முதலாளித்துவவாதி குருசேவ் எதை வைத் தாரோ அதேபோல் இவர்கள் சமாதான சகவாழ்க்கு ஏற்ப, இலக்கியம் புரட்சி செய்யாததாக சீர்திருத்த பூர்ஷ்சுவா எல்லைக்குள் வரையறுக்கப்பட்டது. இது இலங்கையின் அன்றைய புதிய சூழலுக்கு ஏற்ப தேவையாக இருந்தது. இலங்கையின் பாரம்பரியமிக்க நிலப்பிரபுத்துவ மதப்பண் பாடும் அதையொட்டிய படைப்பு இலக்கியமும் சமூக மாற்றத்துக்கு ஏற்ப விட்டுக்கொடுத்து மாறிவிடவில்லை. மேற்க்குநாடுகின் காலனியாதிக்கத்தின் பிந்திய காலத்தில் முதலாளித்துவ புரட் சியின்றி அவை சமூகத்துக்குள் புகுந்துகொண்டது. இந்த மாற்றத்துடன் படைப்பு இலக்கியம் முன் னேறவில்லை. மாறாக பழைமைவாத நிலப்பிரபுத்துவ மதவாத இலக்கியம் மட்டும் படைப்பாக ஏற்க் கப்பட்டது.

இந்நிலையில் புதிய முதலாளித்துவ கருத்துகளில் கவரப்பட்டவர்கள். இரண்டம் உலகயுத்தத்தின் பின் சோவியத்தின்பால் கவரப்பட்டவர்கள் உட்பட்ட பிரிவு புதிய இலக்கியத்தை முன்வைக்க புறப் பட்டனர். இவர்கள் சமூகபுரட்சிக்கு பதில் சமுக்த்தின் மாற்றத்துக்கு ஏற்ப இலக்கியத்தைக் கோருவதில் தமது வர்க்க இருப்புக்கு எற்ப கவனமாக இருந்தனர். இவர்கள் படைப்புகள் பழையதை மறுத்து பூர்ஷ்சுவா சிந்தனைக்கு வடிவம் கொடுப்பதில் சமூக இயல்பான பூஷ்சுவா மாற் றத்துக்கு ஏற்ப இலகுவில் சாத்தியமானது. இதற்க்கு இவர்களின் புத்தக மார்க்சியம் பெரும் அளவில் பயன்பட்டது. இதை வேறு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம்.

இந்த பூஷ்சுவா இலக்கியக் கோட்பாட்டாளர்கள் தமது கோட்பாட்டுக்கு ஏற்ப சமூகத்தின் எதிரி நன்பன் முரன்பாடின்றி எல்லாவற்றிலும் கூடிக்குலாவி எழுதினர். கோட்பாட்டு ரீதியாக எதிரியை அடையளப்படுத்தாது மட்டுமின்றி நடைமுறையில் படுகேவலமாக இயங்கினர். மார்க்சிய மற்றும் மக் களின் போராட்டங்களில் நடுநிலை வேடத்தை எடுத்துக்கொண்டு திட்டமிட்ட முறையில் போரட்டங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை நசுக்கினர்.

இந்த வரலாற்று நயாகர்கள் இலங்கை புரட்சிகர வரலாற்றில் எதிர்நிலைப்பாத்திரத்தை வகித்தனர். மாறாக இவர்கள் சமய மற்றும் நிலப்பிரபுத்துவ நிலையில் இருந்து படைப்பை மீட்ட அடுத்தகணமே பூஷ்சுவா எல்லைக்குள் சிதைத்த நிலையில், அதற்கே உரிய ஊசலாட்டத்துடன் பண்பாடு கலா சாரம் பொருளாதார நடைமுறையில் எதிரியுடன் கூடி இலக்கியம் படைக்க பின் நிற்கவில்லை. இவர்கள் வர்க்க எதிரியின் பத்திரிகைக்கு எழுதிய வரலாறு புரட்சியின் வழியில்லை. மக்களுக்கு வழிகாட்டுவதற்கு பதில் மக்களின் முதுகில் பழையவர்களுக்குப் பதில் புதியவர்கள் ஏறிக் குந்திக் கொண்டனர்.

எந்தப் படைப்பாளியும் தனது படைப்பு எந்த மக்களுக்காக என்பதை தெளிவாக வரையறைத்துக் கொள்ளும் போது, படைப்பு எந்தகோட்பாட்டை எதிர்த்து எழுதுகின்றார்ரோ. அக்கோட்பாட்டுக்கு சாமாந்தரமாக இருக்கும் எந்த நிறுவனத்திலும் இயங்கமுயல்வது மோசடியுடன் கூடிய இரட் டைவேடமாகும். ஒரு பத்திரிகை ஒரு மக்கள் தொடர்புசாதனம் சமூகத்துக்கு பொதுவாக எதைப் பிரச்சாரம் செய்கின்றதோ. அதையொட்டி அதன் வர்க்க நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும். அதைவிடுத்து அதில் ஏதாவது ஒன்றை காட்டியோ, தனது தொழிலாக காட்டியோ மக்களுக்கு பொய்யை முழுமையிலும் பகுதியிலும் பிரச்சாரம் செய்ய உதவுவது, மக்களை ஏமாற்றி அதில் கிடைக்கும் அற்ப சொகுசு வாழ்வுக்கும், அற்ப புகழுக்கும் சோரம்போகும் பச்சோந்திதனமாகும்.

அடுத்து "யதார்த்தம் பாசிசம் பயங்கரப்படுத்தல்" என யமுனாராஜேந்தரன் அம்மா 5 இல் எழு- தியதுடன் ""யதார்த்தம்" என்கிற சொல்லோ "எங்கள் பார்வை" என்கிற சொல்லோ கருத்தியல் வரையறை கொண்டவைதான். விளிம்பு நிலை மக்களை, மாற்றுக் கலாசரங்களை, சிறுபான்மை மக்களின் பிரச்சனைகளை நிராகரித்த கலைக்கொள்கையாக "யதார்தம்" இன்று விமர்சனத்துக் குள்ளாகின்றது" என தனது வர்க்க நிலையை தெளிவாக்குவதுடன் யதார்த்தம்பற்றிய பிரச் சனையை எடுப்பதால் நாம் இதைப் பார்ப்போம்.

_யதார்த்தம் வர்க்க சமுதாயத்தில இருவகைப்பட்டது. யதார்த்தம் உண்மைக்கும் பொய்க்கும் இடையில் இருவகைப்பட்டது. யதார்த்தம் கருத்துக்கும் பொருளுக்கும் இடையில் இருவகைப்பட்டது. யதார்த்தம் ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையில் இருவகைப்பட்டது. இப்படி எல்லாவற்றிலும் யதார்த்தம் இருவகைப்பட்டுள்ளது._

யமுனா என்ன செய்கின்றார் எனின் சிறுபான்மை மக்களின் பெயரில் சிறுபான்மை ஒடுக்கும் வர்க் கத்தின் யதார்த்துக்காக புலம்புகின்றார். பெரும்பான்மை யதார்த்தம் வன்முறை கொண்டது எனவும், பயங்கரவாதம் கொண்டதெனவும் கூறுவதன் மூலம் சிறுபான்மை யதார்த்தை பாதுகாத்து, ஒடுக்கப் பட்ட மக்களின் போராட்டத்தை சேறுயடிக்கின்றர். இந்த உலக சிறுபான்மை ஜனநாயக யதார்த்தை கேள்விக்கு உள்ளாக்காதே என மறைமுகமாக பிரகடனம் செய்கின்றார். இவர் சிறுபான்மை யதார்த் தை பாதுகாக்க கோருவதன் மூலம் பெரும்பான்மை யதார்த்தை நிராகரிக்கின்றர். பெரும்பான்மை யதார்த்தம் வர்க்க சமூதாயத்தில் வெளிவர முடியாதவகையில் சிறுபான்மை யதார்த்தம் ஒடுக் குமுறையை கையாள்கின்றது. சிறுபான்மை யதார்த்தம் பாதுகாக்க கோருவதன் மூலம் சிறுபான்மை சுரண்டலை பெருபான்மை யதார்த்தம் அம்பலப்படுத்துவதை "பாசிசம் பயங்கரவாதம்" எனக்கூறி மக் களின் துன்பம் துயரங்களை மூடிமறைக்க கோருகின்றர்.

பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தில் சுரண்டும் வர்க்கம்தான் சிறுபான்மை. இந்திய சாதிய ஒடுக்கு முறையில் பார்ப்பானியம்தான் சிறு பான்மை. ஆண் ஆதிக்க சமூகத்தில் ஆண் ஆதிக்க சக்திகள் தான் சிறுபான்மை. இது எங்கும் எதிலும் உள்ளது. விதிவிலக்காக பெரும்பான்மை இனம், மதம் போன்றவற்றுக்கு வெளியில் எப்போதும் சிறுபான்மை யதார்த்தம் ஒடுக்கும் தன்மை கொண்டவை. இதன் பண்பாடு கலாசாரம் பெரும்பான்மை யதார்த்ததுக்கு எதிரானது. அதாவது யதார்த்தம் எப் போதும் ஒன்றுக்கு ஒன்று எதிரானது. மக்களின் பொது யதார்த்தை வந்தடைய சிறுபான்மை யதார்த் தம் தடையாக உள்ளது. இதில் இருந்து சிறுபான்மை யதார்த்தம் பெரும்பான்மை யதார்த்தை மறுக் கின்றது. ஆகவே மக்களின் யதார்த்தம் ஒன்றாக மாற்றப்பட வேண்டும். இது பெரும்பான்மை யதார்த்த வன்முறையின் ஊடாக மட்டும்தான் அடையப்பட முடியும். மனிதப்பிளவுகள் சிறுபான் மையின் பெயரில் பாதுகாக்கும் எல்லாக் கோட்பாடுகளும் மொத்த மக்களுக்கு எதிரான சுரண்டும் வர்க்கம் சார்பானவை. இன, மத மோதல்களில் சிறுபான்மை யதார்த்தம் மற்றைய பிரிவைவிட அதிகம் கோராத வரை முற்போக்கானது. இங்கும் அப்போராட்டம் யதார்த்த இடைவெளியை கடக் கும் எல்லைக்கு உட்பட்டவையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும்பான்மை யதார்ததத்தினை எதிர்க்கும் யமுனாவின் அரசியல் நேர்மைக்கு விலை என்ன? சிறுபான்மை யதார்த்த பார்ப்பானிய சினிமாக்களையும், ஏகாதிபத்திய பண்பாட்டு சினிமாக்களையும் காய்யடித்து முற்போக்காக இலங்கைப் பத்திரிகைகளில் எழுதிக்குவிக்கும் யமுனா, ஏகாதிபத்திய பண்பாட்டு நயாகி டயானா முதல் எல்லா மார்க்சிய எதிர்ப்பாளர்களைப் பற்றியும் அவர் கோட்பாடுகளை போற்றி எழுதிக்குவிக்கும் யமுனா வசதியாக மறந்துபோய்விட்ட பெரும்பான்மை யதார்த்ததைப் பார்ப்போம். அண்மையில் இந்தியாவில் சினிமா பெரும்பான்மை தொழிலாளர்கள் இவர் புகழ்ந்து தள்ளும் சிறுபான்மை கலைப்படைப்பாளிகளை எதிர்த்து போராடியதும் மட்டுமின்றி, அண்ணளவாக பத்துப்பேர் இவர்களின் சுரண்டலின் கொடுமையைத் தாங்கமுடியாது இறந்து போனார்கள். இந்தப் பெரும்பான்மை யதார்த்தம், கலைப்படைப்பாளின் சிறுபான்மை யதார்த்தை அம்பலப்படுத்தியது. யமுனா தனது பிழைப்வாத சகதியுடன் சிறுபான்மை யதார்த்தம் கேள்விக்குள்ளாக்கினால் அது பாசிசம் பயங்கரவாதமாக இருக்கும் எனக் கூறியபடி சிறுபான்மை ஒடுக்கு முறைக்குசார்பாக மௌனம் சாதித்ததன் மூலம் சினிமா சாக்கடைக்கு வேறு கேடுகெட்ட வகையில் சிறுபான்மைக்காக தனது வர்க்ககூட்டுடன் கூட்டிக் கொடுத்துள்ளார்.

மக்களின் பெரும்பான்மை யதார்த்தத்தைப் பேசாதவன் முதலாளித்துவ காட்டுமிராண்டிகள் மட்டும் தான். அந்த சிறுபான்மை நாய்கள் மட்டும் தான் மக்களையிட்டு கவலைப்படாத சூறையாடலை யதார்த்தத்தை மீறி செய்யமுடிகின்றது. மக்களின் பெரும்பான்மை யதார்த்தத்தை மூடிமறைக்க கோரும் யாரும் சிறுபான்மை முதலாளித்துவத்தின் ஏடபிடிகளால் மட்டும்தான் சொல்ல முடியும்.
மேலும் யமுனா கூறுவதைப் பார்ப்போம். "இலக்கியத்திக்கு மிகமிக அடிப்படையானது திரை போடாத நேர்மை" எனத் தலைப்பிட்டு "இலக்கியம் என்ன செய்கின்றது? பிற மனிதனைப் பரிவுடன் புரிந்து கொள்ள உதவுகின்றது. என்னை சுயதரிசனம் செய்து கொள்ள தூண்டுகிறது. இலக்கியத்தின் குணம் கோபம் கொள்வது அல்ல என்று தோன்றுகின்றது. இலக்கியவாதி மனிதர்கிளிடையில் வன்மத்தை விதைகக்த் தேவையில்லை. நொருங்கிக்கிடக்கும் உலகில் மனிதர்களிடையில் மனித இயல்பான அன்பையும் சுதந்திரத்தையும் புரிதலையும் ஒத்திசைவையும் விதைக்கவே அவன் தேவை." என்று கூறுவதன் மூலம் பாட்டாளிவர்க்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக, குறைந்த பட்சம் மௌனம் சாதிக்க படைப்பாளிகளைக் கோருகின்றார்.

உலகம் வர்க்கத்தாலும், சாதியாலும், ஆண் ஆதிக்கத்தாலும், இன ஒடுக்குமுறையாலும், நிற ஒடுக்குமுறையாலும் .............. பிளவுண்டு உள்ளது. இதை மூடிமறைப்பதே இன்றுள்ளபணியாகும் என விசுவாசமாக கூறுவதன் மூலம், வர்க்கப் போராட்டத்தைத் தடுக்க கோட்பாட்டு விளக்கம் கொடுக்கின்றார். இலக்கியவாதி மதவாதி போல் முரண்பாட்டைத்தணிக்க எண்ணை வார்க்கவேண்டும். போரட்டத்தை முறியடிக்க இலக்கியவாதி காந்திபோல் அகிம்சைபேசி போரட்டத்தை தனிக்க காவடி எடுக்கவேண்டும் என்கிறார். ஒடுக்கப்பட்ட மக்கள் தம்மை சூறையாடுபவர்களை எதிர்த்து வன்முறையில் ஈடுபடாது தடுக்க படைப்பு உபயோகப்படவேண்டும் என்கிறா். அதவாது இருக்கும் ஒடுக்குமுறை கொண்ட சுரண்டல் சமுதாயத்தை சுபிட்சமாக பேண, வன்முறையை மறுத்த அகிம்சை இலக்கியமே படைப்பாக வேண்டும் என்கிறர்.

முதலாளிய சுரண்டல், பார்பாணிய ஒடுக்குமுறை போன்ற அனைத்தையும் பரிவுடன் புரிந்து கொண்டு. அதற்க்கு எதிராக மக்கள் அனிதிரளாது தடுக்க முன் எச்சரிக்கையாக கந்தியத்தை உபதேசம் செய்யும் வகையில் படைப்பு உருவாகவேண்டும் என்கிறார். இலக்கியம் ஒடுக்கு முறையைக் கண்டு கோபம் கொள்ளாது பூசிமொழுக வேண்டும் என்கிறார்.






நூறு கோடி மக்கள் அடுத்த நேர உணவு இன்றி இருப்பதைப்பற்றியோ, ஐம்பது கோடிச் சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுத்தி சுரண்டுவது பற்றியோ, பல பத்துக்கோடி மக்கள் குடிக்க நீரின்றி இருபபது பற்றியோ. இருபத்திஐந்து கோடி மக்கள் பார்ப்பாளிய சாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருப்பது பற்றியோ இது போன்றவைகளை கண்டு கோபம் கொள்ளாத படைப்பு தேவை எனகிறார். ஆடு மாடுகள் போல் பெண்கள் கொழும்பில் சுதந்திரவர்த்தக வலயத்தில் கொத்தடிமைகளாக மாற்றுவது மட்டும்மின்றி விபச்சாரப்பட்டத்துடன் பலாக்காரத்தை செய்வதைக் கண்டோ, மூன்றாம் உலக மனிதர்கள் வேலைதேடி உலக விமானநிலையங்களில் நாயாக அலைவதைப்பார்த்தோ, ஆபிரிக்க மனிதத்தடிக்குச்சிகளைப் பார்த்தோ கோபம் கொள்ளல் ஆகாது பாப்பா என உபதேசிக்கின்றார். ஏகாதிபத்திய அரசியல்வாதிகள், முதலாளிகள், அதிகாரவர்க்கங்கள், நடிகர் நடிகைள் என எண்னற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பன்றிகள் உழைப்பவனைச் சுரண்டி மிதம்மிஞ்சி தின்று கூத்தடிக்கும் ஆபாசக் கூத்துக்களை கண்டு கோபம் கொள்ளக்கூடாது. அதை பரிவுடன் அணுகி சுரண்டப்படுபவர்கள் இடம் கோபம் வராது பார்த்துக் கொள்ளவேண்டும் எனப் பார்ப்பான் மாதிரி உபதேசம் செய்கின்றார்.

இங்கு மக்கள் பற்றிய கரிசனை உடையவன்போன்று நடிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். சி.என். என் (C.N.N) தலைவர் மக்களுக்கு என நூறு கோடி டொலர் கொடுத்ததைப்போற்றி கதைக்க வேண்டும். டயானச் சீமாட்டியார் ஏழையை தொட்டுப்பேசியதை போற்ற வேண்டும். இப்படி உள்ளவைகளை எடுத்துக்காட்டுவதன் மூலம் வன்முறையற்ற வகையில் பிளவை தடுப்பதும் நடக்கும். மக்களை அதன்பின் (கோபத்தைத்தடுத்து) அணிதிரட்டுவதும் நடக்கும் என்கிறார். மக்கள் பிரச்சனையை உண்மையின் பேசுவது கோபத்துக்கு உட்பட்டது. எனவே பொய்மையின் மீது படைப்புகள் மக்கள் கோபம் கொளளாதவாறு இருக்க, இச்சமூதாயத்தைக் கட்டிக்காக்க படைப்பு உருவாகவேண்டும் என முதலாளிக்காக அக்கோட்பாட்டை முன்வைத்து. இதில் தனது சொந்த வாழ்வுப் பிழைப்பை நடத்தியபடி தனது அருவடித்தனத்தை தொடர்கின்றார்.

அடுத்து பலர் நல்ல கதை பற்றிக் கூறி அதிகம் அலட்டிக் கொள்கின்றனர். நல்ல கதை என்றால் என்ன எனக் கேட்டால் முழி பிதுங்குகின்றனர். வடிவம், மொழி, கலை, அழகியல்.......... போன்றன சிறப்பாக அமைந்தால், அது ஒருவருக்கு ஏதோ ஒரு காராணத்தால் பிடித்து விட்டால் நல்ல படைப்பாகி விடுமா? இல்லை, மாறாக மக்களைப் பற்றியும் அதில் சேர்க்கை இயற்க்கையைப் பற்றி படைப்பு என்ன நினைக்கின்றது, என்ன சொல்கின்றது எதைப் பதிலீடாக முன்வைக்கின்றது எனப் பார்ப்பதும், எதிரியை எப்படி பார்க்கின்றது, என்ன செய்யக் கோருகின்றது என்ற நீண்ட விடையங்களை உள்ளடக்கிய வகையில், அதன் உள்ளடக்கத்தை பார்த்து தான் நல்ல படைப்பை வகைப்படுத்த முடியும். அதாவது என்ன உள்ளடக்கம் என்பது மட்டும் தான் ஒரு படைப்பின் தீர்க்கமான விடையமாக உள்ளதுடன், அதுமட்டும் தான் நல்ல படைப்பை தீர்மானிக்கின்றது. ஒரு படைப்பின் மற்றைய விடையங்கள் இதற்க்கு மேலும் மெருகூட்ட முடியுமே ஒழிய, அவை தீர்க்கமானவையல்ல. நல்ல படைப்பு என்பது வர்க்க எல்லைக்கு உட்பட்டதே. இது வர்க்க எல்லையை தகர்ப்பைக் கோரி அதை முன்நிறுத்துவதாக, இருக்கும் சமூக அமைப்பை எதிர்த்து தகர்ப்பதாக படைப்பு ஒவ்வொரு விடையத்திலும் சோடை போகாதவையாக இருக்க வேண்டும். இது மட்டும் தான் நல்ல படைப்பாக இருக்கின்றது.



சிலர் "மனிதம் பற்றியும், அதன் உணர்ச்சி பற்றி.........." பேசுவதே படைப்பு என்கின்றனர். இதில் என்ன வர்க்கம், போராட்டம், சமூகம் என எழுப்புகின்றர்கள். இது படைப்பு பற்றிய புரிதல் இன்றி கூறுவதே எனப் பலவகையாக விதம் விதமாக முன்வைக்கின்றனார்.

மனித உணர்ச்சிகள் கற்பனையான சுயாதீனமானவையா? இல்லை. ஒருக்காலும் இல்லை. ஐரோப்பியன் சமையல் அறையில் கழுபுவனினதும் சமையல் செய்பவனினதும், அவனின் முதலாளிக்கும் இடையிலான உணர்ச்சி ஒன்று அல்ல. இந்தியாவில் தீப்பெட்டி தொழில் சாலையில் வேலை செய்யும் இயந்திர கொத்தடிமைகளின் உணர்ச்சியும், இந்தியாவின் மத்தியதர மக்களின் உணர்ச்சியும், பணக்காரின் உணர்ச்சியும் ஒருக்காலும் ஒன்றாக இருப்பது இல்லை. உணர்ச்சிகள் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றது. வேறுபட்ட பொருளாதார இருப்புக்கு ஏற்ப ஏற்றதாழ்வான சமூக அமைப்புக்கு ஏற்ப, அதை ஒட்டிய காரணகாரியங்களில் இருந்து தான் உணர்ச்சி பிரதிபலிக்கின்றதே ஒழிய கற்பனையில் உதிர்ப்பானல்ல. அதாவது உணர்ச்சி வர்க்க சமூதாய பிளவுக்குள் வேறுபட்டு உள்ளது. இந்த எல்லைக்குள் தான் படைப்பு நின்று விடுகின்றனவே ஒழிய, இரண்டையும் கடந்த படைப்பு உருவாக்க முடியாது. படைப்பில் எதை நாம் மீளமீள ஆராய்கின்றோம். படைப்பு ஒரு குறித்த மையைகரு மீதான படைப்பு முழுமையில் உண்மையானதா, பொய்யானதா என்பதை கேள்விக்குள்ளாக்க வேண்டும். இந்த கேள்விக்குள்ளாக்கும் விடயமும் அதன் தொழில்பாடும் மேம்போக்காக கருவை குறித்து சுற்றியிருக்காது, அதனை முழுமையில் குறித்த கருவைத்தேடி அதன் ஒளியில் படைப்பு வெளிவர வேண்டும்.

இதே நேரம் ஒரு பிரதான கருவை சுற்றியுள்ள வெவ்வேறு கருக்கள் பொதுவாக முன்வைக்கும் மாற்று சமூக நிலைக்கு முரணாக இருக்க கூடாது. உதாரணமாக பெண் ஒடுக்கு முறையை பேசும் படைப்பு சாதி ஒடுக்கு முறையை நியாயப்படுத்த முடியாது. அதவாது இது மிக குறுகிய சிறிய சிறு விடையங்களுக்கும் விதிவிலக்கு இன்றி ஆழமாகப் பொருந்தும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு ஒருபடைப்பாளியின் சமூகப்பார்வை ஒரு சீராக முரண்நிலையின்றி பரந்து விரிந்ததாக இருக்க வேண்டும். அதவாது சமூகப்பார்வை என்பது ஒரு தெளிவான வர்க்க அரசியல் பார்வையால் ஒருங்கு இனைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

அடுத்து படைப்பு அனைத்தையும் மறுபேச்சு இன்றி அங்கீகரிக்கவும் வெளியிட அனுமதிக்க வேண்டும் என்கின்றனர். இந்தவகையில் முன்னால் சோஷலிச நாடுகளில் தடை செய்யப்பட்டது. ஜனநாயகத்துக்கு விரோதம் என்ற பிரச்சாரத்தை ஏகாதிபத்திய எச்சில்களை நக்கி பேந்தபடி பாரட்டுவது மறுபிரசுரம் செய்வது தொடர்வதுடன் மார்க்சியம் மீது தாக்குதலை நடத்துகின்றனர். இன்று ஐரோப்பாவில் கிட்லரை போற்றும், நாசிசத்தை உயர்த்தும், பாசிச இன வெறியை உயர்த்தும் படைப்புகள் தடை செய்யப்படுகின்றது. இதை யாரும் (நாசிகளுக்கு வெளியில்) ஜனநாயக விரோதம் என கூறுவது இல்லை. இத்தடை படைப்பாளியின் சுதந்திரத்தை பறிப்பதாக யாரும் புலம்புவது இல்லை. இந்த மாதிரி எழுதுபவர்கள் மனித குலத்தை பிளந்து அதில் குளிர்காய்பவர்கள். இது போன்று சோஷலிச சமூகத்தில் மாறிச்செல்லும் பொருளாதார நிலைக்கு ஏற்ப சுரண்டல், ஆணாதிக்கம், சாதியத்தை போற்றும் ......... அனைத்துப் படைப்புகளும் விமர்சனம் செய்யப்பட்டு தடைசெய்யப்படும். இங்கு மனிதனை சுரண்ட பிளக்கும் அனைத்து படைப்புகளும் நியாயப் படுத்தும் நேரடி மறைமுகப் படைப்புக்கள் எல்லாம் தடை செய்யப்படும்.

இறுதியாக படைப்பு என்பது மனிதனின் கற்பனையோ பொருள் அற்ற சூட்சகமோ அல்ல. மாறாக சமூகத்தின் பிரதிபலிப்புதான் படைப்பாகின்றது. சமூகம் என்பது இரண்டுபட்டுள்ள நிலையில் படைப்பும் இரண்டாகின்றது. இதனால் படைப்பு வர்க்க எல்லைக்குள் உட்படுகின்றது. எனவே படைப்பாளி சமூகத்தை முன்னோக்கி பார்க்க வேண்டும். சமூகம் என்பது ஒவ்வொரு தலைமுறையும் ஏன் ஒவ்வொரு செக்கனும் முன்னோக்கி செல்கின்றனவே ஒழிய அதே நிலையிலோ பின் நோக்கியோ செல்வது இல்லை. முன்னையது மறுக்கப்படுகின்றது பின்னையது வரவேற்க்கப்படுகின்றது. ஒரு படைப்பாளி இதில் இருந்து மேலும் ஒருபடி தாண்டி ஒட்டு மொத்த மக்களின் நலன்களில் இருந்து பாய்ச்சல் நிலையில் சமூகத்தை காண வேண்டும். அதை விடுத்து பழையதைக் கோருவதோ, இருப்பதை பாதுகாக்க கோருவதோ, ஒட்டு மொத்த சமூகத்துக்கு எதிராக தனிநபர்களை நோக்கி படைக்கும் படைப்புகள் பிற்போக்கானவையாகும். இவை தடை செய்யக்கூடியவை மட்டும் இன்றி தண்டனைக்கு உரியனவாகவும் இருக்க கூடியவை. ஒட்டுமொத்த மக்களின் நலன்களில் இருந்த படைப்புகளை, அம் மக்களின் விடுதலை மீதான சமூக கண்ணோட்டத்தில் நின்று படைக்க முன்வர வேண்டும். இது மட்டும் தான் மக்களுக்கான படைப்புகளாக இருக்கும் நீடிக்கும்.

தொடர்ந்து கீழ்வரும் கதையைப்பார்ப்போம்



# கதைமீதான அரசியலும், அதன் வர்க்கப்பார்வை ஒட்டிய விமர்சனமும்

அம்மா 5இல் வெளியாகிய விமர்சனங்கள், கதை மற்றும் அம்மா 4 இல் வெளியகிய விமர்சனம் தொடர்பாக, அதன் உள்ளடக்கத்தை ஒட்டிய அரசியல் வர்க்க நிலைப்பாடுகளை ஆராய்வோம்.

"வளர்மதியும் ஒரு வாசிங் மெசினும்" என்ற இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய சிறு கதையை ஷோபா சக்தி அம்மா 4இல் விமர்சித்தார். இதை ஒட்டி அம்மா 5இல் அழகலிங்கம் மேலும் மார்க்சியத்தின் பெயரால் பூசிமொழுகி உள்ளார். மற்றும் கதை அதறக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கு வெளியில் இலக்கியம் தொடர்பான பல கருத்துகள் வெளியாகி உள்ளது.

ஷோபாசக்தியும் அழகலிங்கமும், முதலாளித்துவ சீர்திருத்தத்தினூடாக முதலாளித்துவ தூயஜனநாயகத்தை கோரியபடி, மார்க்சியம் என்றால் என்ன என தெரியாத குருட்டு நிலையில் கதைக்கு வெளியில் கம்யூனிச எதிர்ப்பைக்காக்கும் இராஜேஸ்வரியின் கதையை விமர்சிக்க முற்பட்டு, அதைவிட மிக மோசமான முதலாளித்துவ இருத்தல் உடன்கூடிய சந்தைப்படுத்தலுக்கு நியாயம் கற்பிக்கப்பட்ட வர்க்க அரசியல் விபச்சாரத்தைப் பார்ப்போம். அத்துடன் இராஜேஸ்வரியின் கதையில் உள்ள பல்வேறு ஏற்ற இறக்கங்களையும் முரண்பாடுகளையும் தாண்டியது அல்ல என்ற உண்மையை. ஷோபாசக்தியின் சொந்தக் கதைகளை எடுத்துக் காட்டுவதன் மூலம், உள்ளடக்கம் இரண்டுக்கும் ஒரே வர்க்க தன்மையைக் கொண்டு உள்ளதையும் ஆராய்வோம்.

நாம் இனி ஷோபாசக்தி சுட்டிக்காட்டிய வழியில் இன்றி, இராஜேஸ்வரியின் கதை எதைச்சொல்கின்றது எனப்பார்ப்போம்.

ஒரு பெண் லண்டனுக்கு வந்த குறுகிய காலத்தில் சந்திக்கும் பிரச்சனையை கதை பேசுகின்றது. அப் பெண் வந்த ஏஜன்சி பணம், அவளின் கணவன் தனது தம்பியை கூப்பிட்ட பண நெருக்கடி, தனது தம்பியை கூப்பிடும் முயற்ச்சி, இதற்குள் குழந்தை ஒன்றை பெறுவதை தவிர்க்கும் முயற்ச்சி, கற்பத்தடைமருந்து பாவித்தலும் அதன்விளைவும் அதன் துன்பமும், இதில் ஆணின் மவுனமும் இதன் தொடர்ச்சியில் குழந்தை கிடைக்கின்றது. குழந்தையும் அதன் பராமரிப்பு ஊடே இருவரும் வேலைக்கு செல்லல், மனிதாபிமான மற்ற ஒரு முதலாளியின் மிக மோசமான சுரண்டல், மேலதிக வேலை செய்ய நிர்ப்பந்தித்தல், மறுத்தால் வேலையை விட்டு நீக்க போவதாக எச்சரித்தல், இதை எதிர்த்து போராடாத பூர்ஷ்சுவா கனவுகள், இதன் தொடர்ச்சியில் மேலதிக வேலை செய்து கிடைக்கும் பணத்தை எண்ணி போராட்டத்தை கைவிட்ட மத்தியதரவர்க்க இயல்புடன், ஒரு வாசிங்மெசின் வாங்கும் கனவும் அதை வாங்கி விடுவதும்.

இந்த மேலதிக வேலை பிள்ளை மீதான கவனயீனம் ஏற்பட்டதால், முதலாளியின் சுரண்டும் நலனின் பாதுகாப்பற்ற வேலை முறையால், வெங்காயத்தில் இருந்த பக்ரீரியா குழந்தையை நோய் யாக்கியதும், நோய் வந்ததும் முதலாளிக்கு அஞ்சி பிள்ளையை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகாது வேலைக்கு சென்றதால் குழந்தை மூளைபிசகாகிவிட்டது. இதன் தொடர்ச்சியில் வாசிங் மெசின் வாங்கும் எண்ணத்தை கைவிட்டு, மேலதிக வேலை செய்யாதுவிட்டு இருப்பின் குழந்தை ஆரோக்கியமாக இருந்து இருக்கும். ஆனால் இன்று மூளை பிசகாகி விட்டதால் வாசிங்மெசின் அவசியமாகிவிட்டது. எனக் கதை முடிகின்றது. அதாவது குழந்தையும் வாசிங் மெசினையும் எடுத்து வைத்து இதில் எது அடிப்படையான உடனடி தேவை என்ற கேள்வியில், குழந்தையின் நலனை முதன்மைப்படுத்தி மத்தியதர வர்க்கத் தீர்வை முதலாளித்துவத்தின் முரண்நிலையற்ற ஜனநாயகத்தினுள் படைப்பு கோருகின்றது. வேறு கதைகளின் முதலாளித்துவ கண்ணோட்டங்களை நியாயங்கங்களை எடுத்து வைத்த தொடர்ச்சியில் தான் வாசிங்மெசின் கதையை விமர்சனம் செய்து இருந்தனர். கதையில் "மாலதி பாவம் அவள் ஒரு சாதாரண பெண் சாதாரண ஆசையால் ஆட்டிப்படைக்கப்படுபவள்" என இராஜேஸ்வரி எடுத்து வைத்த வாதத்தை எடுத்து வைத்து ஒரு கோட்பாட்டு விவாதமே நடந்தது.

மார்க்ஸ் சொல்வதில் இருந்து தொடங்குவது தான் இவர்களை துல்லியமாக தோல்லுரிக்கும்.

"உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் துரித வளர்ச்சி அதே அளவுக்குத் துரிதமாய் செல்வத்தையும் ஆடம்பரத்தையும் சமூகத் தேவைகளையும் சமூக நுகர்வின்பத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. இவ்விதம் தொழிலாளியின் நுகர்வின்பமும் அதிகரித்திருக்கிறது என்றாலுங்கூட அதனால் உண்டாகும் சமூக மனநிறைவு, தொழிலாளிக்கு எட்டாதபடி மிகமிகக் கூடுதலாகிவிட்ட முதலாளியின் நுகர்வின்பத்துடன் ஒப்பிடுகையிலும் குறைந்துவிடுகிறது. நமது விருப்பங்களும் இன்பங்களும் சமுதாயத்திலிருந்தே எழுகின்றன. ஆகவே சமுதாயத்தைக் கொண்டே நாம் அவற்றை அளவிடுகிறோமே அல்லாது, அவற்றைப் பூர்த்தி செய்ய உதவும் பொருள்களைக் கொண்டல்ல. இவையாவும் சமூகத் தன்மை வாய்ந்தவையாய் இருப்பதால், இவை ஒப்பு இயல்புடையவையாகும்." (அடிக் கோடு நாம்.)

மார்க்ஸ்
"கூலியுழைப்பும் மூலதனமும்" பக்கம்-49

ஆசை என்பதெல்லாம் பொய். முதலாளித்துவம் தான் ஆசையை மறுக்கும் ஆகவே ஆசைப்படுங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கள் என்கின்றனர். பூர்ஷ்சுவா கனவுகள், ஆசைகள், ஆடம்பரங்கள் இருக்க முடியாது என மார்க்சிய மூலாம் மூலம் சொல்லும். முதலாளித்துவத்தின் சுரண்டும் கொடூரமான ஆசைகளை இவ்விவாதம் மூலம் அழகாக மூடிமறைத்து நிறுவியுள்ளனர். அத்துடன் முதலாளித்துவத்தை விமர்சிக்கவெளிகிட்டு மார்க்சியத்தின் அடிப்படை பொருளாதார விதிகளை கைவிட்டு, முதலாளித்துவ பொருளாதார விதிகளை மார்க்சியத்தின் பெயரில் முன்வைத்ததுமல்லாமல் மறைமுகமாக நியாயப்படுத்தியுள்ளனர். முதலாளித்துவ பொருளாதார விதியில் பொருளாதார நுகர்வில், எல்லோரையும் எல்லாவற்றையும் உன்னால் முடியா விட்டாலும் வாங்க கோருகின்றது நிர்ப்பந்திக்கின்றது. இதற்க்கு முடியாவிட்டால் உன் பிள்ளையை வித்தோ, உன் மகளை அல்லது உன் மனைவியை விபச்சாரத்துக்கு அனுப்பு, மேலதிகமாக எட்டு மணித்தியாலத்துக்கு மேலாக வேலை செய்து உழை, லஞ்சம் வாங்கு ........... என எண்ணற்ற வழிகளை மறை முகமாக முன்வைக்கின்றது. இது ஆசையை, ஆடம்பரத்தை, கவர்ச்சியை அடிப்படையாக கொண்டு தான், தன் சந்தைப்படுத்தலை சார்ந்துள்ளது மட்டும்மின்றி தனது சுரண்டலை தொடர்கின்றது.

பாட்டாளி வர்க்கம் பொருள் பங்கீட்டில் எப்போதும் தேவையை முன்நிறுத்தி எடுக்க கோருகின்றது. இதை பொதுவாக நடைமுறையில் பாட்டாளி வர்க்கம் முன்வைப்பதுடன், இதை அடிப்படையாக கொண்டே பிரச்சனைகளில் முடிவு எடுக்கின்றது. பாட்டாளி வர்க்கம் நீண்ட சோசலிச காலகட்டம் ஊடாக, தொடர்ச்சியான இடைவிடாத புரட்சிகளின் ஊடே இதை அமுல்படுத்தப் போராடுகின்றது. இதில் இருந்து முற்றிலும் மாறுபட்ட வகையில் முதலாளித்துவம், சமூகத்தின் கடைசிப்படி நிலையில் உள்ள ஏழையிடமும், தமது பொருளை வாங்கக்கோரி விளம்பரம் செய்வதன் மூலம் ஆசையை, ஆடம்பரத்தை, கவர்ச்சியை திணிக்கின்றது. இந்த விளம்பர உலகம் தான் தேவைக்கு அப்பால் ஆசையையின், ஆடம்பரத்தின், கவர்ச்சியின் ஊற்று மூலமாக உள்ளதுடன், முதலாளித்துவத்தின் உயிர் நாடியாகவும் உள்ளது. இதற்க்கு எதிரான போராட்டம் கூட முதலாளித்துவத்தின் உயிர்நாடியில் கை வைப்பதாக உள்ளது.

முதலாளித்துவம் பொருளை வாங்கக் கோருகின்றதே ஒழிய, ஒருக்காலும் ஆசையை மறுத்து தனக்கு சவக்குழியை தோண்டுவதில்லை. இராஜேஸ்வரியின் கதை முதலாளித்துவ சந்தைப்படுத்தலுக்கு எதிராக உள்ளதுடன், முதலாளித்துவத்தின் சூறையாடலுக்குப் பதிலாக முதலாளித்துவத்தின் நேர்மையான ஜனநாயகத்தை மனிதாபிமானத்தின் மீது முன்வைக்கின்றனர். ஷோபாசக்தியும், அழகலிங்கமும் முதலாளியம் சுரண்டுவதற்காக பொருளை விற்க்க மறுக்கின்றது, வாங்குவதை விரும்புவதில்லை என்று சோடித்துக் காட்டுவதன் மூலம், மறைமுகமாக பொருட்க்களை வாங்க மார்க்சியம் மூலம் ஊக்குவித்து முதலாளிக்காக விளம்பரம் செய்கின்றனர்.

இதை மேலும் ஊக்கப்படுத்த மார்க்சியத்தின் கோரிக்கையான உலகில் எல்லாப் பொருட்களையும் அவர்களின தேவையை ஒட்டி எல்லோரும் அடைய உரிமை உண்டு எனச் சொல்வதன் மூலம், முதலாளித்துவத்தின் சூறையாடும் பண்புகளுக்கு மறைமுகமாக ஊக்கமளிக்க கோட்பாட்டு விளக்கம் கொடுத்து சூறையாட கம்பளம் விரிக்கின்றனர். முதலாளித்துவம் சந்தைப்படுத்தலை சார்ந்துள்ளதால், எல்லோரையும் பொருக்களை வாங்கக்கோரி நிர்ப்பந்திக்கின்றது. இங்கு வாங்கும் சக்தியை சுரண்டுவதன் மூலம் மனிதர்களுக்கு இல்லாமலாக்கிய பின், இருப்பதையும் புடுங்கிவிடும் உத்தியில் தான் இன்று விளம்பர உலகம் கட்டியமைக்கப்படுகின்றது. இதன் மூலம் தன் வாழ்வையே முதலாளிக்காக உழைக்கவும், மேலதிக வேலை செய்து பிழைக்கவும், குடும்பத்தை பிரிந்துசென்று உழைக்கவும், பெண்கள் தங்களை பலாக்காரம் செய்ய அனுமதிக்கவும்.............இப்படியாக மனிதர்களை நாயாக இருத்தி வாலாட்டச்செய்வதன் மூலம், மனிதர்களின் அவலமான நிலையில் எல்லாவற்றையும் வாங்கக் கோரும் நிலையை ஏற்படுத்தி, பின் அடிப்படை உணவு முதல்கூட தன்னால் அடைய முடியாதநிலையில், ஆடம்பர பொருளை பெறும் போராட்டத்தில் ஈடுபடுவதால் முதலாளித்துவ சந்தையின் இருத்தல் நீடிக்கின்றது. இன்று உலகமயமாதல் தேசியத்தைக் கடந்த ஏகாதிபத்திய பொருட்களை, மூன்றாம் உலக ஏழைக் குடிசையிலும் விற்க்க முயலும், பலாத்கார ஒப்பந்தங்களும் துரோக ஒப்பந்தங்களும் பொருளை ஏழைக்கு மறுக்கவில்லை. ஆனால் ஷோபாசக்தியும், அழகலிங்கமும் முதலாளித்துவம் பொருட்களை விற்க்க மறுக்கின்றது எனவே ஆசைபடுங்கள் என்கின்றனா. ஆசையாவது ஆடம்பரமாவது என்று கூறுவது முதலாளித்துவத்தின் எச்சம், எனவே ஆசைப்படுவதை உன்னால் முடியாவிட்டாலும் வாங்கிக் குவியுங்கள், இது பாட்டாளி வர்க்கக்கண்ணோட்டம் என்று கூறிக் கொண்டு முதலாளிகளுக்காக விளம்பரம் செய்கின்றனர்.

வாசிங்மெசின் லண்டனில் ஓர் அடிப்படைப் பொருளா? ஆடம்பரப் பொருளா? என்ற கேள்வி எழுகின்றது. இதன் மீதான பதிலை எழுந்தமானமாக கூற முடியாது. ஏன்? லண்டன் சமூகம் ஏற்றத் தாழ்வாக உள்ள போது பதிலும் நிலைமைகள் உடன் மாறுகின்றது. போராட்டமாக சமூகத்தை

www.tamilarangam.net

நோக்கியும், அரசை நோக்கியும் உள்ள போது வாசிங்மெசின் அடிப்படைப் பொருளாக உள்ளது. இது வீட்டுக்கு வீடு வாசிங்மெசினை இவர்களைப்போல் கோருவதில்லை. மாறாக மக்கள் இலகுவாக பயன் பெறும் வகையில் இலவசமாக பொருத்தக்கோரிப் போராடவேண்டும்.

பெண்களை விடுவிக்கவும், வேலையை இலகுவாக்கவும் வசிங்மெசினைக் கோரிய சமூகப் போராட்டமாக இல்லாத நிலையில், ஒரு குடும்பத்துக்குள்ளான பொருளாதார இயலாமைக்குள் இது எழுப்பப்படின், இங்கு இது ஆடம்பரப் பொருளாகவே இருக்கும். ஏன் இலங்கையில் இது இன்று சமூக அளவிலும் ஆடம்பரப் பொருளாகவே இருக்கின்றது. இலங்கையில் ஒரு கட்டி சவுக்காரம் பெறுவதே போராட்டமாக உள்ள போது, வாசிங் மெசினை பெறப்போராடுவது, இல்லாதவனை மேலும் சூறையாடக் கோருவதுமாகும். போராட்டத்தைத் திசைதிருப்பி முதலாளிக்கு சேவை செய்வதாகும். இது அப்பொருளை பெறுவதை மறுப்பதில்லை. ஏன் புரட்சியை நடத்திய பின் சோசலிச அரசில் கூட ஏற்றத் தாழ்வை ஒருஎட்டில் கடந்து விடமுடியாது. அங்கும் பொருள் பயன்பாட்டின் தேவைகூட, வேறுபட்ட பொருளாதார நிலைமைக்கு ஏற்ப கம்யூனிச சமூகம் உருவாகும் வரை மாறுபட்டே நீடிக்கின்றது.

ஒரு பொருளின் தேவை சோசலிச சமூகத்தில் எப்படி இருக்குமோ, அதுபோல் குடும்பத்துக்குள் ஏற்ற இறக்கமான பொருளாதார சமூகப்பின்னணியை கவனத்தில் எடுக்காது முன்வைத்துக் கோரமுடியாது. இப்படி முன்வைப்பது வரட்டு வாதமாகும்.

ஒரு பொருள் குடும்பத்தின் வருமானத்துக்குள், குடும்பத்தின் பல்வேறு பிரச்சனைக்குள், இது சிலவேளை அடிப்படை பொருளாகவும், சில வேளை ஆடம்பரப் பொருளாகவும் இருக்கும். கதையில் உள்ள வானதியின் குடும்பப் பிரச்சனைக்குள் குழந்தையின் மூளையா? வாசிங்மெசினா? என்பதில் வாசிங்மெசின் ஆடம்பரப் பொருள்தான். பிள்ளை மூளைப்பிசகாகியபின் மூளை கட்டுப்பாட்டை இழந்து உடுப்பை அடிக்கடி நனைத்தபோது வாசிங்மெசின் அடிப்படைப் பொருளாகின்றது. இதை இராஜேஸ்வரி தனது கதையில் கொண்டு வந்துள்ளார். ஆசை, தேவை இரண்டையும் கவனிக்க மறுத்து, தாக்குதல் நடத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் விமர்சிக்க முற்பட்டவர்கள், மிக மோசமான முதலாளித்துவ சூறையாடலுக்கு விளம்பரம் செய்து மார்க்சியத்தின் பெயரில் நியாயப்படுத்தியுள்ளனர்.

ஒரு பிரச்சனையில் குழந்தையின் பால்மாவா? கைக்குகட்டும் மணிக்கூட என்ற பிரச்சனையில் மணிக்கூடு ஆடம்பரம்தான். இங்கு மணிக்கூடு பயன்படுத்தும் உரிமை தொடர்பான பிரச்சனையல்ல. ஒரு பொருள் அடிப்படைப் பொருளா? இல்லையா? என்பது அதன் உடன் தொடர்புடைய எல்லாவிடையங்களாலும் தான் தீர்மானிக்கப்படுகின்றது. இதை விடுத்து வரட்டுவாதங்களால் அல்ல. இதை போல் முதலாளித்துவ விளம்பரத்துக்கு போஸ் கொடுத்தும் அல்ல. புரட்சியும் இப்படித்தான். நெளிவு சுழிவான பாதைதான் எங்கும் எதிலும் இருக்கும். நேர்கோட்டுப் பாதை என்பது தற்கொலைக்கு ஒப்பானதும் வரட்டுவாதமுமாகும்.

தமிழர்களின் பூர்ஷ்சுவாகனவுகள் போல், வானதி வந்த குறுகிய காலத்தில் நிறையவே கடன் பிரச்சனைகள் உடன், தனது பூர்ஷ்சுவா கனவுகளால் பிள்ளையின் நோய்யை அலட்சியப்படுத்தியது தனது ஆடம்பரத்தால் தான். தமிழர்கள் 4,5 வருடங்களுக்குள் வீடுவாங்குவதும், வீட்டில் ஒரு மொழி அகராதி இருக்குமோ இல்லையோ, உலகில் உள்ள முன்னணி மார்க்கின் அதி உயர்தர இலற்ரோனிக் பொருட்களையும், நவீன நகைகளை வாங்கிக்குவிப்பதும் பொதுவாக பூர்ஷ்சுவா கண்ணோட்டம் கொண்ட ஆடம்பரக்கனவுகளே. மாலை சினிமாவுக்கு போவதா? பிள்ளைக்கு ஒருவாய் பால் வாங்குவதா? என்ற கேள்வியில் ஷோபாசக்தியும், அழகலிங்கமும் ஆசைப்படும் சினிமா தான் முக்கியம் என்கின்றனர். ஆசைப்படாத பால்லும் குழந்தையின் பசியும் முக்கியம் அல்ல என்கின்றனர்.

சினிமா பார்க்கும் உரிமை பற்றியல்ல இங்கு விவாதம். அந்த உரிமையை யாரும் மறுக்க முடியாது. ஆனால் சினிமா அன்று அக்குடும்ப நிலையில் ஆடம்பரம்தான். வாசிங்மெசின் கதையில் குழந்தையின் பாதுகாப்புதான் முக்கியமாகும். அதை விடுத்து குழந்தையை கவனியாது வாசிங்மெசின் கனவுடன் மேலதிகமாக உழைப்பதல்ல. இங்கு வானதிக்கு வாசிங்மெசினை வங்குவதை படைப்பு மறுக்கவில்லை. மாறாக குழந்தையின் உளவியலை படைப்பு பூர்ஷ்சுவா கண்ணோட்டத்தில் பேசுகின்றது.

இக் கதை பொதுவாக லண்டன் வாழ்தமிழர்களின் இரண்டு மூன்று வேலை செய்து உழைக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கனவுகள் மீது. மற்றவர்களைப் பார்த்து அது போல் இருக்க முயலும் நிலை மீது தான் இக்கதை, முதலாளித்துவ தூயஜனநாயகத்தை கோருவதை அடிப்படையாக கொண்டுள்ளது.


அழகலிங்கம் வேலை செய்யும் பெண், அதுவும் ஒரு குழந்தையின் தாய்க்கு கட்டாயம் வாசிங் மெசின் தேவை என்கின்றார். அப்படிப்பார்த்தால் ஐரோப்பாவில் வேலை செய்யும், மற்றும் குழந் தைகளின் தாய்மார் எல்லாம் வாசிங்மெசினை வைத்துள்ளனரா? இல்லையே ஏன்? அடிப்படைச் சம் பளத்தை பெறுபவர்களும் மிக மோசமான வறுமையில் உள்ள ஐரோப்பியரின் குடும்பங்களில் இது வாங்குவது ஆடம்பரப் பொருளாக, அவர்களின் வருமானத்துக்குள் உள்ளது. அதுவும் ஒரு வாசிங் மெசினின் ஆயுள் மூன்று முதல் ஐந்து வயதாக உள்ள போது எப்படி முடியும். ஆனால் ஐரோப்பா வரும் பூர்ஷ்சுவாத் தமிழன் வந்த உடன் வாங்க அலையும் போக்கு அவனின் பொதுவான பூர்ஷ் சுவா இயல்பாக ஐரோப்பிய தொழிலாளியில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது.

ஷோபாசக்தியும், அழகலிங்கமும் ஆசை ஆடம்பரமும் என்பது ஜனநாயகமானது எனப் பிரகடனம் செய்கின்றனர். இதில் இருந்து பார்த்தால் தனது சொந்த குடும்பத்தின் இயல்பான பூர்ஷ்சுவா கோரிக்கைகளை விமர்சனம் இன்றி அங்கீகரிக்கின்றனர். எவ்வளவு போலியான நடைமுறை. இதை நடைமுறையில் 99 வீதமான மக்களால் நடைமுறையில் செய்யமுடியாது. ஏன் ஷோபாசக்தி கூட தன்னுடைய ஆசையை ஏன் தன்னுடைய தேவையை கூட தனது வருமானத்தை மீறி, தனது உடல் பலத்தை மீறிய வரட்டுக் கம்யூனிச கனவுகளால் அடைய முடியாது. அவரும் சாதரான ஆசையுடன் ஆட்டிப்படைக்கப்பட்டும், கைவிட்டும், அதறக்காக போராடியபடியோ அல்லது கடனாளியாகவோ நடைப்பிணமாகவோ வாழ முடிகின்றது. இதில யாரும் மிஞ்ச முடியாது. ஏன் எனின் நாம் வாழும் சமூகம் சுரண்டல் சமூகம் அல்லவா.

இந்த விவாதத்தைத் தொட்டு அழகலிங்கம் முன் வைத்த வாதத்தைப் பார்ப்போம். "விமர்சனம் என்பது, அவரவர் அறிவுமீது இரசனைமீது கட்டப்படும் ஒன்றாயச் சுருங்கிவிட்டது" எனத் தலைப்பிட் டவர் தலையங்கத்திலேயே தனது வர்க்க அரசியலை கைவிடுகின்றார். அது சரி விமர்சனம் எப் போது ஐயா இதற்கு வெளியில் இருந்து வந்தது. காலம் காலமாக இருக்கும் வர்க்க சமுதாயத் தில் இதற்க்கு வெளியில் எப்போது எல்லாம் நன்றாக இருந்தது என்பதை எல்லாம் இவர்களின் டிரொக்சி வந்தாலும் நிறுவமுடியாது. விமர்சனம் என்பது வர்க்க எல்லைக்கு வெளியில் இருக்க முடியாது. ஆனால் முதலாளிகள் மட்டும் இப்படி இருந்தது என நிறுவத் தயாராக உள்ளனர். அது போல் அழகலிங்கத்தின் விமர்சனமும் வர்க்க எல்லையைக் கடந்த அறிவு இரசனையில் நின்று வைக்கும் போது முதலாளிக்காக பட்டாளி வர்க்கத்தின் பெயரில் இரண்டும் கலந்து முன்வைத்துள் ளார்.

அடுத்த பொன் மொழியைப் பார்ப்போம். "......உலகிலலுள்ள பிரச்சனை ஆசைப்படுவதல்ல ஆசைப் படத்தெரியாமல் இருப்பதுதான் அவள் ஏன் ஒருபென்ஸ் காருக்கு ஆசைபடுவதில்லை அவள் ஏன் ஓர் ஆகாயவிமானக் கொம்பனியின் சொந்தக்காரியாக இருப்பதற்கு ஆசைப்படவில்லை........... ஆசைப்படத் தெரியாத மட்டத்துக்கு அவர்களது கலாசாரம் ஒடுக்கப்பட்டுள்ளது.........." எனத் தொடர்கின்றது.

உண்மைதான் உலகில் உள்ள பிரச்சனைகளுக்கு ஆசைப்பட தெரியாதது ஒருகாரணம்தான். ஏன் எனின் ஆசைப்படத் தெரிந்தால் சந்தை நெருக்கடி தானக தீர்ந்து விடும் என்பது முதலாளிகளின் கோட்பாடு. ஆசைப்படுவது தெரிந்து விட்டால் விளம்பரச் செலவும் மிஞ்சும், மேலும் முதலாளியின் பையும் நிரம்பும். ஆசைப்படுபவனின் சொற்ப கையிருப்பை புடுங்கிய திருப்தியும் முதலாளிக் கும் இருக்கும். ஆசைப்பட வைக்க எப்படி நாயாக அழகலிங்கம் மார்க்சிய விளக்கம் கொடுக்கின்றாரோ, அதை விட வேகமாக ஏகாதிபத்தியம், விளம் பர உலகை நம்பியிருப்பதற்குப் பதில், டங்கல் ஒப்பந்தம் மூலமும் உலக வங்கி மூலமும் மக்களை ஆசைப்பட வைக்கவும், பொருட்களை அவர்களுக்கு விற்கவும், அழகலிங்கத்தை விட தீவிரமாக இயங்குகின்றனர். எனவே ஆசையை ஏற்படுத்தும் மிக தீவிர புரட்சியாளர்களான ஏகாதிபத் தியத்துடன் ஏன் உத்தியபூர்வமாக அறிவித்து கூட்டு சேரக்கூடாது.



ஆசைப்பட தெரியாதது மாபெரும் தவறு என்கிறார். ஏன் வட்டிக்கடை நடத்த, முதலாளியாகி சுரண்ட, மற்றவனை அடக்க, மற்றவனை கொள் ளையடிக்க, பெண்ணை கற்பழிக்க, பார்ப்பனராக தொடர, தாழ்த்தப்பட்டவனை நசுக்கி ஒடுக்க, பெண் ணை ஒடுக்கி வைத்திருக்கும் ஆசையைத்தான் அழகலிங்கம் மற்றவர்களின் சிறு ஆசைகள் மீது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறுவதன் மூலம் மறைமுகமாக நிறுவிப் பாதுகாக்க முனைகின்றார். அதாவது முதலாளி நடுத்தரவர்க்கத்தை அமைதிப்படுத்த விரும்பும் போது, கூறுவான் முயன்றால் நீயும் முதலாளியாக முடியும் எனவே என்னை எதிர்ப்பதற்குப் பதில், நீ முதலாளியாக வர ஆசைப்படு என் பதைத் தான் கோட்பாட்டு அளவில் அழகலிங்கம் மறுவிளக்கம் கொடுக்கின்றார். ஆசை என்பது எல்லாப் பிரச்சனையைப் போல் வர்க்க சமுதாயத்துக்கு உட்பட்டது. ஏன் ஒரு மத்திய தர வர்க்கத்தின் சிறு ஆசை கூட அடுத்த வர்க்கத்தைப் பாதிப்பதாக, சிறுமைப்படுத்துவதாக இருக்கும். வீதியில் செல்லும் போது கையேந்தும் ஒருபரிதாபத்துக்குரிய பெண்ணின் ஒரு வாய்க்கு தேவையான சோற்றுப் பருக்கையை விட, முன் கடையில் விருந்துண்ணும் ஆசையில் ஒரு மனிதன் எதைக் கையாள்வது முற்போக்கானது. ஆசை என்பது வர்க்க எல்லைக்கு உட்பட்டது. அது வர்க்க கோட்பாட்டால் கேள்விக்கு உள்ளாக்ககூடியவை. அழகலிங்கம் விளக்கியது போல் வர்க்க எல்லைக்கு அப்பாற்பட்டது அல்ல.

இறுதியாக மார்க்ஸ் பொருள் பங்கீட்டில் என்ன கூறுகின்றார் எனப் பார்ப்போம்.

"ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப" என்று தான் பிரகடனம் செய்கின்றார். அதை விடுத்து ஒவ்வொருவரினதும் ஆசைக்கு ஏற்ப என்று பிரகடனம் செய்யவில்லை. ஆசை என்பது சொத்துரிமைக்கான முதல் படியாகும்.
மார்க்சியவாதியாக கூறியபடி டிரொக்சியைப் போற்றும் இவர், போல்ஷெவிப் புரட்சியை ஸ்ராலின் காட்டிக் கொடுத்தார் என சேறடித்த படி, போல்ஷெவிக் கட்சியை எப்படி மார்க்சிய விரோத கண்ணோட்டத்துடன் சேறடிக்கின்றார் என்பதைப் பார்ப்போம். இவர் மொழி பெயர்த்து இந்தியாவில் வெளியாகிய புத்தகத்துக்கு இட்ட தலைப்பில்" போல்ஷெவிக் கட்சியின் இரட்டை நிலைப்பாடு" என சம்பந்தமில்லாத வகையில் போட்டதன் மூலம் தனது மார்க்சிய எதிர்ப்பை வெளிப்படுத்தியவர் இன்று கோட்பாட்டில் அதைச் செய்ய களம் புகுந்துள்ளார் அவ்வளவே.

அடுத்துஷோபா..

இனி நாம் ஷோபாசக்தியின் கதை ஒன்றை பார்ப்பது அவசியமாக உள்ளது. ஏன்? பாட்டாளிவர்க்க கோசம் போட்டபடி வேறு ஒன்றை விமர்சனம் செய்யும் போது தனது கதையை பாட்டாளி வர்க்க கதையாக மறைமுகமாக பிரகடனம் செய்கின்றார். ஆனால் உண்மையில் பார்த்தால் இவரின் கதை எந்தவிதத்திலும் இராஜேஸ்வரியின் கதையின் உள்ளடக்க படிமானங்களைத் தாண்டியது அல்ல.
இதை அவர் இவ் விமர்சனத்தின் பின் எழுதி அம்மாவில் வெளியாகிய "க.ட.வு.ளு.ம். காஞ்சனாவும்" என்ற கதையைப் பார்ப்போம்.

கடவுளைத்தொட்டு பெண்ணின் கடந்த காலம் ஊடாக வளர்ந்த கதை கடவுளைச் சரி, பெண்ணின் ஒடுக்கு முறையை கேள்விக்கு உள்ளாக்கிய மார்க்சிய படைப்பாக உருவாக வில்லை. பட்டாளிவர்க்க கண்ணோட்டத்தில் கடவுளுக்கு எதிரான போராட்டப்பாதை கோட்பாட்டு ரீதியில் தெரியாவிட்டாலும், பெண் ஒடுக்கு முறைக்கு எதிரானபாதை கோட்பாட்டுரீதியில் தெரியாவிட்டாலும் ஒருக்காலும் யாரலும் பாட்டாளி வர்க்கப் படைப்பை படைக்க முடியாது. இதே நிலையில் தான் ஷோபாசக்தியின் படைப்பை பார்க்க முடியும். கலை அம்சத்தினை கையாள்வதில் உள்ள திறமை உள்ளடக்கத்தில் பிரஞைபூர்வமான மர்க்சிய பார்வை இன்மையால் படைப்பு பூர்ஷ்சுவா எல்லைக்குள் சோடை போய் உள்ளது.

நாம் கதையை சுருக்கமாகப் பார்ப்போம். பாரிசில் ஓரு பெண் கையை உயர்த்தியபடி பலமணி நேரம் கண்ணை முடியபடி இருக்க, பாரிஸ் தமிழ்மக்கள் ஏதோ அற்புதம் நடந்து கடவுள் வந்துவிட்டாரென நம்பி பக்திமயமாக, அதுவும் சென்ற ஒருவருக்கு அதிஸ்டசீட்டில் பலஆயிரம் கிடைக்க, பிரான்ஸ் செய்தி அமைப்புகள் செய்தியாக்க கடவுள் திகைத்துப்போகின்றார். இதன் தொடர்ச்சியில் அப்பெண் யார் எனக் கடவுள் ஆராய்கின்றார். யாழ்பாணத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட கிராமத்தில் பிறந்த இப் பெண்ணின் அப்பா முதலில் ஓர் உயர்சாதி பெண்ணை விரும்பிய போதும்,
இறுதியில் அப்பெண் சாதிக் காரணத்தால் மறுக்க அவர் அப்பெண்ணை விட உயர் சாதிப் பெண்ணை திருமணம் செய்து கொள்கின்றார். அவர்களுக்குப் பிறந்த இப்பெண் தனது தந்தை தொழிலிற்க்கு செல்லும் போது, பொலிஸ்சின் இனவெறி தாக்குதலுக்கு பலிகொடுக்கிறாள். இந்நிலையில் தாய் கூலிவேலைக்கு செல்ல இவளின் அப்பம்மாவின் தொழில், இனவெறி பொலிசார் யாழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடைகளை எரித்ததுடன் முடிவுக்கு வருகின்றது. இதன்பின் அவள் கசிப்புவிற்பதில் ஈடுபட, மருமகளுக்கு கூலி கொடுக்கும் சாக்கில் வரும் ஆசிரியர் பலாத்காரம் செய்யமுனைகின்றார். இதனால் அவள் கூக்குரல் இட்டு தன்னை பாதுகாக்க. மாமியார் இதன்பின் இவள் உடன் வந்து இருந்த காலத்தில் இறந்து போகின்றாள். முன்பு தப்பிச்சென்ற ஆசிரியர் மொட்டை கடதாசி பொலிஸ்க்கு போட்டதன் மூலம் பொலிஸ் வருகையும், அப்பெண்ணை பலாத்காரமாக வைப்பாட்டியாக பொலிஸ் அதிகாரி வைத்து இருக்கின்றான்.

இக்காலத்தில் தாயக்கும் மகளுக்கும் இடையில் ஓர் இடைவெளி மௌனமாக ஏற்படுகின்றது. இந் நிலையில் யாழ் நிலைமை மாறி இயக்க ஆதிக்கம் தொடங்குகின்றது. இதில் ஊர்திருத்த புறப்பட்ட உயர்சாதி இளையர்கள் கசிப்பு விற்கும் இப்பெண்ணை கடத்திச்சென்றபின் விடுவிக்கின்றனர். இதன் தொடர்ச்சியில் இயக்கம் வருகையும் பச்சைமட்டை அடி தொடங்குவதும். முன்னால் பொலிஸ் அதிகாரியை இவள் வீட்டுக்கு முன் வைத்து சுட்டுக்கொல்கின்றனர். அதனால் அவள் உற்சாகமாக திரிந்ததும். அவள் வீட்டுக்கு முன் இராணுவத்தை நோக்கிகாவல் இருந்த இளைஞர்களுக்கு உதவுவதும். அவ் இளைஞர்களில் ஒருவன் இவளின மகளை காதலிக்க தொடங்குகின்றான். ஒருநாள் காதலித்தவனை நோக்கி நேற்று இரவு என்னை பலாத்காரம் செய்தவர் எனக் கூறித்திட்ட, மகள் அதிர. அடுத்தநாள் தாய் தற்கொலை செய்துகொள்கிறாள்.

இதன்பின். பல்வேறு காரணத்தால் இருவர் சந்திப்பும் நடக்கவில்லை. அவன் காணாமல் போய் விடுகின்றான். பின் இப்பெண் பாரிஸ்வர கொழும்பு வந்தபோது அவனைக் கண்டுகொள்வதும் மீண்டும் காதல் தொடர்கின்றது. பின் பாரிஸ் வந்த இவள் அவன் வருகையை எதிர்பாத்து இருக்க அவன் வருவதாக பல காரணம்கூறி நாட்கள் செல்கின்றது. இந்நிலையில் இவளின் உறவினர்க்கு சந்தேகம் ஏற்பட, வேறு திருமணம் செய்யக்கோர அவள் மறுக்க. வீட்டைவிட்டு வெளியேற வேண்டியதாகிவிட்டது. இதனால் தனியாக அரசவிடுதியில் தங்கிய நிலையில். அவனின் வருகையை கேட்டறிய தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது அவன் அங்கு இல்லாமல் இந்தியா சென்றது அறிந்து எப்ப வெளிக்கிடுகிறார் எனக்கேட்க. அவர்கள் யாழ் தேர்தலுக்கு போஸ்ட்டர் அடிக்க சென்ற கதையை கூறினர்.

இதைக்கேட்டு அதிர்ந்த நிலையில். அவனின் தொலைபேசி அழைப்பு எதிர்பாராமல் இந் தியாவில் இருந்து வருகின்றது. இங்கு நடந்த வாக்குவாதத்தில் அவன் மிகமோசமான வார்த்தையால் திட்டிய நிலையில்தான் அவள் பாரிஸ்சில் கையேந்தி நிற்பதை கடவுள் கண்டுபிடித்தார். இதன் தொடர்ச்சியில் கடவுள் அவள் முன்வர, இடுப்பில் இருந்த துப்பாக்கியால நெற்றியில் பொட்டுவைத்தாள். இதன் உடன் கதை முடிந்து போகின்றது.

முதலில் கதையொரு வரலாற்று தவறை குழப்பி மூடிமறைத்துள்ளது. பச்சைமட்டை கொண்டு இயக்கங்கள் அடித்ததாக வரும்பகுதியும், துண்டுப்பிரசுரம் அடிக்க இந்தியா சென்ற பகுதியும் ஒன்றுக்கு ஒன்று முரணான செய்தியாக உள்ளது. ஏனெனின் பச்சைமட்டை மூலம் அடித்த இயக்கம் புலி எனபதும், தேர்தல் துண்டுப்பிரசுரம் அடித்த இயக்கம் துரோக இயக்கம் என்பதில் உள்ள வேறுபாடு துரோக இயக்கம்தான் பச்சைமட்டையால் அடித்த மாதிரி கதை மறைமுகமாக கூறிச்செல்கின்றது.

இக்கதை சாதாரனமாக பூர்ஷ்சுவா நிலையில் எதைப்பேசிக் கொள்வார்களோ அதையே படைப்பு மீளக்கொண்டு வந்துள்ளதுடன் அதற்கு தனிநபர் பயங்கரவாதத்தை தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ளது ஈழப்போராட்டம் எந்த அரசியல்வழியால் சீரழிகின்றதோ அதை பூர்ஷ்சுவா யதார்த்தத்தின் மூலம் விமர்சனமின்றி நியாப்படுத்தியுள்ளார். இதைப் பார்ப்போம.

முதலில் பொலிஸ் அதிகாரி மீதான மரணதண்டனை பின் அப்பெண்ணின் உற்சாகமான நடவடிக்கை மூலம் மரணதண்டனை நியாயப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு அப்பொலிஸ் அதிகாரி தண்டனைக்குரிய குற்றவாளியே. ஆனால அதைத் தனிநபர் பயங்கரவாத குட்டிபூர்ஷ்சுவா கொலைகள் மூலம் தீர்வு காணமுடியாது. மாறாக மக்கள் அரசியல்மயப்படுவதன் மூலம் மட்டும்தான் இதற்கு தீர்வுகாணமுடியும். ஏன் தண்டனை கொடுத்தவர்களே அதற்க்குள் சென்று விடுவதையும். அப்பெண்ணை பலாத்காரம் செய்யவும் தயங்காததைக் காணமுடியும். அப்பெண் சுயமாக வாழமுடியாத வகையில் இருப்பதற்க்கு சமூகக் காரணமல்லவா எல்லாவற்றிலும் அடிப்படையானது. இதைப் படைப்பு மார்க்சிய வழியில் எங்குமே கேள்விக்குள்ளாக்கவேயில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறாக பூர்ஷ்சுவா இயல்பில் அதுவும் ஆண்நோக்கில் பெண்பார்க்கப்படுகின்றாள். பெண்ணின் போராட்டம் பெண்ணின் குமுறலைக்கூட பூர்ஷ்சுவா நோக்கில் கூட படைப்பு கொண்டுவரமுடியவில்லை.

அடுத்து கடவுளை நோக்கி சுட்டசூடு எந்தவிதத்திலும் மார்க்சிய போராட்டமார்க்கமல்ல. மாறாக மிக மோசமான உணர்ச்சி வசப்பட்ட தனிநபர் பயங்கரவாதமாகும். இந்த சூட்டால் கடவுள் பக்தர்களின் பின் உள்ள நம்பிகைகள் தகர்ந்துவிடுவதில்லை. மாறாக கடவுளுக்கு எதிரான போராட்டம் பொருளுக்கும் கருத்துக்கும் இடையிலானது. இது வெடி குண்டுகளால் அல்ல சீரான கருத்துப் போராட்டத்தால் வெல்லப்படவேண்டியவை. படைப்பில் எந்த இடத்திலும் கடவுள் கோட்பாடு மீது விமர்சனம் கொண்டிருக்கவில்லை. சாதாரன சினிமாப்படங்களில் வருவது போல் கடவுளுக்கு எதிரான வடிவங்களில் தான் படைப்பு பிரதிபலித்துள்ளது. சாதராணமாக கிராமங்களில் ஆண் பேசிக் கொள்ளும் நிலப்பிரபுத்துவ வார்த்தையாடல்களால் படைப்பு வளர்ந்து, பெண்ணின் இயல்பான போராட்ட பண்பு ஆண்நோக்கில் வழமை போல் மூடிமறைத்தபடி ஆண்நோக்கில் தனிநபர்பயங்கரவாதம் நியாயப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் கடவுளை நோக்கிய மௌன தியானப் புலம்பலாக காட்டிய படிமானம், சாதராண மதவாதிகளின் மதப்போதனையை மறைமுகமாக நியாயப்படுத்தியுள்ளது. இது இன்னுமொரு வகையில் ஆண்டவனிடம் முறையிடவைக்கும் படிமானமாகவுள்ளது. அப்பெண் தனக்குள்ளும் வெளியிலும் திட்டி தீர்த்துப் போராடும் படிமானம் பேசப்படாது விடுவதன் மூலம், நிலப்பிரபுத்துவ பண்பாடு போற்றப்படுகின்றது. பெண்ணுக்குள் நடக்கும் போராட்டத்தை மறுத்து, அதற்குப் பதில் அவர்களுக்கு வெளியில் தனிநபர் பயங்கரவாதத் தீர்வு மூலம் மக்கள் போராட்டம் அடிப்படையிலேயே நிராகரிக்கப்படுகின்றது.

பெண்ணின் கடவுள் நம்பிக்கையின்மையும், ஆண்பற்றிய அபிப்பிராயமும் கருத்து போராட்டத்தில் சீராக முன்னேறமுடியுமே ஒழிய, அதிரடித் தாக்குதலால் வன்முறைச் சீரழிவைக் கொடுக்கும்.
ஏன் இக்கதையில் ஒரு சின்ன மாற்றம் செய்வோம். இப்பெண்ணின் காதலன் துரோக இயக்கத்துக்கு அல்லாது, தொழிலாளர் பாதைக்கு தேர்தல் துண்டுப்பிரசுரம் அடிக்க சென்று இருந்தால் அல்லது அவ் ஆண் மக்களுக்காக போராடியிருந்தால், இதை இப்பெண் ஏற்காத நிலையில் இப்பெண்ணின் முடிவும் கதையும் சுக்குநூறாகி விடுகின்றது அல்லவா. இங்கு குறித்த அப்பெண் வார்த்தையாடல் அவ் ஆணின் குறித்த வார்த்தையாடல் அல்ல மாறாக தொடர் செயல்பாடாக உள்ளது.

இங்கு ஆணை நோக்கிய பெண்ணின் கோரிக்கை பூர்ஷ்சுவா கண்ணோட்டம் கொண்டவை. இது மரபாந்த திருமணம் பற்றிய ஆணிய பெண்ணிய நிலப்பிரபுத்துவ ஒழுக்கத்தை அடிப்படையாக கொண்டு கதை தீர்வை நகர்த்துகின்றது. அடுத்து தாயை கெடுத்த ஆணுடன் எப்படி மகள் காதலைத் தொடர முடிகின்றது. இதன் மீதான மகளின் அபிப்பிராயம், படைப்பாளியின் மௌனம் அரசியல்ரீதியில் சந்தேகத்துக்குரியது. பச்சைமட்டையடி, மரணதண்டனை, தாய் தற்கொலை செய்யத்தூண்டும் புறக்கணிப்பு, அவள் மீதான பலாத்காரம், கசிப்பு விற்க்க வேண்டிய சமூகநிலை ..........போன்ற எவைபற்றியும் பாட்டாளி வர்க்க நோக்கு நிலையில் இருந்து பார்க்கவில்லை. ஏன் அதைகுறைந்த பட்சம் முரண்நிலையற்ற முதலாளித்துவ ஜனநாயகத்தில் கூட படைப்பு ஆய்வு செய்யப்படவில்லை. படைப்பின் ஒவ்வொரு கருவும் மார்க்சியகோட்பாட்டு தீர்வுகளால் முரன்நிலையின்றி பார்க்கக் கூடியதாய்யிருக்க வேண்டும். இதைப் பார்க்க வேண்டுமாயின் முதலில் பிரச்சனைகளை ஆராய்யக் கோட்பாட்டுரீதியில் மார்க்சியத்தை புரிந்துகொள்ளவேண்டும். இது இல்லாதபோது ஒருக்காலும் மார்க்சிய இலக்கியத்தைப் படைக்க முடியாது.

> "உற்பத்தித்திறனுள்ள மூலதனத்தின் துரிதவளர்ச்சி அதே அளவுக்குத் துரிதமாய் செல்வத்தையும் ஆடம்பரத்தையும் சமூகத் தேவைகளையும் சமூக நுகர்வின்பத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. இவ்விதம் தொழிலாளியின் நுகர்வின்பமும் அதிகரித்திருக்கிறது என்றாலுங்கூட அதனால் உண்டாகும் சமூக மனநிறைவு, தொழிலாளிக்கு எட்டாதபடி மிகமிகக் கூடுதலாகிவிட்ட முதலாளியின் நுகர்வின்பத்துடன் ஒப்பிடுகையிலும் குறைந்துவிடுகிறது. நமது விருப்பங்களும் இன்பங்களும் சமுதாயத்திலிருந்தே எழுகின்றன. ஆகவே சமுதாயத்தைக்கொண்டே நாம் அவற்றை அளவிடுகிறோமே அல்லாது, அவற்றைப் பூர்த்தி செய்ய உதவும் பொருள்களைக்கொண்டல்ல. இவையாவும் சமூகத்தன்மை வாய்ந்தவையாய் இருப்பதால், இவை ஒப்பு இயல்புடையவையாகும்."
>
> -மாக்ஸ்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர் 132 இல் தலித்தியக் குறிப்புகள் என்ற அருந்ததியின் கட்டுரை எப்படி மார்க்சியத்துக்கு எதிராக சுரண்டும் வர்க்கத்தை பாதுகாக்க முன்வைக்கப்படுகிறது எனப்பார்ப்போம்.

"தலித்தியக் குறிப்புகள் எந்த விதத்திலும் வலதுசாரித்தனத்துக்கோ எதிர்ப்புரட்சிக்கோ இட்டுச் செல்லாத வகையில் எச்சரிக்கையுடனேயே எழுதப்படுகின்றன. ஆனால் தலித்தியத்தின் தனிப்பண்புகள் இத்தகைய வரட்டுத்தனத்திற்கு (இங்கு இவர் மார்க்சியம் பேசும் சிலரை எனக் குறிப்பிடுகிறார்) பலி கொடுக்கவும் முடியாது என்பதிலும் அதே எச்சரிக்கையுணர்வு எமக்கிருக்கவேண்டும்" என்பதன் ஊடாக எப்படி மார்க்சிய அரசியலுக்கு எதிராக தலித் அரசியலை முன்வைக்கிறார் என்பதை ஆராய்வோம்

பாட்டாளிவர்க்கமும் அதன் கோட்பாடான மார்க்சியமும் எப்போதும் இயங்கியல் தன்மையைக் கொண்டது. அது சமுதாயத்தின் எல்லா முரண்பாடுகள் மீதும் எல்லா வேறுபட்ட வர்க்க நிலைகளின் செயல்கள் மீதும் வரட்டுதனத்தை கையாள்வது இல்லை. எல்லாப் பிரச்சனைகளையும் வர்க்க புரட்சியை முன்னெடுக்க அதை நோக்கி நகர்த்த சமுதாய பிளவுகள் மீது இயங்கியல் அணுகுமுறையை கையாள்கின்றது. இங்கு வரட்டுதனத்தை கையாளும் யாரும் புரட்சியை முன்னெடுக்க முடியாது ஏன் அவர்கள் மார்க்சிய வாதிகளாக எப்போதும் இருப்பதில்லை. இங்கு இந்த வரட்டுவாதத்திற்கு எதிராக மார்க்சியவாதிகள் போராடுகின்றனர். இதுதான் மார்க்சிய இயங்கியல்.

இன்று தலித் பெயரால் முத்திரை குத்தியோ (உதாரணமாக டானியல் படைப்புக்கள்) அல்லது அப்படி சிலரால் இடப்படும் இலக்கியங்கள் கலைகள் மற்றும் அனைத்தையும் ஏன் ஜனநாயக கோரிக்கைகளை பாட்டாளி வர்க்கம் ஆதரிக்கிறது. முன்னெடுக்கின்றது. பாட்டாளி வர்க்கம் தலித்தியத்துக்குள்ளும் வெளியிலும் ஏன் எங்கும் எல்லா இடமும் போராடுகின்றது. பாட்டாளி வர்க்கம் தலித்துக்குள்ள முதலாளிகள் தலித்திய பிற்போக்கு கோரிக்கைகள் தலித்துக்குள் சாதியை நிலைநாட்டும் எல்லா செயலையும் தலித்திய பிரிவுக்குள் எதிர்த்து போரடுகின்றது. அதே நேரம் சாதி ஒடுக்கு முறையை எதிர்த்தும் சாதியை கடந்த சமுக கட்டமைப்பை கோரியும் அணிதிரட்டியும் வர்க்கப் போரை முன் தன்னி தலித்துக்குள் போராடுகின்றது.

**தலித்தியம்**

சுரண்டும், சுரண்டப்படும் இரு பிளவுகளை கொண்டது

**இதை மூடிமறைக்கும் அனைத்து கோட்பாடும்**

இன்றைய சமுதாய அமைப்பை **பாதுகாப்பதே!**

www.tamilarangam.net

சாதி ஒடுக்குமுறை தீர்க்கப்பட வேண்டுமாயின் சாதியை கடந்த ஒரு சமுக அமைப்பை உருவாக்கும் ஒரே ஒரு பாதை மட்டும்தான் சாதியை ஒழித்துக்கட்டும். இதில்தான் பாட்டாளி வர்க்கமும் அதன் கோட்பாடான மார்க்சியமும் தீவிரமாக போராடுகின்றது. தலித்தியம் சாதி கட்டமைப்பை அடிப்படையாக கொண்டு நிறுவனமாக மாறுவதுடன் தனக்குள் சாதிப்பிளவை கடக்க முடியாதுமான சாதியை கடந்த சமூகத்தை கோராதுமான தனக்குள் சுரண்டும் வர்க்கத்தை பாதுகாக்கும் வகையில் முன் வைக்கும் தலித் அரசியலையும் தனக்குள்ளும் வெளியிலும் சாதிஅமைப்பை தக்கவைத்து சுரண்டும் வர்க்கத்தால் தனித்து அரசியலை கொண்டு தலைமை தங்கும் வகையில் தனக்குதான் அணைகட்டியது தான் தலித்தியம்.

முன்பு உயர்சாதிகள் கிராமங்களில் ஒதுக்குபுறத்தில் கீழ்சாதிகளை ஒதுக்கி அணைகட்டி வைத்து இருந்த சமூக கட்டமைப்பு தகர்க்க எழுந்து வரும் போரட்டத்தை காக்க இன்று தலித் அரசியல் அதையே தனக்குதான் வேலிபோட்டு செய்கின்றது. இதை தலமைதாங்கும் தனித் முதலாளிகளும் பூர்சுவா வர்க்கமும் தமது சொந்த நலன்களை பெறவும் தக்க வைக்கவும் தேவைப்படுவது தலித் அரசியல் ஊடான ஒரு சமுக அடித்தளமே. இதைதான் சுரண்டப்படும் தலித்துக்கு முன் வைப்பதன் மூலம் மொத்த சமூகத்தையும் இதை இன்றி பாதுகாக்க முனைகின்றனர் இன்றுதலித் அணிக்குள் பல சாதிகள் உள்ளதுடன் அணிக்குள் உள்ள சாதி கட்டமைவு உடைக்க முடியாத வகையில் தம்மை தாம் தீண்டதகாதவர்களாக பிரகடனம் செய்ய பார்ப்பனியத்திற்கு போட்டியாக தலித் அரசியலை பிரகடனம் செய்கின்றனர். இங்கு சாதி சங்கங்கள் சாதித் தலைவர்கள் சாதிய சுரண்டும் வர்க்கங்கள் தமது சொந்த நலனைப் பேணிக் கொள்ள சலுகை பெற இதை பயன்படுத்துகின்றன. இச் சலுகைகளில் சில எலும்புகள் மக்கள் முன் விழுந்துவிடலாம். ஆனால் அந்த மக்கள் மீளமீள அந்த சகதிக்குள் சுற்றிச் சுழல்வதுதான் தொடரும்.

அருந்ததியன் வலதுசாரிக்கோ எதிர் புரட்சிக்கோ சார்பாக அல்ல அதே நேரம் வரட்டுவாத மார்க்சியத்திற்கு எதிராக என்கிறார். நல்லது அருந்ததியன் மிக அக்கறையுடன் தலித்தை ஆய்வு செய்து எழுதும் நீங்கள் ஏன் வரட்டுவாதமாக மார்க்சியம் இருப்பதில்லை என்பதை கண்டு கொள்வதுமில்லை. இங்கு பிரச்சனை வரட்டுவாத மார்க்சியத்தை விமர்சிப்பதே ஒழிய (இங்கு அருந்ததியருக்கு இதைகாணும் அளவுக்கும் விமர்சிக்கவும் கூடியளவுக்கு தத்துவபலம் உள்ளவர் அதனால்தான் அடையாளம் காண்கிறார்) வித்தை காட்ட கூடாது. மார்க்சிய வரட்டுவாதம் விமர்சிக்கப்படின் அது சரியானது. ஆனால் அது பற்றி கூறவில்லை. மாறாக தலித் அரசியலை முன் வைக்கிறார். ஆகவே இங்கு இவர் வரட்டுவாதம் என்பது தலித் அரசியலை விமர்சிப்பதைத் தானே ஒழிய வேறு ஒன்றுமல்ல. மார்க்சிய அடிப்படை கோட்பாட்டைத் தான் இவர் வரட்டுவாதம் எனக் காட்டி தலித் அரசியலை பிரகடனம் செய்கிறார் மறைமுகமாக. அதாவது மார்க்சியத்துக்கும் வலதுசாரிதனத்திற்கும் இடையில் தலித் அரசியல் உண்டு என்பதை தான் நாசூக்காக சொல்ல முனைகிறார். இன்று உலகில் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் அதன் கம்யூனிசியத்திற்கும் நாசி மற்றும் பாசிசத்திற்கு இடையில் உள்ளதாக காட்டுவதை அருந்ததியன் வலதுசாரிக்கும் வரட்டு மார்க்சியத்துக்கும் இடையில் தலித் அரசியலை முன் வைக்கிறார்.

இந்த தலித் அரசியலை பின் நவீனத்துவவாதிகள் தான் அடையாளப்படுத்தி கோட்பாட்டு வடிவம் கொடுக்க தலைகீழாக நிற்கின்றனர் இதே சரிநிகர் பின் நவீனத்துவவாதியான ஜெகத்வீரசிங்ஹவின் ஒரு கூற்றை எடுத்துப் பார்ப்போம். "*இந்த சமூகத்தின் முரண்பாடுகள் புரட்சியால் முடிவுக்கு வரும் என்று மாக்சியமும் கம்யூனிசமும் நம்பின. அவை நடைமுறைச் சாத்தியமற்ற கற்பனைபூர்வமான விடையை (utobian) வரலாற்றுக்கு அளிக்க முயன்றன. ஆனால் இது நம்பமுடியாத முரண்பாடு என்பது யதார்த்தத்தின் தவிர்க்க முடியாத ஒரு பக்கம் நீங்கள் இந்த முரண்பாடுகளின் உயர் வலுவைக் குறைக்கலாமே ஒழிய இவற்றை தீர்க்கமுடியாது.*" என்று இந்த பின் நலினத்துலவாதி இந்த சமூக ஒழுங்கை பாதுகாக்க கூறிய போது அருந்ததியன் உயர்த்தும் தலித் அரசியல் எந்தளவு அழகாக பொருந்திவிடுகிறது.

'முரண்பாடு தீர்க்கமுடியாதது' அது முடிவு அற்று தொடரும் கம்யூனிசம் முரண்பாட்டை கடக்கும் மனிதநலன் நேசித்த போதும் அது பொய்யான பொட்டல் காடு என்கிறார் பெண் விடுதலையா? சுரண்டல் ஒழிப்பா?------எல்லாம் கற்பனையினால். இம்முரண்பாடு கற்பிதமானது ஒருக்காலும் தீர்க்க முடியாது. குறைக்கலாம் எனவே சீர்திருத்த போராட்டத்தை மட்டும் எடுங்கள். மாற்றுவோம் என கூறி வர்க்கப்போரை எடுப்பது விடுதலையல்ல என்ற நம்பிக்கையீனத்தை விதைத்து அதில் இந்த ஏகாதிபத்திய உலக மாயமாதலை பாதுகாக்க எச்சில் ஒழுக ஏகாதிபத்தியத்துக்காக அழுகிறார். அதாவது தலித் அரசியல் கூட சாதியை கடக்கமுடியாது தான் சலுகை கோரியே நாம் பிழைப்போம் என்பதை கூறத்தான் தலித் அரசியல் என்ற சாக்கடையை முன் தள்ளுகின்றனர். இது இன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதை பாதுகாக்கின்றது எனப்பார்ப்போம். இன்றைய உலகமயமாதல் சுரண்டல் அமைப்பை பாதுகாக்க சாதி ஆதிக்கத்தை பாதுகாக்க ஆணாதிக்கத்தை பாதுகாக்க-----தலித் அரசியல்வித்தை தேவைபடுகின்றன. இதை எதிர்த்து போராடுவதை தடுக்க சமூகத்தை பிளந்து முன்வைத்து இருக்கும் தலித் அட்டவணையைப் பார்ப்போம்.

| | தமிழ் | தலித் | பெண் | வர்க்கம் |
|---|---|---|---|---|
| தமிழ் | | X | | |
| தலித் | X | X | X | X |
| பெண் | | X | | |
| வர்க்கம் | | X | | |

இந்த வரைவை தலித் வரைவு என்கின்றனர். அதாவது இது சுரண்டும் வர்க்க அட்டவணையே ஒழிய ஒன்றுமல்ல. இல் வரைவு ஒடுக்கப்பட்ட மக்களை அடையாளபடுத்தி விடாது மாறாக இன்றைய உலக ஒழுங்கை பாதுகாக்க சாதி தலை வர்க்கங்களிலும் சுரண்டும் வர்க்க ஆதிக்கத்தையும் பாதுகாக்க முன்வைத்த இந்த வரைவை நாம் விரிப்போமாயின் இதன் கபடம் அம்பலமாக நிதர்சனமாகி விடுவதை கீழ் உள்ள வரைவு மூலம் காணமுடிகிறது.

| | தமிழ் முதலாளி | தமிழ் பாட்டாளி | தலித் முதலாளி | தலித் பாட்டளி | பூர்சுவா பெண் | பாட்டளி பெண் | சுரண்டு வோர் | சுரண்டப் படுவோர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் முதலாளி | | | X | | | | | |
| தமிழ் பாட்டாளி | | | | * | | | | |
| தலித் முதலாளி | X | | X | | X | | X | |
| தலித் பாட்டாளி | | * | | * | | * | | * |
| பூர்சுவா பெண் | | | X | | | | | |
| பாட்டாளி பெண் | | | | * | | | | |
| சுரண்டு வோர் | | | X | | | | | |
| சுரண்டப் படுவோர் | | | | * | | | | |

அருந்ததியன் தலித் வரைவை நாம் பிரிக்கும் போது பிளவுபட இரு வேறு நலன் கொண்ட சுரண்டும் சுரண்டப்படும் இரு திட்டவட்டமான பிளவுகளை மேல் உள்ள வரைவு காட்டுகிறது தலித் அரசியலும் அதை ஒட்டிய தலித் வரைவையும் சுரண்டும் வர்க்கப்காப்பினதே ஒழிய சுரண்டப்படும் வர்க்கசார்பினது அல்ல தலித் வரைவு ஒடுக்கப்பட் மக்கள் சார்பானதுமல்ல மாறாக ஒடுக்குபவன் சார்பானது என்பதை வரைவு தெளிவாக்குகின்றது. இந்த வரைவு திட்டவட்டமாக இருபிளவுகளை இனம் காட்டுகின்றது இந்த வரைவு உள்ள வரை தலித் என்பது சுரண்டும் வர்க்க தலைமையில்தான் இருக்கமுடியும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான வரைவு எப்படியிருக்க முடியும் என்பதை நாம் கீழ் தருகின்றோம்.

இதுதான் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான வரைபு. இதற்குள் சுரண்டும் நலன் இருப்பது இல்லை. இவை ஒன்றுடன் ஒன்று எல்லாத்துறையிலும் கலக்கின்றன. இவ்வரைபு சாதியைக்கடக்கின்

www.tamilarangam.net

றது. ஆணாதிக்கத்தை ஒழிக்கின்றது. உலக மக்களை ஒன்றாக்குகின்றது. இனத்தைக்கடக்கின்றது.

| | தமிழ் பாட்டாளி | தலித் பாட்டாளி | பாட்டாளி பெண் | பாட்டாளி வர்க்கம் | உலகப் பாட்டாளி | இந்திய பாட்டாளி |
|---|---|---|---|---|---|---|
| தமிழ் பாட்டாளி | | | | | | |
| தலித் பாட்டாளி | | | | | | |
| பாட்டாளி பெண் | | | | | | |
| பாட்டாளி வர்க்கம் | | | | | | |
| உலக பாட்டாளி | | | | | | |
| இந்திய பாட்டாளி | | | | | | |

வரைபைப் பொறுத்த வரையில் இது மட்டும் தான் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தீர்வைத் தருகின்றது. தலித் வரைபு உண்மையில் ஒடுக்கப்பட்ட மக்கள்மீது ஆதிக்கத்தைப் பாதுகாத்து வைத்து இருக்க முன்வைக்கும் தலித் அரசியல் தான் என்பதைக் காட்டுகின்றது.

தலித் அரசியல் வர்க்கம் கடந்த சுயேட்சையானது அலல. அது இடது வலது சாரித்தனத்துக்கு இடைநடுவில் தொங்க முடியாது. இதில் நிச்சயமாக ஒன்றை பிரதிநிதித்துவம் செய்தேயாக வேண்டும். அப்போது இது இரண்டாக பிளந்து போகும். (வரைபில் காட்டியது போல்) இன்று பின் நவீனத்துவ வாதிகள் தமது ஏகாதிபத்திய கோட்பாட்டை முன்தள்ள, அதில் தாலாட்டுப் பெற்று வளரும் தலித்தியம், இன்றைய உலக ஒழுங்கை பாதுகாக்க முன் வைக்கப்படும் எதிர்ப்புரட்சி கோட்பாடு தானே ஒழிய வெளியில் அல்ல.

தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னுள்ள பிரச்சனை சாதியைக்கடக்க சாதியமைப்புக்கு எதிராகப் போராடியபடி, அனைத்து மக்களுடன் ஒன்றிணைந்து போராடுவதேயாகும். சாதியமைப்பு என்பது சுரண்டலை அடிப்படையாகக் கொண்டு கட்டியமைக்கப்பட்டது என்பதை சரியாக அடையாளப் படுத்தியபடி, இதை தகர்க்க சுரண்டலை எதிர்த்த போராட்டத்தினூடாக, சாதீய பொருளாதார உறவுகளை, பண்பாடுகளை, சுரண்டலை தகர்த்து எறிய முன்வருவதுமேயாகும். உலகில் எல்லா முரண்பாடுகளையும் களைந்து எறிய ஒரு மனிதன், எப்படி போராட முனைகின்றானோ, அதே பாதை தான் மிக அடிநிலையில் உள்ள சாதிப்பிரிவு மக்களின் பாதையுமாகும். அதைவிடுத்து பிறபோக்கு ஆதிக்க அடையாளத்தை மீளவும் கோருவதும், தக்கவைப்பதன் ஊடாக கிணற்றுத் தவளையாக இருந்து கத்தக்கோருவதுமல்ல. கிணற்றை விட்டு வெளியில் வருவதும், வெளியில் உள்ளோருடன் ஒன்றிணைவதும் தான் சாதிக்கட்டமைப்பை உடைக்க ஒரே ஒரு பாதையுமாகும்.

தலித் என்பது அதன் அரசியல் என்பதும் முரண்பாடுகளைக் கடக்க முடியாது என்ற பின் நவீனத்துவம் விதைத்த நச்சுக்காளான்கள் தான். இது அழிக்கப்பட வேண்டும். இது தான் பயிரைப் பாதுகாக்கும் ஒரே ஒரு பாதையுமாகும். o





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரான்சில் மீள எழுச்சி பெற்று வரும் வர்க்கப்போர்



வர்க்க சமுதாயத்தில் மக்கள் உள்ளவரை கமியூனிசம் மறையாது மடியாது. 1968 ல் எழுந்த மாணவர் போராட்டமும் அதை தொடர்ந்து 90 லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அப்போராட்டம் அரசியல் ரீதியில் தோல்விபெற்றபோது கலாசார ரீதியில் ஒரு பாய்ச் சலைக்கண்டது. தொடர்ச்சியாக வர்க்கபோராட்டத்தை தடுக்க கலாசார தளத்திலும் கோட்பாட்டுத் தளத்திலும் பல வண்ண எதிர்க் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. இதனால் வர்க்கப்போராட்டமும் அதன் வீரம்மிக்க எழுச்சிகளும் பின் தள்ளளப்பட சர்வதேச நிலமை மேலும் ஊக்கியாக அமைந்தன.

ஆனால் பிரஞ்சு மக்கள் தமது தொலைந்துபோன வர்க்கபோராட்ட வரலாற்றை தொடங்கிவிட்டனர்.

1995 இல் நடந்த பாரிய வேலைநிறுத்தமும். 1996 இல் நடந்த லொறி சாரதிகளின் போராட்டத் தின் தொடர்ச்சியில் 1997 டிசம்பர் முதல் வேலையற்றோர், வேலையின்மைக்கு எதிராக எழுந்து போராடத்தொடங்கினர். 70 லட்சம் வேலையற்று உள்ள நிலையில் அவர்களை அணிதிரட்டிச் செல் லும் வகையில், அரசு காட்டி வரும் பொய்யான எண்ணிக்கையை அம்பலப்படுத்தியும் பிரஞ்சு மக் களை முழுமையாக தம்பக்கம் திருப்பியும் போராட்டத்தை அரசியல் தளத்திற்குள் நகர்த்தினர். எல் லாகட்சிகளும் கைவிட்டு எதிர்த்த நிலையில். எல்லா தொழிற்சங்கங்களும் எதிர்த்த நிலையில் போராட்டத்திற்கு எதிரான அவதூறுகளை மீறி இப் போராட்டம் பரந்துபட்ட மக்களின் ஆதரவை பெற்ற போது எல்லா பிழைப்புவாத அரசியல் பித்தலாட்டவாதிகளும் மூக்கில் கைவைக்கத்தான் முடிந்தது.

போலிக்கமியூனிச கட்சி, பச்சைகட்சியும் நடிக்க முடியாத அளவுக்கு அதன் வேடமும் அம் பலமாகியது. மார்கஸ் எங்கெல்ஸ் உருவாகிய CGT என்ற தொழில் சங்கத்தின் இன்றைய துரோக வரலாற்றை மீறி, இன்று அதற்குள் இருந்த புரட்சிகர பிரிவுகள் போராட்டத்தை ஆதரித்தும் .பங்கு கொண்ட நிலையில் வேறு வேலையற்ற அமைப்பு பிரதிநிதிகள் தலைமைதாங்க இப் போராட்டம் வெடித்தது. இப்போராட்டத்தை முன்னெடுத்தோர் முதலில் வேலை வழங்கும் அலுவலகத்தையும் அதை ஒட்டி நிதி வழங்கும் அலுவலகங்களையும் கைபற்றினர். நிதி வழங்கும் பிரிவு தனியார்க்கு குத்தகை அடிப்படையில் விடப்பட்டு சூறையாடப்படும் இன்றைய நிலையில் அதிக அளவு வெட்டி குறைப்பை அரசு தனியார் ஊடாக ஊக்குவிக்கின்றது. இப் போராட்டத்தில் விடாப்பிடியான கைப்பற் றுதலும் நீண்ட கால தக்க வைத்தலை தொடர்ந்து போலிக்கமியூனிச கட்சியை உள்ளடக்கிய சோஷலிச அரசு பொலிஸை அனுப்பி பலாத்காரமாக ஒடுக்கி வெளியேற்றினர்.

இதை தொடர்ந்து வீதி ஆர்பாட்டங்கள் நகரத்திற்கு நகரம் தொடர்ச்சியாக நடத்தப்பட்டதுடன். திடீர் என போராட்டம் பாய்சல் கண்டது. இந்த வகையில் சர்வதேச பன்னாட்டு முதலாளிகளின் தலைமை அலுவலகங்கள். உலக பங்கு சந்தை மையங்களை கைப்பற்றி ஆவணங்களை அழித் தல் என தொடங்கியது. முதலாளிகள் - அரசியல்வாதிகள் கூத்தடிக்கும் விருந்து மண்டபங்களில் திமர் எனபுகுந்து உணவைக் கைப்பற்றுவது பணக்காரர் உண்ணும் உணவகங்களில் புகுந்து அதேபோன்று உண்ணவேண்டும் என ஆர்பாட்டம் செய்வது, மிகப்பெரிய சுப்பர்மார்க்கற்றுக்குள் புகுந்து உணவு வேண்டும் என கூறி உணவை கைப்பற்றுவதும். மிகப்பெரிய அறிவுஜீவிகளையும், அரசியல்வாதிகளையும் உருவாக்கும் பல்கலைக்கழகத்தை ஒருபகுதி மாணவர்களின் ஆதரவுடன் கைப்பற்றி ஆர்ப்பாட்டம் செய்வது என போராட்டம் விரிவு அடைந்தது.

இதன் தொடர்ச்சியில் போராட்டத்தை ஜேர்மனி மற்றும் அய்ரோப்பிய நாடுகளுக்கும் அங்கு உள்ள வேலையற்றோருடன் இணைந்து நடத்தினர் நடத்துகின்றனர்.

அரசு எச்சிலாக 100 கோடி பிராங்கை விசேட நிதியாக அறிவித்த அதே நேரம். அரசு பிரஞ்சு அரசு வங்கி சிறிது காலத்தில் கணக்கில் காட்டமுடியாத 15.000 கோடி பிராங்கை வழங்கும் வெட் கக்கேடான கொள்ளையை அம்பலப்படுத்தி. சோசலிஷ தலைமையலுவலகம், கைப்பற்றி அங்கு இருந்த ஆவணங்களை தீவைத்து எரித்து அங்கு ஏற்றி இருந்த கொடியை அகற்றி. கழிவுகள் கொண்டு அலுவலகத்தினை கழிவாக்கினர். இந்நிலையில் இரட்டிப்புக்கும் முகமறைப்புக்கும்

www.tamilarangam.net

தொடர்ச்சியான அரசியல் தொழில் சங்க எதிர்ப்பிரச்சாரத்துக்கும் மத்தியில் இப்போராட்டம் முன்னேறிய அதே நேரம் தமக்கு கிடைத்த எல்லா பிரச்சார ஊடகங்களில் எல்லா முதளாளித்துவ பன்றிகளின் எச்சில்தனத்தையும் சர்வதேச அளவில் நடத்தும் சூறையாடலையும் அம்பலப்படுத்தினர். அத்துடன் உலகமயமாதல் என்பது அடிக்கடி சந்திக்குகொண்டு வரப்பட்டு நிர்மாணமாக்கப்பட்டதுடன் அய்ரோப்பிய மயமாதலின் பின் உள்ள ஏகாதிபத்திய நோக்கம் கிழித்துக்காட்டப்பட்டது.

இந்நிலையில் வர்க்கப்போராட்டம் தீவிரம் அடைய அடைய ஸ்டாலின் மீதான எதிர்தாக்குதல் தீவிரமாக செய்தி ஊடகங்கள் செய்வதன் ஊடாக, வர்க்கப்போராட்ட தலைவர்களை தாக்குவதன் ஊடாக வர்க்கப்போராட்டம் மீது மறைமுகமாக எதிர்தாக்குதல் நடத்தினர். இந்நிலையில் இப்போராட்டம் எல்லா அரசியல் செயற் தளத்தையும் தொழிற்சங்க தளத்தையும் அம்பலப்படுத்தியுள்ளது மிகமுக்கியமான சிறப்பான அம்சமாகும். இன்று பிரான்சில் மிக மோசமான வறுமையில் 60 லட்சம் மக்கள் வாழ்வுடன் இவர்களின் மாதவருமானம் 3000 பிராங்கைவிட குறைவாகும். இன்று பிரான்சில் 50% உழைக்கும் மக்கள் 7300 பிராங்குகளை விட குறைவாக பெறுகின்றனர். இதில் அடிப்படைச் சம்பளத்தை விட குறைவாக பெறுவோர் 28 லட்சம் பேர் ஆவர். இதில் பெண்கள் 78.8 % பேர் ஆவர். பிரான்சில் அதிகுறைந்த சம்பளத்தை பெறுவோர் 1993 இல் 39 வீதமாகவிருந்து இன்று 1997 இல் 48 வீதமாக அதிகரித்துள்ளது. பகுதிநேர வேலைசெய்வோர் 83இல் 2 வீதமாக இருந்து 96இல் 5வீதமாக அதிகரிக்க இதில் பெண்களின் வீதம் 20 வீதத்திலிருந்து 30 வீதமாக அதிகரித்துள்ளது. அதிகுறைந்த அடிப்படை சம்பளத்தை பெறுவது 1983 இல் 11.4 வீதமாகவிருந்து 1996 ல 15.1 வீதமாக மாறி உள்ளது. அதே நேரம் அதி குறைந்த குடும்ப வருமானத்தைபெற்றோர் 1983 ல 5 வீதமாக இருந்து 1996 இல் 10.1 வீதமாக மாறியுள்ளது.

<u>பிரான்சில் குடும்ப வருமானம் வருடத்தில்</u>

| மக்கள் தொகையில் | வருடாவருமானம் பிராங்கில் |
|---|---|
| 13.7 வீதம் | 50.000 குறைவு |
| 12.8 .. | 50.000 -70.000 |
| 19.6 .. | 70.000 -100,000 |
| 21.1 .. | 1,00,000-1,50,000 |
| 8.2 .. | 1,50,000-2,00,000 |
| 5.8 .. | 2.00,000 கூட |
| 14.7 .. | முடிபு இல்லாதது |
| 4.1 .. | கணக்கு தெரியாது |

இதை விட பிரான்சில் 416 குடும்பங்களின் சொத்து பெறுமதி 1995 இல் தனித்தனியாக 10 கோடிக்கு அதிகமாகும். இவர்களின் மொத்த சொத்தின் பெறுமதி 49.952. கோடி பிராங்காகும் இப்படிச் சமுதாயம் பாதாள வேறுபாட்டில் உள்ளது. இந்த பிளவுக்குள் தான் பிரான்சின் ஜனநாயகமும் அதற்கு எதிரான போராட்டமும் வெடித்தெழுகின்றது.

இன்று அய்ரோப்பிய வேலையின்மை உத்தியோக பூர்வ புள்ளிவிவரப்படி இரண்டு கோடிப் பேர் ஆவர். ஆனால்இதன் எண்ணிக்கை 4 கோடியாக உள்ளது.

<u>அய்ரோப்பிய வேலையின்மை உத்தியோகபூர்வப்படி.</u>

| | | | |
|---|---|---|---|
| ஸ்பானியா | 22.3 வீதம் | ஜேர்மனி | 9 வீதம் |
| பின்லாந்து | 16.0 வீதம் | இங்கிலாந்து | 8.3 வீதம் |
| அயர்லாந்து | 12.6 வீதம் | போத்துக்கல் | 7.4 வீதம் |
| இத்தாலி | 12.1 வீதம் | டென்மார்க் | 7.4 வீதம் |
| பிரான்சு | 12 வீதம் | ஹொலண்ட் | 6.2 வீதம் |
| சுவீடன் | 10 வீதம் | ஒஸ்ரிஸ் | 4.5 வீதம் |
| பெல்ஜியம் | 9.6 வீதம் | லுக்சம்பேர் | 3.2 வீதம் |

அய்ரோப்பிய சராசரி வேலையின்மை 10.9 வீதமாக உள்ளது. இந்த வகையில் அய்ரோப்பிய சமூகம் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. இந்நிலையில் நாசிக்கட்சி ஒரு புறம் வளர்ச்சி பெற மறுபுறம் வர்க்கசக்திகள் விழிப்புறுவதும் போராடுவதும் நிகழ்வாக உள்ளது. வர்க்க போராட்ட வரலாறு தன்னை மீள மீட்டு எடுக்கும் பாதை மட்டும்தான் 3ம் உலகயுத்தத்தை தடுக்க இன்று உள்ள ஒரேபாதையாக உள்ளது.

இன்று எழுந்து வரும் போராட்டங்கள் அதன் போர்க்குணம் கொண்ட வீச்சு உலகபுரட்சியின் அங்கமாக உள்ளதுடன் அதற்கான சரியான அரசியல் வர்க்கபார்வையை வழங்கும் என்ற நம்பிக்கைளை தொடர்ச்சியான போராட்ட போக்கு இனம் காட்டுகின்றது. அந்த வகையில் நாம் வர்க்க சக்திகளுடன் இணைவதும் அதற்காக குரல் கொடுப்பது எம் வரலாற்றுக் கடமையாகும். ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் - பிரான்ஸ்



TAMIL REFUGEELITERATURE CENTRE - FRANCE
JULY 1998

"samar"

87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-
SEINE
FRANCE

"Samar"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்